# சட்டக்கதிர்

சட்ட மாத இதழ்

SATTAKADIR TAMIL MONTHLY

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அறங்கூறாயங்கள் அறமே செய்யட்டும்"

25 SILVER JUBILEE 1992 - 2016-17 வெள்ளி விழா ஆண்டு

ஜூன் 2026 | ஆனித் திங்களிதழ் | விலை ரூ.75/-

Vol - 34 | June - 2026 | Issue - 8 | Price Rs.75/-

Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026


SATTAKADIR


- தமிழ்நாட்டில் புதிய அரசாங்கம் – தலையங்கம்
- 'அரசு ஒரு முன்மாதிரியான முதலாளியாக இருக்க வேண்டும்' முந்தைய உத்தரவுகள் இருந்தபோதிலும் இஸ்ரோ ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்யாததற்காக விமர்சித்து உச்ச நீதிமன்றம் உத்தரவு – இந்திய உச்சநீதிமன்றம்
- வாடகை வசூலிப்பும் அதில் நீதிமன்றப் பங்கும் – இந்திய உச்சநீதிமன்றம்
- தடுப்பு காவல் கைதியின் முறையீட்டை அரசு கூடிய விரைவில் பரிசீலிக்காததால் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல் உத்தரவு ரத்து – இந்திய உச்சநீதிமன்றம்
- உயிலில் சான்றுரைப்பவர் இல்லாதது அல்லது கிட்டாமை அமினாவை விசாரித்தல் மூலமாக நிரூபிக்கப்பட வேண்டும். – சென்னை உயர்நீதிமன்றம்
- புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான சட்டச் சிக்கல்கள் உண்மைகள் சார்ந்தவை என்பதால், அவற்றை வழக்கின் முழு விசாரணைக்குப் பின்னரே தீர்மானிக்க முடியும் – சென்னை உயர்நீதிமன்றம்
- அறிவுசார் சொத்துரிமை உருவாக்கமா? அல்லது நீதித்துறை வரம்புமீறலா? இந்தியாவின் தனித்துவ உரிமைகள் சார்ந்த சிக்கல் – நொயோனிகா கர்


## முக்கிய தீர்ப்புகள் - சட்ட விளக்கங்கள்


ஆசிரியர் : டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

www.sattakadir.com http://epaper.sattakadir.com


VIT
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)
FIND YOUR FUTURE
Education opens up the mind and allows you to improve your life in so many ways.
At VIT, we believe it is crucial to provide students with an environment that positively influences their thoughts, stimulates their interest and encourages learning in different settings. Our programmes are structured in line with the changing times. Our faculty and infrastructure are geared to be future ready. And, our students learn and imbibe lifelong values that equip them to be futuristic.
VIT
VELLORE INSTITUTE OF TECHNOLOGY
www.vit.ac.in vituniversity VIT_univ vellore-institute-of-technology vellore_vit VITUniversityVellore

# சட்டக்கதிர்

**தமிழ்நாடு அரசு விருது பெற்ற இதழ்**

**ஜுன் 2026** http://epaper.sattakadir.com **ஆனித் திங்கள் இதழ் 2026**


**பொருளடக்கம்**


| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாட்டில் புதிய அரசாங்கம் | – தலையங்கம் | 5 |
| 2. | ‘அரசு ஒரு முன்மாதிரியான முதலாளியாக இருக்க வேண்டும்’ முந்தைய உத்தரவுகள் இருந்தபோதிலும் இஸ்ரோ ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்யாததற்காக விமர்சித்து உச்ச நீதிமன்றம் உத்தரவு | – இந்திய உச்சநீதிமன்றம் | 8 |
| 3. | வாடகை வசூலிப்பும் அதில் நீதிமன்றப் பங்கும் | – இந்திய உச்சநீதிமன்றம் | 18 |
| 4. | தடுப்பு காவல் கைதியின் முறையீட்டை அரசு கூடிய விரைவில் பரிசீலிக்காததால் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல் உத்தரவு ரத்து | – இந்திய உச்சநீதிமன்றம் | 30 |
| 5. | உயிலில் சான்றுரைப்பவர் இல்லாதது அல்லது கிட்டாமை அமினாவை விசாரித்தல் மூலமாக நிரூபிக்கப்பட வேண்டும். | – சென்னை உயர்நீதிமன்றம் | 32 |
| 6. | காலதாமதத்தை மன்னித்து மறுதரப்பில்லா தீர்ப்பை ரத்து செய்ததோடு ரூ.60,000/- செலவுத் தொகை மனுதாரருக்கு வழங்க உத்தரவு | – சென்னை உயர்நீதிமன்றம் | 40 |
| 7. | முகமதிய சட்டமும் சொத்து பங்கீடும் | – சென்னை உயர்நீதிமன்றம் | 46 |
| 8. | புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான சட்டச் சிக்கல்கள் உண்மைகள் சார்ந்தவை என்பதால், அவற்றை வழக்கின் முழு விசாரணைக்குப் பின்னரே தீர்மானிக்க முடியும் | – சென்னை உயர்நீதிமன்றம் | 52 |
| 9. | நீதிமன்றத்தில் ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டு பின்னர் அதே நீதிமன்றத்தின் ஆள்வரையை மறுப்பது நிலையுறுத்தத்தக்கதல்ல... | – சென்னை உயர்நீதிமன்றம் | 57 |
| 10. | தந்தை வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில், சிபிசி பிரிவு 47-ன் கீழ் வாரிசுதாரர் தொடர்ந்த மனு தள்ளுபடி; முறையான சுவாதீன உரிமை கோரலுக்கு கட்டளை 21 விதி 97-ஐப் பயன்படுத்த அறிவுரை. | – சென்னை உயர்நீதிமன்றம் | 62 |
| 11. | அறிவுசார் சொத்துரிமை உருவாக்கமா? அல்லது நீதித்துறை வரம்புமீறலா? இந்தியாவின் தனித்துவ உரிமைகள் சார்ந்த சிக்கல் | – நொயோனிகா கர் | 66 |
| 12. | மாநிலங்களவை கட்சித் தாவல்கள், அரசியலமைப்பு சார்ந்த கேள்விகள் | – வஞ்சாஜ் ஆசாத் | 69 |
| 13. | 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு (திரைப்படங்கள் தொடர்பான விளம்பரப் பொருட்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல்) சட்டம் | – த.நா. மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் | 72 |
| 14. | 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு உயிரோடு நபர் ஒருவரைப் புதைக்கும் சடங்கினையும் பழக்கத்தினையும் தடை செய்யும் சட்டம் | – த.நா. மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் | 79 |

## சட்டக்கதிர்

**ஆசிரியர் வெளியிடுபவர்:**
முனைவர் வே.இரா.சே.சம்பத்

**சிறப்பு ஆலோசனைக் குழு:**
**மூத்த வழக்கறிஞர்கள்:**
திரு.ஆர்.காந்தி, திரு.ஆர்.விடுதலை
திரு.ஆர். சண்முகசுந்தரம்,
டாக்டர் எ. தியாகராஜன்

**சட்ட/தமிழ் வல்லுநர்கள்:**
டாக்டர் ஆர். மீனாட்சி சுந்தரம்
முனைவர் மு. முத்துவேலு

**வழக்கறிஞர்கள்:**
திரு. டி.வீரசேகரன், திரு.வி.இரவி
திரு. சரவணன் தனபால், திரு.எஸ். நாகநாதன்
திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி
திருமதி டி. ஸ்ரீதேவி, திரு. எஸ். பாலமுருகன்

**சென்னை உயர்நீதிமன்றத் தொடர்பாளர்:**
திரு.ஏ.என்.புருஷோத்தம், வழக்கறிஞர்

**டெல்லி உச்சநீதிமன்றத் தொடர்பாளர்:**
திருமதி இந்திரா, வழக்கறிஞர்

**மொழி பெயர்ப்பாளர் குழு:**
திருமதி ஓ.பா.சாந்தி, மதுரை திரு.எஸ்.சம்பத்
திரு.து. முத்துசாமி, வழக்கறிஞர்
திரு.பா.ஞானசேகரன், திரு.மா.வெற்றிவேல்

**அலுவலகப் பணிக்குழு:**
முனைவர் ச. அரவிந்தன்
முனைவர் ச. அழகிரி
திரு. டி.கே.எஸ். மணிவண்ணன்
திரு. கதிரவன் வெங்கடேசன்

**வடிவமைப்பு:** வாசன் அச்சகம், சென்னை


| சந்தா விவரம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | ₹ 75 | US $ 3 |
| ஆண்டுச் சந்தா | ₹ 900 | US $ 25 |
| வாழ்நாள் சந்தா | ₹ 10,000 | US $ 250 |
| காப்பாளர் சந்தா | ₹ 25,000 | US $ 500 |

சந்தாத் தொகையைச் ''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque)**, வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சந்தாத் தொகையைப் பணவிடை **(Money Order)** மூலமாக அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரத்திற்கான விவரத்தையும் தொகையையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்க.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
தொலைபேசி 91-44-24953915 / 24620198
தொலைநகல் 91-44-24959515
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


## சட்டக்கதிர் வெளியீடுகள்

சட்டக்கதிர் ஆண்டுத் தொகுப்பு
(12 இதழ்களைக் கொண்ட தொகுப்பு) ரூ.1200/-

நீதிமன்றங்களில் தமிழ் ரூ.500/-

தமிழ்நாட்டில் நீதிமுறைகள் (அச்சில்) ரூ.500/-

அறிஞர்களின் பார்வையில் அண்ணா ரூ.500/-

தமிழர் தமிழ்நாடு சமூக பொருளாதார வளர்ச்சி ரூ.500/-

சட்டமும் சமுதாயமும் (அச்சில்) ரூ.150/-

சென்னையிலிருந்து உலகை நோக்கி ரூ.200/-

உன்னுள் என்னைப் பார் ரூ.150/-

உலகெங்கும் கலைஞர் ரூ.300/-

"International Conference of Tsunami, Disaster Management and Coastal Development Report" (English) Rs.500/-

''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக்
காசோலை **(Cheque)**,
வங்கி வரைவுக் கேட்போலை **(DD)**
மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி
நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


**சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம். சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி தடங்கலின்றி இதழ்கள் கிடைக்கப் பெறுவீர்!**

# சட்டக்கதிர்

"முன்னேற்றமே எங்கள் பேச்சு – உயர்
முத்தமிழே எங்கள் மூச்சு"

ஆனித் திங்கள் இதழ்

சட்டம் – 34 ஜுன் 2026 கதிர் – 8


## தமிழ்நாட்டில் புதிய அரசாங்கம்

நடந்து முடிந்த மாநில சட்டமன்ற தேர்தலில் எந்தவொரு கட்சியும் அறுதி பெரும்பான்மை பெறாமல் தொங்கும் சட்டமன்றமாக அமைந்தது. ஆனால் அதேநேரத்தில் தனிப்பெரும் பெரும்பான்மை கட்சியாக தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்று முதன்மை கட்சியாக உருவெடுத்தது. பத்து இடங்கள் குறைவாக பெற்றதினால் ஆட்சியமைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. வேறு எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத காரணத்தினால் தமிழக வெற்றிக் கழகம் திமுக அணியில் வெற்றி பெற்ற காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPIM), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI), விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய முஸ்லீம் லீக் கட்சி ஆகிய 13 உறுப்பினர்கள் ஆதரவுடன் அக்கட்சியின் தலைவர் திரு.ஜோசப் விஜய் தலைமையில் புதிய அரசு பதவியேற்றது. அதற்கு பிறகு சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்று புதிய அரசு அமைந்ததுள்ளது.

தமிழ்நாட்டு மக்களின் மொழியாகவும் தமிழ்நாடு அரசின் ஆட்சி மொழியாகவும் தமிழை உயர்நீதிமன்றத்திலும், கீழமை நீதிமன்றத்திலும், அரசு துறைகளிலும் முழுமையாக பயன்படுத்த முந்தைய அரசுகள் செய்த பணியைப் போலவே தமிழை எல்லா நிலைகளிலும் குறிப்பாக உயர்நீதிமன்றத்திலும் தமிழை வழக்கு மொழியாக கொண்டு வர வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு.ஜோசப் விஜய் அவர்களிடம் தமிழக மக்களின் சார்பில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய்க்கு அவர்களுக்கும் அவருடைய அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களுக்கும் புதிதாக அமைந்த அரசாங்கத்திற்கும் சட்டக்கதிர் சார்பில் எங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக அமைச்சரவையில் முதல் அமைச்சர் விஜய் உள்பட 33 அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட இலாக்காக்கள், அவர்கள் போட்டியிட்ட வெற்றி பெற்ற தொகுதிகள் விவரம்

## தமிழக அமைச்சர்கள் பட்டியல்

1. **முதல் அமைச்சர் விஜய்** (பெரம்பூர்) – பொது, பொது நிர்வாகம், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர்கள் போலீஸ், உள், சிறப்பு திட்ட செயலாக்கம், சிறப்பு முயற்சிகள், வறுமை ஒழிப்பு மற்றும் ஊரகக் கடன், இளைஞர் நலன், குழந்தைகள், வயதானோர், மாற்றுத் திறனாளிகள் நலன், நகராட்சி நிர்வாகம், நகர்ப்புறம் மற்றும் குடிநீர் வழங்கல்.

2. **ஆனந்த்** (தி.நகர்) – ஊரக வளர்ச்சி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம், நீர்ப்பாசனம், சிறு பாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசன திட்டங்கள்.

3. **ஆதவ் அர்ஜுனா** (வில்லிவாக்கம்) – பொதுப் பணித் துறை, கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள், சிறு துறைமுகங்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைகள்.

4. **அருண்ராஜ்** (திருச்செங்கோடு) – சுகாதாரம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலத் துறை.

5. **கே.ஏ.செங்கோட்டையன்** (கோபி) – வருவாய், மாவட்ட வருவாய், துணை கலெக்டர்கள், பேரிடர் மேலாண்மை, பூமிதானம், கிராமதானம், சட்டசபை.

6. **வெங்கடரமணன்** (மயிலாப்பூர்) – உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலை கட்டுப்பாட்டுத் துறை.

7. **நிர்மல்குமார்** (திருப்பரங்குன்றம்) – மின்சாரம், மரபுசாரா எரிசக்தி, சட்டம், கோர்ட்டுகள், சிறைகள், லஞ்ச ஊழல் தடுப்பு, கவர்னர், தேர்தல் மற்றும் பாஸ்போர்ட்.

8. **ராஜ்மோகன்** (எழும்பூர்) – பள்ளிக்கல்வி, தொல்லியல், தமிழ் அதிகாரப்பூர்வ மொழி மற்றும் தமிழ் பண்பாடு, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்பட தொழில்நுட்பம் மற்றும் ஒளிப்பதிவு சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, அரசு அச்சகம்.

9. **பிரபு** (காரைக்குடி) – கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான இயற்கை வளம்.

10. **கீர்த்தனா** (சிவகாசி) – தொழில்துறை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புத் துறை

11. **ஸ்ரீநாத்** (தூத்துக்குடி) – மீன்வளம், மீன்வள மேம்பாட்டுக் கழகம்.

12. **கமலி** (அவிநாசி) – கால்நடை பராமரிப்பு

13. **சி.விஜயலட்சுமி** (குமாரபாளையம்) – பால் மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறை

14. **ஆர்.வி.ரஞ்சித்குமார்** (காஞ்சிபுரம்) – வனம்

15. **வினோத்** (கும்பகோணம்) – வேளாண்மை, வேளாண் பொறியியல், வேளாண் சேவை கூட்டுறவு, தோட்டக்கலை, சர்க்கரை, கரும்பு, கரும்பு கலால் வரி, கரும்பு மேம்பாடு மற்றும் புறம்போக்கு நில மேம்பாடு.

16. **ராஜீவ்** (திருவாடனை) – சுற்றுச் சூழல், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், காலநிலை மாற்றம்

17. **ராஜ்குமார்** (கடலூர்) – வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர்ப்புற திட்டங்கள் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதி கட்டுப்பாடு, சி.எம்.டி.ஏ., தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், நகர்ப்புறத் திட்டங்கள், மற்றும் நகர்ப்புற மேம்பாடு.

18. **காந்திராஜ்** (அரக்கோணம்) – கூட்டுறவு

19. **பி.மதன்ராஜா** (ஒட்டப்பிடாரம்) – குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள், சிறு தொழிற்சாலைகள்

20. **ஜெகதீஸ்வரி** (ராஜபாளையம்) – பெண்கள் நலன் உள்ளிட்ட சமூக நலன், ஆதரவற்றோர் இல்லம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம், இரவலர் இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தங்கள், சத்துணவுத் திட்டம்.

21. **ராஜேஷ்குமார்** (கிள்ளியூர்) – சுற்றுலா மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம்

22. **விஜய் பாலாஜி** (ஈரோடு கிழக்கு) – கைத்தறி மற்றும் ஜவுளி, காதி மற்றும் கிராம தொழிற்சாலைகள் வாரியம்.

23. **லோகேஷ் தமிழ்செல்வன்** (ராசிபுரம்) – வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரை சட்டம், நிதிக்கடன் சட்டங்கள் உள்ளிட்ட கான் தீர்வு, சிட்பண்டுகள் மற்றும் கம்பெனி பதிவுகள்.

24. **விஜய் தமிழன் பார்த்திபன்** (சேலம் தெற்கு) – மோட்டார் வாகன சட்டங்கள் நிர்வாகம், போக்குவரத்து தேசியமாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன சட்டங்கள்.

25. **ரமேஷ்** (ஸ்ரீரங்கம்) – இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்

26. **விஸ்வநாதன்** (மேலூர்) – தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர்கல்வி, எலக்ட்ரானிக்ஸ், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்.

27. **குமார்** (வேளச்சேரி) – செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் சேவைகள்.

28. **தென்னரசு** (ஸ்ரீபெரும்புதூர்) – வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

29. **சம்பத்குமார்** (கோவை வடக்கு) – பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப் பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்

30. **முகமது பர்வேஸ்** (அறந்தாங்கி) – தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, எடைகள் மற்றும் அளவீடுகள், நகர மற்றும் ஊரக வேலை வாய்ப்பு மற்றும் கொத்தடிமைகள் நலன்.

31. **சரத்குமார்** (தாம்பரம்) – மனிதவள மேம்பாடு மற்றும் முன்னாள் ராணுவத்தினர் நலன்

32. **மரிய வில்சன்** (ஆர்.கே.நகர்) – நிதி, ஓய்வூதியங்கள் மற்றும் ஓய்வூதிய நன்மைகள், திட்டமிடல் மற்றும் மேம்பாடு

33. **விக்னேஷ்** (கிணத்துக்கடவு) மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை.

புதிய பதவி ஏற்றுள்ள அமைச்சர்கள் அனைவரையும் சட்டக்கதிர் சார்பில் வாழ்த்துகிறோம்.

–ஆசிரியர்

# ‘அரசு ஒரு முன்மாதிரியான முதலாளியாக இருக்க வேண்டும்’ முந்தைய உத்தரவுகள் இருந்தபோதிலும் இஸ்ரோ ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்யாததற்காக விமர்சித்து உச்ச நீதிமன்றம் உத்தரவு

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி விக்ரம் நாத்**
**மாண்புமிகு நீதிபதி சந்தீப் மேத்தா**
சிறப்பு விடுப்பு மனு (உரிமையியல்) எண் 7138/2025
2026 LiveLaw (SC) 441

**ஆர். ஐயப்பன் மற்றும் இதர நபர்கள் ...மேல்முறையீட்டாளர்கள்**
**–எதிர்–**
**இந்திய ஒன்றியம் மற்றும் இதர நபர்கள் ...எதிர்மனுதாரர்கள்**

**தீர்ப்பு**

**நீதியரசர் விக்ரம் நாத்:**

1. மேல்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

2. சென்னை உயர் நீதிமன்றம், பேராணை மனு எண் 31674/2019–இல் கடந்த 2024–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8–ஆம் தேதி வழங்கிய இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் இந்த மேல்முறையீடு எழுந்துள்ளது. அந்தத் தீர்ப்பின் மூலம் உயர் நீதிமன்றம், சென்னை மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் கடந்த 2018–ஆம் ஆண்டு டிசம்பர் 20–ஆம் தேதி அசல் விண்ணப்பம் எண் 326/2015–இல் பிறப்பித்த உத்தரவை உறுதி செய்ததுடன், மேல்முறையீட்டாளர்களின் பேராணை மனுவைத் தள்ளுபடி செய்தது. மேல்முறையீட்டாளர்கள் தங்களது பணியைத் வரன்முறைப்படுத்தக் கோரிய விண்ணப்பத்தை மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் நிராகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

3. இந்த மேல்முறையீட்டைத் தீர்மானிப்பதற்கு அவசியமான வழக்கின் சுருக்கமான உண்மைகள் பின்வருமாறு:

3.1. மேல்முறையீட்டாளர்கள், எதிர்மனுதாரர்–மையத்தின் மகேந்திரகிரி பிரிவில் 1991 மற்றும் 1997–ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பல்வேறு காலக்கட்டங்களில் தினக்கூலிப் பணியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டனர். 1993–ஆம் ஆண்டில், 1–வது எதிர்மனுதாரர், தற்காலிகப் பணியாளர்களுக்குத் ‘தற்காலிக அந்தஸ்து’ வழங்கும் திட்டம் ஒன்றை வகுத்தார். அதன் தொடர்ச்சியாக, மேல்முறையீட்டாளர்கள் அந்தத் திட்டத்தின் கீழ் தங்களது பணியை வரன்முறைப்படுத்தக் கோரி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர்.

3.2. எதிர்மனுதாரர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால், மேல்முறையீட்டாளர்கள் தீர்ப்பாயத்தில் அசல் வழக்கு எண் 455/2009–ஐத் தாக்கல் செய்தனர். அதில், தங்களது பணியை வரன்முறைப்படுத்தவும், நிரந்தரப் பணியாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய அனைத்து இதர மற்றும் தொடர்ச்சியான நன்மைகளை வழங்கவும் கோரினர்.

3.3. 2010–ஆம் ஆண்டு மார்ச் 9–ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம், தீர்ப்பாயம் அந்த விண்ணப்பத்தை அனுமதித்தது. மேலும், மேல்முறையீட்டாளர்களைப் போன்ற நபர்களை இடைவிடாத பணிகளில் நிரந்தரமாக அமர்த்துவதற்காக, தேவையான பணியிடங்களை உருவாக்கி, ஆறு மாத காலத்திற்குள் ஒரு திட்டத்தையோ அல்லது தற்காலிக விதிகளையோ வகுக்குமாறு எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட்டது.

3.4. இந்த உத்தரவினால் அதிருப்தியடைந்த எதிர்மனுதாரர்கள், உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு எண் 19634/2010–ஐத்

தாக்கல் செய்தனர். அந்த மனு மார்ச் 14, 2011 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்த நீதிமன்றத்தில் (உச்ச நீதிமன்றம்) தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு விடுப்பு மனு (SLP No. 19200/2011) ஜுலை 29, 2011 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இதன் மூலம் தீர்ப்பாயத்தின் உத்தரவு இறுதியானது.

3.5. தீர்ப்பாயத்தின் உத்தரவுகளை நிறை வேற்றும் வகையில், 1-வது எதிர்மனுதாரர் 'கேங் லேபரர்ஸ் (இடைவிடாத பணிகளுக்கான வேலைவாய்ப்பு) திட்டம்' என்பதை செப்டம்பர் 3, 2012 அன்று உருவாக்கினார்.

3.6. இந்தத் திட்டம் தீர்ப்பாயத்தின் உத்தரவு களுக்கு இணங்க இல்லை என்று கூறி, மேல் முறையீட்டாளர்கள் தீர்ப்பாயத்தில் நீதிமன்ற அவமதிப்பு மனு 101/2011 தாக்கல் செய்தனர். அந்த மனு அக்டோபர் 10, 2012 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

3.7. இதற்கிடையில், இந்தத் திட்டத்தின் விதிகளுக்குக் கட்டுப்பட மேல்முறையீட்டாளர்கள் தங்களது விருப்பத்தைத் தெரிவித்தனர்.

3.8. அதன் பிறகு, இந்தத் திட்டத்தின் சட்டபூர்வத் தன்மையை எதிர்த்து மேல்முறையீட்டாளர்கள் தீர்ப்பாயத்தில் அசல் மனு எண் 326/2015-ஐத் தாக்கல் செய்தனர். தீர்ப்பாயம் ஜுலை 14, 2016 அன்று அந்த விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தது. மேல்முறையீட்டாளர்கள் இதனை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு எண் 8163/2017-ஐத் தாக்கல் செய்தனர். ஏப்ரல் 25, 2017 அன்று உயர் நீதிமன்றம் அந்த மனுவை அனுமதித்து, இந்த விவகாரத்தை மீண்டும் புதிதாகப் பரிசீலிக்குமாறு தீர்ப்பாயத்திற்குத் திருப்பி அனுப்பியது.

3.9. அவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட பிறகு, தீர்ப்பாயம் டிசம்பர் 20, 2018 அன்று மீண்டும் அந்த விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தது. அதனைத் தொடர்ந்து தாக்கல் செய்யப்பட்ட மறுஆய்வு மனு 11/2019 தள்ளுபடி செய்யப் பட்டது.

3.10. இதனால் அதிருப்தியடைந்த மேல் முறையீட்டாளர்கள், உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு எண். 31674/2019-ஐத் தாக்கல் செய்தனர். அதில், 'கேங் லேபரர்ஸ் திட்டத்தை' ரத்து செய்யவும், அதன்பிறகு பணியிடங்களை உருவாக்கவும், முன் தேதியிட்டு பணி நியமனம் வழங்கவும் மற்றும் பணியை வரன்முறைப்படுத்தவும் உத்தரவிடுமாறு கோரினர்.

3.11. உயர்நீதிமன்றம், ஜுலை 8, 2024 தேதியிட்ட தீர்ப்பின் மூலம் அந்தப் பேராணை மனுவைத் தள்ளுபடி செய்தது.

4. உயர் நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பினால் அதிருப்தியடைந்த மேல்முறையீட்டாளர்கள், தற்போது இந்த நீதிமன்றத்தின் (உச்ச நீதிமன்றம்) முன் வந்துள்ளனர்.

**தரப்பினரின் வாதங்கள்:**

5. மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்துப் பின்வரும் வாதங்களை முன்வைத்தார்:

5.1. வழக்கின் முதல் சுற்றில், தேவையான பணியிடங்களை உருவாக்கி, முன் தேதியிட்டு மற்றும் அதன் தொடர்ச்சியான அனைத்து நன்மைகளுடன் மேல்முறையீட்டாளர்களின் பணியை வரன்முறைப்படுத்துமாறு தீர்ப்பாயம் எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட்டிருந்தது. மேல்முறையீட்டாளர்களின் கூற்றுப்படி, எதிர் மனுதாரர்களால் உருவாக்கப்பட்ட 'கேங் லேபரர்ஸ் திட்டம்', தீர்ப்பாயத்தின் அந்த உத்தரவுக்கு முரணாக உள்ளது. அந்தத் தீர்ப்பாய உத்தரவு இந்த நீதிமன்றத்தால் (உச்ச நீதிமன்றம்) உறுதி செய்யப்பட்டு இறுதியானது என்பது குறிப்பிடத்தக்கது.

5.2. மேல்முறையீட்டாளர்களை வரன்முறைப் படுத்தாமல் தொடர்ந்து தினக்கூலி அடிப்படை யில் பணியமர்த்துவது, இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தின் பிரிவு 23-ஐ மீறும் செயலாகும் என்று வாதிடப்பட்டது. நிலையான மற்றும் நிரந்தரத் தன்மை கொண்ட பணி களுக்கு, உரிய பணியிடங்களை அங்கீகரிக் காமலோ அல்லது முறையான விதிகளை வகுக்காமலோ, நீண்ட காலத்திற்கு நபர்களைப்

பணியமர்த்துவதன் மூலம் அரசு அவர்களைச் சுரண்டலுக்கு உள்ளாக்க முடியாது என்று வலியுறுத்தப்பட்டது.

5.3. முந்தைய சுற்றில் தீர்ப்பாயம் வழங்கிய உத்தரவுகள், மேல்முறையீட்டாளர்களின் பணியை முன் தேதியிட்டு வரன்முறைப்படுத்துவதை எவ்வித ஐயமுமின்றி கட்டாயப்படுத்தியது என்றும் கடைசியாக வாதிடப்பட்டது. இந்த அடிப்படையில், மேல்முறையீட்டை அனுமதிக்குமாறு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார்.

6. இதற்கு மாறாக, எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான இந்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் திரு.எஸ்.டி.சஞ்சய் அவர்கள் பின்வரும் வாதங்களை முன் வைத்தார்:

6.1. ஏற்றி இறக்குதல் மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்தல் போன்ற அவ்வப்போது தேவைப்படும் பணிகளுக்காக மட்டுமே மேல்முறையீட்டாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர் என்றும், அவர்கள் ஒருபோதும் முறையான அல்லது நிரந்தரப் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களில் நியமிக்கப்படவில்லை என்றும் வாதிடப்பட்டது.

6.2. மேல்முறையீட்டாளர்களுக்கும் எதிர்மனுதாரர் அமைப்புக்கும் இடையே நேரடியான முதலாளி–தொழிலாளி உறவு சட்டப்பூர்வமாக இல்லை என்றும், எனவே அவர்கள் பணியை வரன்முறைப்படுத்தக் கோர எந்த உரிமையும் இல்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

6.3. எதிர்மனுதாரர்களால் உருவாக்கப்பட்ட 'கேங் லேபரர்ஸ் திட்டம்', தீர்ப்பாயம் வழங்கிய மற்றும் உயர்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட உத்தரவுகளுக்கு முழுமையாக இணங்கவே உள்ளது என்று வலியுறுத்தப்பட்டது. அந்தத் திட்டத்தின் கீழ், மேல்முறையீட்டாளர்கள் 60 வயது வரை அவ்வப்போது தேவைப்படும் பணிகளுக்கு ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும், எதிர்காலத்தில் ஏற்படும் காலிப்பணியிடங்களில் குறிப்பிட்ட அளவிற்கு அவர்களைப் பரிசீலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. எனவே, இத்தகைய தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்துவதற்கான திட்டத்தை வகுக்க வேண்டும் என்ற உத்தரவை எதிர்மனுதாரர்கள் முறையாக நிறைவேற்றியுள்ளனர் என்று வாதிடப்பட்டது.

இந்த அடிப்படையில், மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்து, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்யுமாறு கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் கேட்டுக்கொண்டார்.

**விவாதம் மற்றும் ஆய்வு:**

7. இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களையும் நாங்கள் கேட்டோம் மற்றும் ஆவணக் கோப்பில் உள்ள ஆதாரங்களை ஆய்வு செய்தோம்.

8. தற்போதைய சர்ச்சையின் மையப்புள்ளி, வழக்கின் முதல் சுற்றில் மார்ச் 9, 2010 அன்று தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவின் உண்மையான நோக்கம் மற்றும் வரம்பைப் பொறுத்தே அமைந்துள்ளது. அந்த உத்தரவின் தொடர்ச்சியாகவே, எதிர்மனுதாரர்கள் செப்டம்பர் 3, 2012 அன்று 'கேங் லேபரர்ஸ் திட்டத்தை' உருவாக்கினர். அந்தத் திட்டம் தங்களை அதிருப்திக்குள்ளாக்கியதாகக் கூறி, தீர்ப்பாயத்தின் உத்தரவுகள் அதன் உண்மையான நோக்கத்தில் செயல்படுத்தப்படவில்லை என்று வாதிட்டு மேல்முறையீட்டாளர்கள் மீண்டும் நீதிமன்றங்களை அணுகியுள்ளனர்.

9. மேல்முறையீட்டாளர்களின் கூற்றுப்படி, மார்ச் 9, 2010 தேதியிட்ட உத்தரவில், தங்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்க வேண்டும் என்று தீர்ப்பாயம் எவ்வித ஐயமுமின்றி உத்தரவிட்டுள்ளது. இருப்பினும், இந்த வாதத்தை எதிர்மனுதாரர்கள் கடுமையாக மறுக்கின்றனர். தீர்ப்பாயம் பணியை வரன்முறைப்படுத்துமாறு கட்டாயப்படுத்தவில்லை என்றும், அவ்வப்போது செய்யப்படும் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களை முறைப்படுத்தவும் சீரமைக்கவும் ஒரு திட்டத்தை வகுக்க மட்டுமே உத்தரவிட்டது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

10. எனவே, நமது பரிசீலனைக்கு முன்னால் எழும் முக்கியக் கேள்வி என்னவென்றால்: 2010–ஆம் ஆண்டு மார்ச் 9–ஆம் தேதியிட்ட தீர்ப்பாயத்தின் உத்தரவு, மேல்முறையீட்டாளர்

களின் பணியை வரன்முறைப்படுத்துமாறு கட்டாயப்படுத்தியதா? அப்படி எனில், எதிர்மனு தாரர்களால் உருவாக்கப்பட்ட ‘கேங் லேபரர்ஸ் திட்டம்’ அந்த உத்தரவை நிறைவேற்றும் வகையில் உள்ளதா?

11. மேற்கூறிய கேள்விக்கான பதில் எதிர்மறையாக இருக்குமானால், அதாவது 2010 மார்ச் 9–ஆம் தேதியிட்ட தீர்ப்பாயத்தின் உத்தரவு மேல்முறையீட்டாளர்களை வரன்முறைப்படுத்துமாறு உத்தரவிடவில்லை என்றால், மேல்முறையீட்டாளர்களின் இந்தக் கோரிக்கையின் அடிப்படை ஆதாரமே தகர்ந்துவிடும்.

12. தீர்ப்பாயத்தின் அந்த முடிவு தற்போதைய சர்ச்சையைத் தீர்ப்பதற்கு மையமாக இருப்பதால், அதன் தொடர்புடைய பகுதிகளை இங்கே மேற்கோள் காட்டுவது பொருத்தமானதாக இருக்கும்:

‘7. ஏற்றி இறக்குதல், பொருட்களை இடமாற்றம் செய்தல், பேக்கிங் செய்தல் போன்ற அவ்வப்போது தேவைப்படும் பணிகளை மேற்கொள்வதற்காக 34 கேங் லேபரர்கள் ஈடுபடுத்தப்பட்டதை எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அன்றாடத் தேவையின் அடிப்படையில் முக்கியப் பாதுகாப்பு வாயிலில் இந்தத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். டோக்கன் முறையின் மூலம் இத்தகைய பணிகளுக்காக அவர்கள் வளாகத்திற்குள் அனுமதிக்கப்பட்டு, பணிகளை முடித்து டோக்கன்களைத் திரும்ப ஒப்படைத்த பிறகு வெளியேறுகிறார்கள். எதிர்மனுதாரர் அலுவலகத்தின் அன்றாடத் தேவைக்கேற்ப இவர்கள் தினக்கூலி அடிப்படையில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஆனால், 14 முதல் 26 ஆண்டுகள் வரை இவர்கள் பணியில் இருந்த காரணத்தினாலேயே, ஒரு குறிப்பிட்ட விதி அல்லது திட்டம் இல்லாத நிலையில், தங்களது பணியை வரன்முறைப்படுத்துமாறு கோர விண்ணப்பத்தாரர்களுக்கு உரிமை ஏதும் இல்லை. இருப்பினும், ஆவணங்களைப் பார்க்கும்போது தொழிலாளர்கள் தொடர்ந்து ஈடுபடுத்தப்பட்டு வருவது தெரிகிறது. தொழிலாளர்களின் தொடர்ச்சியான ஈடுபாடே, எதிர்மனுதாரர் அலுவலகத்தில் நிரந்தரமான மற்றும் தொடர்ச்சியான பணிகள் உள்ளன என்பதை மெய்ப்பிக்கிறது. மகேந்திரகிரி பிரிவில் பி.எஸ்.எல்.வி, ஜி.எஸ்.எல்.வி மற்றும் இன்சாட் அமைப்புகள் போன்ற ஏவுகணைகள் மற்றும் விண்கலங்களின் ஒருங்கிணைப்பு, சோதனை போன்ற முக்கியமான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயல்பாடுகள் ஆண்டு முழுவதும் நடைபெறுவதையும் எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். மேலும், மகேந்திரகிரி வசதியானது அலுவலகங்கள், ஆலைகள் மற்றும் ஆய்வகங்களைக் கொண்டது என்றும், தேசிய முக்கியத்துவம் மற்றும் பாதுகாப்பு கருதி இது ‘தடைசெய்யப்பட்ட பகுதி’ என அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது. ஒட்டுமொத்த வளாகமும் சுமார் 4271 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளதால், சி.ஐ.எஸ்.எஃப் மூலம் பாதுகாப்பு வழங்கப்பட்டு, அடையாள அட்டைகள் மூலம் நுழைவு முறைப்படுத்தப்படுகிறது. இத்தகைய அமைப்பில், எந்தவொரு பணி நியமன ஆணையும் இன்றி, முறையான ஆவணங்கள் இன்றி தினக்கூலிப் பணியாளர்களை அன்றாடம் ஈடுபடுத்துவது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும். எனவே, இத்தகையப் பாதுகாப்பு அச்சுறுத்தலைத் தவிர்க்கவும், விண்ணப்பத்தாரர்களின் நிலையைத் கருத்தில் கொண்டும், இத்தகையப் பணிகளுக்காகத் தேவையான பணியிடங்களை உருவாக்கி, அவர்களை நிரந்தர அடிப்படையில் பணியமர்த்தும் வகையில் ஒரு திட்டத்தையோ அல்லது தற்காலிக விதிகளையோ எதிர்மனுதாரர்கள் வகுக்க வேண்டும் என்பது எமது கருத்தாகும். இத்தகையப் பணிகளைச் செய்யத் தகுதியுள்ள அல்லது திறன்மிக்க நபர்கள் தேவையில்லை என்பதையும் எதிர்மனுதாரர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். விண்ணப்பத்தாரர்கள் 14 முதல் 26 ஆண்டுகள் வரை பணிபுரிந்து, இதில் மிகுந்த அனுபவம் பெற்றுள்ளனர் என்பது உண்மையாகிறது. எனவே, இத்தகைய பணி நியமனத்திற்கு அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்; அவர்களின் நிலையைத் கருத்தில் கொண்டு வயது தளர்வு தேவைப்பட்டால் அதையும் எதிர்மனுதாரர்கள் பரிசீலிக்கலாம். இத்தகைய திட்டம் அல்லது விதிகளை வகுப்பது விண்ணப்பதாரர்களின் இன்னல்களுக்கு முற்றுப்புள்ளி

வைக்கும். எனவே, இத்தகைய நபர்களை நிரந்தர அடிப்படையில் ஈடுபடுத்துவதற்கான திட்டம் அல்லது விதிகளை வகுக்கும் பணியை ஆறு மாத காலத்திற்குள் எதிர்மனுதாரர்கள் முடிக்க வேண்டும் என்றும், அதுவரை தேவையின் அடிப்படையில் விண்ணப்பத்தாரர்களைத் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் உத்தரவிடுகிறோம்.' (முக்கியத்துவம் சேர்க்கப்பட்டுள்ளது)

13. தீர்ப்பாயத்தின் மேற்கூறிய உத்தரவை உன்னிப்பாக வாசித்தால், தினக்கூலித் தொழிலாளர்களைப் பணியமர்த்தும் விவகாரத்தை அது இரண்டு முக்கியக் கோணங்களில் அணுகியிருப்பது புலனாகிறது. முதலாவதாக, வழக்கின் தனித்துவமான உண்மைகள், அவர்கள் செய்யும் பணியின் தன்மை மற்றும் இதில் அடங்கியுள்ள பாதுகாப்பு அம்சங்களைக் கருத்தில் கொண்டு, இத்தகைய நபர்களை ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் நிலையான அடிப்படையில் பணியமர்த்துவதை முறைப்படுத்தும் பொருட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பொருத்தமானத் திட்டத்தையோ அல்லது தற்காலிக விதிகளையோ வகுக்குமாறு எதிர்மனுதாரர்களுக்குத் தீர்ப்பாயம் உத்தரவிட்டது. இத்தகையப் பணி நியமனச் செயல்முறை நிறுவனமயமாக்கப்பட்டதாகவும், வெளிப்படையானதாகவும் மற்றும் தன்னிச்சையான போக்கு அற்றதாகவும் இருப்பதை உறுதி செய்வதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

14. இரண்டாவது கோணத்தில், மேல்முறையீட்டாளர்கள் வழங்கிய நீண்ட கால சேவையையும், இத்தனை ஆண்டுகளில் அவர்கள் பெற்ற அனுபவத்தையும் தீர்ப்பாயம் கவனத்தில் கொண்டது. இந்தச் சூழலில்தான், அவர்களின் 14 முதல் 26 ஆண்டுகால அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, அத்தகையப் பணி வாய்ப்புகளில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படலாம் என்று தீர்ப்பாயம் குறிப்பிட்டது. அதே சமயம், இறுதிப் பணி நியமனமானது அவ்வாறு வகுக்கப்படும் திட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டே இருக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தியது.

15. இந்த உத்தரவுகளை முழுமையாகவும், உயர்நீதிமன்றம் கையாண்ட காரணங்களுடனும் இணைத்துப் பார்க்கும்போது, அவ்வப்போது செய்யப்படும் பணிகளை மேற்கொள்ளும் நபர்களின் ஈடுபாட்டை முறைப்படுத்தவும், சீரமைக்கவும் தேவையான பணியிடங்களை உருவாக்குவதே இந்தத் தீர்ப்பின் முக்கியக் கட்டளை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. வெறும் ஒரு திட்டத்தை மட்டும் பெயரளவில் உருவாக்குவதில் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை; மாறாக, அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களை உருவாக்குவதன் மூலம் இத்தகையப் பணிக் கட்டமைப்பை அமைப்பதற்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதன் மூலமே உணர்திறன் மிக்க ஒரு நிறுவனத்தில் தொடர்ச்சி, பொறுப்புக்கூறல் மற்றும் பாதுகாப்பு அம்சங்களை உறுதி செய்ய முடியும். மேல்முறையீட்டாளர்களின் நீண்ட கால சேவை மற்றும் இப்பணிகளுக்குச் சிறப்புத் தகுதிகள் தேவையில்லை என்ற ஒப்புக்கொள்ளப்பட்ட நிலை ஆகியவற்றை உயர்நீதிமன்றம் கருத்தில் கொண்டு, பணியிடங்களை உருவாக்கி நிரந்தர அடிப்படையில் பணி நியமனம் செய்ய வேண்டியதன் அவசியத்தை உறுதிப்படுத்தியது. வயது தளர்வு உள்ளிட்ட முன்னுரிமை அளிக்கும் உத்தரவுகள் யாவும், பணியிடங்களை உருவாக்குதல் என்ற முதன்மையான கட்டளைக்குத் துணையாக வழங்கப்பட்டவையே ஆகும்.

16. எனவே, முந்தைய சுற்றில் வழங்கப்பட்ட உத்தரவுகளின் சாரம் என்னவென்றால், ஒரு தற்காலிகமான தினக்கூலி ஏற்பாட்டிலிருந்து, ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முறையாக உருவாக்கப்பட்ட பணியிடங்களைக் கொண்ட ஒரு கட்டமைக்கப்பட்ட ஆட்சிமுறைக்கு மாற்றத்தைக் கொண்டு வருவதாகும். இத்தகைய பணியிட உருவாக்கத்தை வழங்காமல், வெறும் பணிகளை மட்டும் முறைப்படுத்தும் எந்தவொரு திட்டமும், அந்த உத்தரவுகளின் எழுத்துக்கும் உணர்வுக்கும் இணங்க அமைந்ததாகக் கருத முடியாது.

17. இந்தத் தருணத்தில், 3-வது எதிர்மனுதாரரான திரவ இயக்கத் திட்ட மையம், 2-வது எதிர்மனுதாரரான இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் ஒரு முதன்மை ஆராய்ச்சி மற்றும்

மேம்பாட்டுப் பிரிவு என்பதும், அதன் மகேந்திரகிரி வளாகம் அதிகாரப்பூர்வ ரகசியச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. எனவே, தீர்ப்பாயம் நிறுவனப் பாதுகாப்பு மற்றும் மேல்முறையீட்டாளர்களின் நீண்டகாலப் பணி ஆகிய இரண்டுக்கும் இடையிலான சமநிலையைப் பேண முயன்றது. அந்தப் பின்னணியில், இத்தகைய நபர்களைத் தற்காலிகப் பணிகளுக்காக மிகவும் நிரந்தர மான அடிப்படையில் ஈடுபடுத்த, தேவையான எண்ணிக்கையிலான பணியிடங்களை உருவாக்கி ஒரு திட்டத்தையோ அல்லது தற்காலிக விதி களையோ வகுக்குமாறு எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட்டது. அதேநேரத்தில், மேல்முறை யீட்டாளர்களின் அனுபவத்திற்குத் தகுந்த மதிப்பளிக்கும் வகையில், அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதையும், தேவைப்படும் இடங்களில் வயது தளர்வு வழங்குவதையும் வலியுறுத்தியது.

18. எனவே, எதிர்மனுதாரர்களால் வகுக்கப் படும் திட்டம் மிகவும் நிரந்தரமான அடிப்படையில் பணிகளில் ஈடுபடுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்பதில் தீர்ப்பாயம் மிகத் தெளிவாக இருந்தது. எதிர்மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பேராணை மனு எண். 19634/ 2010 மற்றும் அதனைத் தொடர்ந்து இந்த நீதிமன்றத்தில் (உச்ச நீதிமன்றம்) தாக்கல் செய்த சிறப்பு விடுப்பு மனு (SLP (Civil) No. 19200/2011) ஆகியவை தள்ளுபடி செய்யப் பட்டதன் மூலம் இந்த உத்தரவுகள் இறுதியானது.

19. மேலும், தீர்ப்பாயத்தின் முடிவை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட பேராணை மனுவைத் தள்ளுபடி செய்தபோது, உயர் நீதிமன்றமும் மேல்முறையீட்டாளர்களின் அவல நிலையைச் சுட்டிக்காட்டியது. நீண்ட காலம் பணியில் இருந்த போதிலும், அவர்கள் ஒருவித பாதுகாப்பற்ற உணர்வுடனும், எந்த நேரத்திலும் பணிநீக்கம் செய்யப்படலாம் என்ற அச்சுறுத்தலுடனும் தினக்கூலித் தொழிலாளர்களாகவே நீடிப்பதை உயர்நீதிமன்றம் கவனித்தது. எனவே, பணி யிடங்களை உருவாக்கி, இத்தகைய நபர்களை மிகவும் நிரந்தரமான அடிப்படையில் பணிய மர்த்த வேண்டும் என்ற தீர்ப்பாயத்தின் உத்தரவின் சரியான தன்மையை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது. குறிப்பாக, மிகவும் உணர்திறன் கொண்ட ஒரு நிறுவனத்தில் நிலவும் பாதுகாப்பு அக்கறைகளைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது.

20. மேற்கூறியவற்றிலிருந்து, மீண்டும் மீண்டும் நடைபெறும் பணிகளுக்கு (recurring nature) முற்றிலும் தினக்கூலி அல்லது தற்காலிக அடிப்படையில் தொழிலாளர்களை ஈடுபடுத்தும் நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தீர்ப்பாயம் விரும்பியது என்பது தெளிவாகிறது. தேவையான எண்ணிக்கையிலான பணியிடங் களை உருவாக்குவதற்கான ஒரு திட்டம் அல்லது தற்காலிக விதிகளை வகுக்கவும், அத்தகைய பணியிடங்களுக்கு எதிராக மிகவும் நிரந்தரமான அடிப்படையில் பணி நியமனங்களை முறைப் படுத்தவும் எதிர்மனுதாரர்கள் பணிக்கப்பட்டனர். அதே நேரத்தில், மேல்முறையீட்டாளர்களின் நீண்ட கால சேவையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதையும், தேவைப்படும் இடங்களில் வயது தளர்வு வழங்குவதையும் தீர்ப்பாயம் நோக்கமாகக் கொண்டிருந்தது.

21. எனவே, தீர்ப்பாயத்தின் உத்தரவுகளின் தொடர்ச்சியாக எதிர்மனுதாரர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட 'கேங் லேபரர்ஸ் திட்டம்', அந்த உத்தரவுகளில் உள்ள கட்டளைகளைப் பூர்த்தி செய்கிறதா மற்றும் அதற்கு இணங்குகிறதா என்பதுதான் இப்போது பரிசீலனைக்குரிய விஷயமாகும்.

22. இந்தச் சூழலில்தான், எதிர்மனுதாரர்கள் இந்த நீதிமன்றம் (உச்ச நீதிமன்றம்) வரை தங்களது மேல்முறையீடுகளைச் செய்து அவை நிராகரிக்கப்பட்ட பிறகு, செப்டம்பர் 3, 2012 அன்று 'கேங் லேபரர்ஸ் (அவ்வப்போது தேவைப்படும் பணிகளுக்கான வேலைவாய்ப்பு) திட்டம், 2012' என்பதை உருவாக்கினர். எதிர் மனுதாரர்–மையத்தில் இத்தகைய தொழிலாளர்கள் எவ்வாறு பணியமர்த்தப்படுவார்கள் என்பதற் கான வழிமுறைகளை இது வழங்கியது.

23. ‘கேங் லேபரர்ஸ் திட்டத்தின்’ பிரிவு 4-ஐப் பரிசீலிக்கும்போது, அதில் குறிப்பிடப் பட்டுள்ள பணி நியமனம் தற்காலிகத் தன்மை கொண்டதாகவே உள்ளது என்பது தெரிகிறது. வசதிக்காக, அந்தப் பிரிவின் தொடர்புடைய பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

‘4 தற்காலிக அடிப்படையில் வேலை வாய்ப்பு:

(i) இந்தத் திட்டம் வெளியிடப்பட்ட தேதியில் பணியில் இருக்கும் மற்றும் குறைந்தபட்சம் ஓராண்டு தொடர்ச்சியான சேவையை (அதாவது குறைந்தபட்சம் 206 நாட்கள் பணிபுரிந்திருக்க வேண்டும் - இஸ்ரோ அலுவலகங்கள் வாரத்திற்கு 5 நாட்கள் செயல்படுவதால்) வழங்கியுள்ள அனைத்து கேங் லேபரர்களும் 60 வயது அடையும் வரை தற்காலிக அடிப்படை யில் பணியமர்த்தப்படுவார்கள்.

(ii) இத்தகைய தற்காலிக அடிப்படையிலான வேலைவாய்ப்பு என்பது, பழைய ‘குரூப்-டி’ பணியிடங்களின் உருவாக்கம் அல்லது இருப்புடன் எவ்விதத் தொடர்பும் அற்றது.

(ii) தற்காலிக அடிப்படையிலான வேலை வாய்ப்பினால், கேங் லேபரர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகளில் எவ்வித மாற்றமும் இருக்காது. அவர்கள் எல்.பி.எஸ்.சி-யின் பல்வேறு பிரிவுகளின் அன்றாடத் தேவை களுக்கு ஏற்ப ஏற்றி இறக்குதல், பொருட்களை இடமாற்றம் செய்தல், அடுக்கி வைத்தல், பேக்கிங் செய்தல், சுத்தம் செய்தல் மற்றும் ஆவணங்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லுதல் போன்ற அவ்வப்போது தேவைப்படும் பணிகளையே தொடர்ந்து செய்வார்கள்.

(iv) கேங் லேபரர்களின் ஈடுபாடு தினக்கூலி விகிதங்களின் அடிப்படையில் அமையும். அவர்கள் உண்மையானத் தேவைக்கேற்ப எல்.பி.எஸ்.சி மகேந்திரகிரி/வல்லமலை வளாகத்திற்குள் எங்கு வேண்டுமானாலும் பணியமர்த்தப்படலாம்.

(v) தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தப் படும் கேங் லேபரர்கள், பழைய ‘குரூப்-டி’ பணியிடங்களுக்கான முறையானத் தேர்வு செயல்முறை மூலம் முன்னுரிமை அடிப்படை யில் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒழிய, அவர்கள் நிரந்தரப் பணியமைப்பிற்குள் கொண்டு வரப்பட மாட்டார்கள். அத்தகைய பணியிடங்களை நிரப்புவது குறித்து விண்வெளித் துறை/இந்திய அரசு அவ்வப்போது வழங்கும் உத்தரவுகளுக்கு இது உட்பட்டது.

(vi) இத்திட்டத்தின் கீழ் தற்காலிக அடிப்படை யில் பணியமர்த்தப்படுவதற்கு வயது வரம்பு ஏதும் கிடையாது. இருப்பினும், எதிர்காலத்தில் வரன்முறைப்படுத்துவதற்காக (regularisation), சம்பந்தப்பட்ட பணி நியமன விதிகள்/ நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வயது மற்றும் கல்வித் தகுதிகள் பொருந்தும்.‘

24. இதிலிருந்து, எதிர்மனுதாரர்கள் வகுத்துள்ள திட்டம் தற்காலிக அடிப்படையிலான பணிய மர்த்தலையே நோக்கமாகக் கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது. இது, 2010 மார்ச் 9-ஆம் தேதியிட்ட தீர்ப்பாயத்தின் உத்தரவில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு முற்றிலும் மாறானது. அந்த உத்தரவானது, முறையே 2011 மார்ச் 14 மற்றும் 2011 ஜூலை 29 தேதியிட்ட உயர்நீதிமன்றம் மற்றும் இந்த நீதிமன்றத்தின் (உச்ச நீதிமன்றம்) உத்தரவுகள் மூலம் உறுதி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தேவையான எண்ணிக்கையிலான பணியிடங்களை உருவாக்கி, நிரந்தர அடிப்படையில் பணி நியமனம் வழங்க வழிவகை செய்யும் ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என்று தீர்ப்பாயம் திட்டவட்டமாக எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட்டிருந்தது.

25. எமது கருத்தின்படி, இறுதியான அந்த உத்தரவுகளை முழுமையாக நிறைவேற்றுவதில் எதிர்மனுதாரர்கள் தவறிவிட்டனர். இந்த அம்சத்தையே வழக்கின் அடுத்த கட்ட விசாரணை யில் உயர் நீதிமன்றம் கூர்மையாக ஆய்வு செய்திருக்க வேண்டும்.

26. எமது கருத்தின்படி, வழக்கின் உண்மை களையும் அதன் மூலம் எழும் பிரச்சினைகளை யும் சரியாகப் புரிந்துகொள்வதில் உயர்நீதிமன்றம் தவறிவிட்டது. மேல்முறையீட்டாளர்கள் தாக்கல்

செய்த பேராணை மனுவைத் தள்ளுபடி செய்த போது, உயர்நீதிமன்றம் பின்வரும் முடிவுகளை வழங்கியது:

டி. கர்நாடக மாநிலம் –எதிர்– உமாதேவி (2006) 4 SCC 1) வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவது என்பது அடிப்படை உரிமை அல்ல என்றும், அரசியலமைப்பின் 21–வது பிரிவில் இருந்து வேலைவாய்ப்புக்கான உரிமை ஏதும் உருவாவதில்லை என்றும் குறிப்பிட்டது.

ii) தற்காலிக அல்லது தினக்கூலி அடிப்படையிலான பணியின் கால அளவு மட்டுமே ஒருவரை நிரந்தரப் பணியில் சேர்ப்பதற்கோ அல்லது வரன்முறைப்படுத்துவதற்கோ அடிப்படையாக அமையாது என்றும், அத்தகைய நீதித்துறை உத்தரவுகள் அரசியலமைப்புத் திட்டத்திற்கு முரணாக அமைவதுடன் சட்டவிரோதத்தைத் தொடரச் செய்யும் என்றும் குறிப்பிட்டது.

iii) எதிர்மனுதாரர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட 'கேங் லேபரர்ஸ் திட்டம்', மேல்முறையீட்டாளர்கள் 60 வயது அடையும் வரை தொடர்ந்து பணியில் இருப்பதை உறுதி செய்வதுடன், எதிர்கால 'குரூப்–டி' பணியிடங்களில் அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதையும் உறுதி செய்கிறது எனக் கருதியது.

iv) மேல்முறையீட்டாளர்களின் ஆரம்ப காலப் பணி நியமனம் முறையான எவ்விதத் தேர்வு நடைமுறைகளின்படியும் நடைபெறவில்லை என்றும், அது ஒரு 'புறவாசல் நுழைவு' போன்றது என்பதால், அவர்கள் பணியில் சேர்ந்த தேதியிலிருந்து வரன்முறைப்படுத்தக் கோருவது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் முடிவெடுத்தது.

27. மேல்முறையீடு செய்யப்பட்டுள்ள இந்தத் தீர்ப்பில், மேல்முறையீட்டாளர்களின் பணியை வரன்முறைப்படுத்த முடியுமா என்ற விவகாரத்தின் தகுதியினை மீண்டும் ஆராய்ந்ததன் மூலம் உயர் நீதிமன்றம் தனது அதிகார வரம்பை மீறியுள்ளது. வழக்கின் முந்தைய சுற்றில் தீர்ப்பாயம் வழங்கிய உத்தரவுகள், உயர் நீதிமன்றம் மற்றும் இந்த நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டு ஏற்கனவே இறுதியானவை என்ற உண்மையை இந்த அணுகுமுறை கவனிக்கத் தவறிவிட்டது. எனவே, அடுத்தகட்ட நடவடிக்கைகளின் வரம்பு என்பது அந்த உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதுடன் மட்டுமே சுருங்கியிருக்க வேண்டும். அந்த நிலையில், வழக்கின் தகுதியினை மீண்டும் கிளறுவதோ அல்லது வரன்முறைப்படுத்துவது குறித்த கேள்வியை மறுபரிசீலனை செய்வதோ உயர்நீதிமன்றத்திற்கு முற்றிலும் அனுமதிக்கப்படாத ஒன்றாகும்.

28. இந்த விவகாரத்தை முடிப்பதற்கு முன்னதாக, இந்த வழக்கை எதிர்மனுதாரர்கள் கையாண்ட விதம் குறித்து எமது கடுமையான அதிருப்தியைத் தெரிவிக்க வேண்டியுள்ளது. அரசு ஒரு 'மாதிரி முதலாளியாக' செயல்பட வேண்டிய கடமை என்பது வெறும் அறிவுரை மட்டுமல்ல; அது அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 14–இல் பொதிந்துள்ள சமத்துவ உத்தரவாதத்திலிருந்து நேரடியாக உருவாவதாகும். அரசியலமைப்புப் பிரிவு 14 தன்னிச்சையான போக்கை எதிர்க்கிறது என்றும், அரசின் அனைத்துச் செயல்பாடுகளிலும் நேர்மை, பாகுபாடற்ற தன்மை மற்றும் காரண காரியங்களுடன் கூடிய முடிவெடுத்தலை அது வலியுறுத்துகிறது என்றும் இந்த நீதிமன்றம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளது.

28.1. காலங்கள் கடந்தும், மீண்டும் மீண்டும் நீதித்துறை தீர்ப்புகள் வழங்கப்பட்டும், பணி தொடர்பான விவகாரங்களில் இத்தகைய அடிப்படைத் தத்துவங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவது கவலைக்குரிய விஷயமாகும். அமைப்பின் விளிம்புகளில் உள்ள ஒரு சாமானிய மனுதாரர், தனக்கு நியாயமாகச் சேர வேண்டியதைப் பெறுவதற்குக்கூட எவ்வளவு நீண்ட மற்றும் கடினமான சட்டப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதற்கு இந்த வழக்கே ஒரு சிறந்த உதாரணமாகும். இந்த வழக்கில், இந்த நீதிமன்றத்தால் சவால்கள் தள்ளுபடி செய்யப்

பட்டு இறுதியான தீர்ப்பாயத்தின் உத்தரவுகள், அதன் உண்மையான நோக்கத்தில் செயல்படுத்தப் பட்டிருக்க வேண்டும். மாறாக, எதிர்மனுதாரர்கள் அந்த உத்தரவுகளின் சாரத்தைக் குறைக்கும் வகையிலான ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்து, இந்தத் தகராறை பல ஆண்டுகளாக நீட்டிக்கச் செய்துள்ளனர்.

28.2. இந்தியாவின் விண்வெளித் திட்டத்தின் எளிமையான ஆரம்பக் காலத்தை நாம் இங்கே நினைவுகூர வேண்டியுள்ளது. 1963-ஆம் ஆண்டு, தும்பாவிலிருந்து முதல் ஏவுகணை விண்ணில் செலுத்தப்பட்டபோது, அதன் பாகங்கள் ஒரு மிதிவண்டியில்தான் ஏவுதளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. அதேபோல், 1981-ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் தகவல் தொடர்பு செயற்கைக்கோளான ‘ஆப்பிள்’ சோதனையின்போது, திறந்தவெளியில் ஆன்டெனா சோதனைகளுக்காக காந்தத்தன்மையற்ற சூழலை உருவாக்க அந்தச் செயற்கைக்கோள் ஒரு மாட்டு வண்டியில் வைத்து எடுத்துச் செல்லப்பட்டது. வரலாற்று உண்மைகளில் வேரூன்றிய இத்தகைய நிகழ்வுகள் வெறும் சுவாரசியமான கதைகள் மட்டுமல்ல; மாறாக, எமது ஆரம்பகால அறிவியல் முயற்சிகளை வரையறுத்த புத்திசாலித்தனம், வளங்களைக் கையாளும் திறன் மற்றும் தளராத உறுதி ஆகியவற்றின் அடையாளங்களாகும். வளங்கள் மிகக் குறைவாக இருந்த அந்தக் காலத்தில், நமது விஞ்ஞானிகளும் அவர்களுக்குத் துணை யாக இருந்த ஒட்டுமொத்த அமைப்பும் சந்தித்த ஆழமான போராட்டங்களை இவை பிரதி பலிக்கின்றன.

28.3. நமது அறிவியல் சமூகத்தின் பெருமையைக் கொண்டாடும் வேளையில், அந்தப் பெரிய முயற்சியின் அங்கமாக விளங்கிய ஒவ்வொரு தனிமனிதனின் கண்ணுக்குத் தெரியாத, ஆனால் தவிர்க்க முடியாத பங்களிப்பை நாம் மறந்துவிடக் கூடாது. ஒரு ஏவுகணை அல்லது செயற்கைக் கோள் திட்டத்தின் வெற்றி என்பது உயர்மட்ட வடிவ மைப்பு மற்றும் உந்துவிசைப் பொறியியலின் முடிவு மட்டும் அல்ல. பொருட்களை ஏற்றிச் செல்வது முதல் வசதிகளைப் பராமரிப்பது மற்றும் செயல்பாட்டுத் திறனை உறுதிப்படுத்தும் எண்ணற்ற துணைப் பணிகள் வரை அனைத்தை யும் உள்ளடக்கிய ஒரு தடையற்ற ஆதரவுச் சங்கிலியின் விளைவே அந்த வெற்றி. இந்தச் சங்கிலியில் கடைசியாக நிற்கும் மனிதர், பெரும்பாலும் ‘குரூப்-சி’ அல்லது ‘குரூப்-டி’ பணிகளில் இருப்பவர், செய்யும் வேலைகள் தனித்துப் பார்க்கும்போது அவ்வப்போது செய்யப்படும் அல்லது தேவையற்றப் பணி களாகத் தோன்றலாம். இருப்பினும், அவர்களின் அர்ப்பணிப்புமிக்க ஆதரவு இல்லையெனில், அறிவியல் முன்னேற்றத்திற்குத் தேவையான அடிப்படைப் பொருட்கள் மற்றும் தளவாடங்கள் நமது விஞ்ஞானிகளின் ஆய்வகங்களையும் சட்டசபைக்கூடங்களையும் சென்றடைவதில் தொய்வு ஏற்படும்.

28.4. பணி அங்கீகாரம் தொடர்பான விவகாரங்களில் இத்தகைய தனிநபர்களைப் புறக்கணிப்பது அல்லது பாகுபாடு காட்டுவது என்பது, இந்தியாவை நிலவுக்கும் அதற்கு அப்பாலும் கொண்டு சென்ற அந்த ஒட்டு மொத்தக் கூட்டு உணர்வையே குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகும். ஒரு மாதிரி முதலாளியாக இருக்கும் அரசு, மிக முக்கியமான தேசிய முயற்சிகளில் மறைமுகமாகவேனும் பங்களித்த தனது தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதி யினரை, தன்னிச்சையாகவோ அல்லது அலட்சியமாகவோ நடத்த முடியாது. அவர்களின் உழைப்பின் பலனைப் பெற்றுக்கொண்டு, அதே சமயம் அவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பணி அந்தஸ்து எனும் அடிப்படை மரியாதையைக்கூட மறுப்பது பொது வேலைவாய்ப்பில் நிலவ வேண்டிய நேர்மை மற்றும் கண்ணியத்தின் வேரையே அறுப்பதாகும்.

**இறுதி முடிவுகள்:**

29. மேற்கூறிய விவாதங்களின் அடிப்படை யில், எமது முடிவுகள் பின்வருமாறு சுருக்கிக் கூறப்படுகின்றன:

I. ‘கேங் லேபரர்ஸ் (அவ்வப்போது தேவைப் படும் பணிகளுக்கான வேலைவாய்ப்பு) திட்டம், 2012’ என்பது, தொழிலாளர்களை நிரந்தர அடிப்படையில் பணியமர்த்த வேண்டும் என்ற தீர்ப்பாயத்தின் உத்தரவுகளுக்கு முரணாக இருக்கும் வரையில், இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

II. இதன் விளைவாக, மேல்முறையீட்டாளர் களின் பணியை வரன்முறைப்படுத்தவும், அவர் களுக்கு 2010 செப்டம்பர் 9–ஆம் தேதி முதல் (திட்டத்தை வகுக்கத் தீர்ப்பாயம் நிர்ணயித்த காலக்கெடுவின் கடைசி நாள்) அமலுக்கு வரும் வகையில் நிரந்தர அந்தஸ்து வழங்கவும் எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடப்படுகிறது. இந்த நடவடிக்கையை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து நான்கு வார காலத்திற்குள் முடிக்க வேண்டும்.

III. தற்காலிக அடிப்படையிலான பணிய மர்த்தலை நோக்கமாகக் கொண்ட அந்தத் திட்டத்தின் பிரிவு 2, முந்தைய வழக்குச் சுற்றில் வழங்கப்பட்ட உத்தரவுகளுக்கு மாறாக இருப்ப தால், அதுவும் ரத்து செய்யப்படுகிறது.

IV. இந்தத் திட்டம் இறுதியான நீதித்துறை உத்தரவுகளின்படி உருவாக்கப்பட்டதால், இந்தத் தீர்ப்பின் பயன்கள் அந்தத் திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்ட இதே போன்ற நிலையில் உள்ள அனைத்து நபர்களுக்கும் பொருந்தும்.

30. அதன்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு பேராணை மனு எண். 31674/2019–இல் 2024 ஜூலை 8 அன்று வழங்கிய தீர்ப்பு ரத்து செய்யப் படுகிறது.

31. மேற்கூறிய நிபந்தனைகளுடன் இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

32. நிலுவையில் உள்ள இதர விண்ணப்பங்கள் (ஏதேனும் இருப்பின்) இத்துடன் முடிவு செய்யப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 38 ஆக உயர்வு: குடியரசுத் தலைவர் முர்மு ஒப்புதல்

உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கையை 38ஆக உயர்த்தும் மத்திய அமைச்சரவையில் முடிவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு 17.5.2026 ஒப்புதல் அளித்தார்.

உச்சநீதிமன்றத்தில் தற்போது தலைமை நீதிபதி மற்றும் 33 நீதிபதிகள் என்ற அளவில் நீதிபதிகளின் எண்ணிக்கையை 38–ஆக உயர்த்த மத்திய அமைச்சரவை கடந்த 5ஆம் தேதி ஒப்புதல் அளித்துள்ளது.

இந்நிலையில் மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவைத் தொடர்ந்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கையை உயர்த்தும் அவசர சட்டத் திருத்தத்துக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

அடுத்தக் கட்டமாக 4 நீதிபதி பணியிடங்களை அதிகரிக்கும் திருத்த மசோதா வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும் என்று கூறியுள்ளார்.

உச்சநீதிமன்ற சட்டம் (நீதிபதிகள் எண்ணிக்கை) 1956–இல் இயற்றப்பட்டபோது, உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி தவிர்த்து பிற நீதிபதிகளின் எண்ணிக்கை 10 என்ற அளவில் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டது. 1960–இல் திருத்தச் சட்டம் மூலம் எண்ணிக்கை 13–ஆகவும் அடுத்த சட்டத் திருத்தம் மூலம் நீதிபதிகள் எண்ணிக்கை 17–ஆகவும் உயர்த்தப்பட்டது.

பின்னர், 1986–இல் மீண்டும் திருத்தச் சட்டத்தின் மூலம் உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 17–லிருந்து 25–ஆக உயர்த்தப் பட்டது. பின்னர், 2009–இல் தலைமை நீதிபதி உள்பட பிற நீதிபதிகளின் எண்ணிக்கை 34–ஆகவும் உயர்த்தப்பட்டது.

**நன்றி : தினமணி 18.5.2026**

# வாடகை வசூலிப்பும் அதில் நீதிமன்றப் பங்கும்

**இந்திய உச்சநீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி ஜெ.பி.பார்திவாலா**
**மாண்புமிகு நீதிபதி ஆர்.மகாதேவன்**
**சி.அ.ம.எண் 9975/2025 - (நாட்குறிப்பு எண் 8323/2025)**
**7.4.2025**
**2025 INSC 467**

**ராஜீவ் கோஸ்** ...மனுதாரர்

**-எதிர்-**

**1. சத்யாநாராயண ஜெயஸ்வாஸ்** ...எதிர்வழக்கீட்டாளர்கள்

**ராம்நாத், அமித், யோக்யாஸ், மிஸ்ராக சந்தீப் மாலிக்**
**மனுதாரரின் வழக்கறிஞர்கள்**

சி.அ.ம. தள்ளுபடி.

## தீர்ப்பு

**ஜெ.பி.பார்திவாலா**

**ஆர்.மகாதேவன்**

1.சிறப்பு அனுமதி மனு முன்னிடுவதில் உள்ள காலத் தாழ்வு மன்னிக்கப்படுகிறது.

2. இந்த மனு கல்கத்தா உயர்நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணையில் இருந்து எழுகிறது. (உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு) 14.11.2024 தேதியிடப்பட்டது. FAT7/2024 உடனான மு.மே. எண் CANI/2024. இதன் மூலம் முன்னிடப்பட்ட மேல்முறையீட்டினால் மனுதாரர். இதன் மூலம் தள்ளுபடி செய்யப்படுகிறது. உரிமை மூல வழக்கு எண் 1068/2021இன் 2 டிசம்பர் 2023 தேதியிடப்பட்ட கல்கத்தா மாவட்ட நீதிமன்றத்தின் ஏஆம் ஆயத்தின் உரிமையியல் நீதிமன்றம் கல்கத்தாவில் பிறப்பிக்கப்பட்ட காலி செய்யும் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டு மனுதாரரால் முன்னிடப்பட்ட மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதால் மேல்முறையீடு முன்னிடப்படுகிறது.

3. வசதிக்காக இதில் மனுதாரர் முதன்மை எதிர்வாதியாகச் சுட்டப்படுவார் மற்றும் எதிர் வழக்கீட்டாளர் முதன்மை வாதி என்று சுட்டப் படுவார்.

4. இதில் காணப்படுவதாவது பதிவேட்டில் உள்ள பொருட்பாடு வாதி வழக்கில் உள்ள இடத்தின் சட்டப்படியாக சொந்தக்காரர். இதில் எதிர்வாதி தான் சட்டப்படியான வாடகைதாரர் என்று கோருகிறார். வாதி வழக்கு எண் 1068/2021இனை தொடுத்துள்ளார். அதாவது உடைமைகளை மீளப் பெறவும் எதிர்வாதிக்கு எதிராக இடைக்கால வருமானத்தையும் கோரியுள்ளார். எதிர்வாதியின் தந்தை இறந்த ரஞ்சன் கோஷ் ஒரு வாடிக்கையான வாடகைதாரர் அதாவது வாதியின் வழக்கில் உள்ள இடம் தொடர்பாக. இவர் மாத வாடகையாக ரூ.1,700/- மாநகர உள்ளடங்கலாக செலுத்தி வருகிறார்.

5. ரஞ்சன் கோஷ் முதல் வாடகைதாரர் 13.7.2016 அன்று இறந்துள்ளார். எதிர்வாதி ரஞ்ஜன் கோஷில் மகனாகத் தெரிகிறது. இவர் வழக்கில் சம்பந்தப்பட்ட இடத்தில் தந்தையின் இறப்புத் தேதி வரையில் வசித்து வந்துள்ளார்.

6. வாதி, 20 ஜுலை 18 தேதியிடப்பட்ட அறிவிப்பினை எதிர்வாதிக்கு சார்வு செய்துள்ளார். இதில் தெரியப்படுத்தியிருப்பதாவது 13.7.2016 அன்று முதன்மை வாடகைதாரரான ரஞ்சன் கோஷ் இறந்துள்ளதால், இவரது மகனாக உள்ளவர். அவர் இறப்பின்போது முறையான வாடகைதாரராக இந்த இணைப்புச் சொத்தில் தங்கியிருந்துள்ளார். இவர் இவரது சட்டப்படியான உரிமையின்படியான இந்த வாடகையை 5 ஆண்டுகள் தந்தையின் இறப்புத் தேதியிலிருந்து, அதாவது ரஞ்சன் கோஷ் இறந்த 13/07/2017 லிருந்து 5 ஆண்டுகள் பெற உரிமை கொண்டவர்.

7. அறிவிப்பு மேலும் தெரிவிப்பதாவது மேற்கு வங்காள இடங்களின் வாடகை சட்டம் 1997இன் பிரிவு 2(எ)இன்படி வாடகைதாரராகக் கருதப்பட முடியாது.

8. சொல்லப்பட்ட அறிக்கை எதிர்வாதியால் 21.7.2018 அன்று பெறப்பட்டுள்ளது. எனினும் எதிர்வாதி இது தொடர்பாக எந்த மனநிறைவான மறுமொழியையும் அளிக்கவில்லை.

9. மேலே சுட்டப்பட்ட இத்தகைய சூழ்நிலைகளில், வாதி உடைமையை மீளப்பெற உரிமை மூல வழக்கை தொடுக்க வேண்டியுள்ளது. எதிர்வாதி அவரது எழுத்து மூல விவர உரையினை முன்னிட்டுள்ளார் மற்றும் அதில் அவர் கூறியுள்ளதாவது, சில பொருண்மையினை ஏற்றுள்ளார். அதாவது இதில் எழுகிற சிலவற்றை எதிர்வாதி அவரது எழுத்து மூல விவர உரையில் ஏற்றுள்ளதாவது வாதியின் பின்வரும் கோரிக்கைகளை

(அ) எதிர்வாதி ஐயத்திற்கு இடம் தருகிற வகையில் ஏற்றுள்ளதாவது பத்தி எண் 10(அ)இல் அவரது எழுத்து மூல விவர உரையில் அதாவது ரஞ்சன் கோஷ் தனி வாடகைதாரர் அந்த தாவாவில் உள்ள சொத்திற்கு சொல்லப்பட்ட ரஞ்சன் கோஸ் 13.7.2016 அன்று இறந்துள்ளார். அவருக்குப் பின் எதிர்வாதியை வாரிசாகவும் சட்ட சார்பாளராகவும் விட்டுச் சென்றுள்ளார் மற்றும்.

(ஆ) எதிர்வாதி ஏற்றுள்ளதாவது வாதி இணைப்புச் சொத்தின் சொந்தக்காரர் மற்றும் வாதியின் வாடகையானது மே 2021 வரை செலுத்தப்பட்டுள்ளது.

10. மேற்சொல்லப்பட்ட எதிர்வாதியின் ஏற்புரைகளின் கருத்தில் மற்றும் எழுத்து மூல விவர உரையில், வாதி ஓர் விண்ணப்பத்தினை விசாரணை நீதிமன்றத்தின் முன்பு செய்துள்ளார். அதாவது உரிமை வழக்கு விசாரணை முறை தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 12இன் விதி 12இன்படி இந்த ஏற்புரைகளின்பேரில் தீர்ப்பாணை கோரியுள்ளார்.

11. வாதியினால் உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 12 விதி 6இன்படி முன்னிடப்பட்ட விண்ணப்பம் எதிர் வாதியில் எதிர்க்கப்பட்டு மறுமொழி முன்னிடப் பட்டது அது பின்வருமாறு படிக்கப்படுகிறது.

“1. சொல்லப்பட்ட விண்ணப்பம் சட்டத்தின் படியோ அல்லது பொருண்மைகளின் பேரிலோ வைத்து வரத்தக்கதல்ல மற்றும் இது சரியற்றது. அலைக்கழிப்பானதும், காலத்தாழ்வு ஏற்படுத்துமானது இதற்கு ஆதாரமோ அடிப்படையோ இல்லை. இது காரணமற்றது தவறான புரிதலை ஏற்படுத்தக் கூடியது. எனவே சொல்லப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கத்தக்க தாகும். அதாவது எதிர்வாதிக்கு செலவுத் தொகையுடன்.

2. இந்த வாதுரைகளில், எந்த ஏற்புரையும் இல்லை. அதாவது எதிர்வாதிகள் சார்பாக, உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் ஏற்புரை என்னும் சொற்றொடரை பொருள்வரை செய்யப்படவில்லை. இந்திய சான்றுச் சட்டத்தின் பிரிவு 17 ஏற்புரை என்பதை பொருள்வரையறை செய்துள்ளது. ஏற்புரை ஒரு விவர உரையாக வாய்மொழி ஆவணமாக அல்லது மின் அணுகுமுறையை இதன் மூலம் ஒரு பொருண்மையை அறியக் கூடிய ஒரு பிரச்சினை அல்லது பொருண்மை இந்திய சான்றுச் சட்டத்தின் பிரிவு 23 உரிமை வழக்குகளில் எத்தகைய சூழ்நிலைகளில், ஏற்புரை தொடர்புற்றதால் அமையும் என்பது பற்றியது. எனினும், இந்த வரம்புரையின் பிரிவு கூறுவதாவது நீதிமன்றத்திற்கு உளத்தேர்வின் படியான அதிகாரம் உள்ளது. அதன்படி கூறப்பட்ட ஏற்புரையின் பொருண்மைகளை பிறமுறையில் மெய்ப்பிப்பை பெறுவது தொடர்பாக. இதில் கவனிக்க வேண்டியது. இந்த விதி வகை செய்வதாவது, நீதிமன்றம் இந்த ஏற்புரையின் அடிப்படையிலாவது, இதில் சட்ட உட்கருத்தாவது, நீதிமன்றத்திற்கு அதன் உளத் தேர்வின்படி செயற்படுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏற்பிரையின் மீதான தீர்ப்பு உரிமை என்ற அடிப்படையில் தெளிவாக்கப்பட முடியாது. சட்ட உட்கருத்தாவது மேலும், கட்டளை

6இன் விதிக்குள் வரம்புரையின் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்த வரம்புரையின் வகை செய்யப்பட்டிருப்பதாவது இதில் ஒரு பொருண்மை ஏற்கப்பட்டிருக்கிறவிடத்து, அதாவது ஏற்புரையின்படி நீதிமன்றம் இதை தீர்மானிக்கும் உளத்தேர்வு அதிகாரத்தை கொண்டிருக்கும் ஏற்கப்பட்ட பொருண்மையை வேறுவகையில் மெய்ப்பிக்க கோருவதற் கானதும்.

3. எதிர்வாதி கூறுவதாவது, கூறப்பட்ட வழக்கில், பொருட்டான பிரச்சினைகள் உள்ளதாக. எனவே இவை விசாரிக்கப்படத்தக்கதாகும். நீதிமன்ற மானது, உ.வி.தொ.ச.இன் கட்டளை 12, விதி 6இன்படி, தீர்ப்பாணை பிறப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகாது. இந்த வழக்கை நியாயமாக வகை செய்வதற்கு இதில் முழுமை யான விசாரணை நடத்தப்படுவது தேவைப் படுகிறது மற்றும் எதிர்வாதிக்கு வாய்ப்பு ஒன்று அளிக்கப்படுதல் வேண்டும். அதில் நீதியின் நலனுக்கான சான்றை அளிக்கவும் கோரப் பட்டது. சொல்லப்பட்ட விண்ணப்பம் முதலெ டுப்பிலேயே நிராகரிக்கப்பட்டுள்ளது.

4. விவர உரைகளின் சுட்டுகையில் பத்தி எண் 1,2, 3 சொல்லப்பட்ட விண்ணப்பத்தில் எதிர்வாதி மறுப்பதாவது, பதிவேடுகளின் பொருட் பாட்டினை அறிந்தும் வாதியை கடுமையான மெய்ப்புப்புகளின்பேரில் விசாரிக்க கோருவது.

5. பத்திகள் எண் 5, 6இல் சொல்லப்பட்ட உரைகளின் சுட்டுகை தொடர்பான விண்ணப்பம் எதிர்வாதி மறுப்பது பதிவு செய்யப்பட்ட பொருட் பாடுகளுடன் பதிவேடுகளை வாதியின் வாதி கூறுவதாவது, அவரது எழுத்துமூல விவர உரை, நீதிமன்றத்தில் முன்னிடப்பட்டது. உறுதியாக எதிர்க்கப்பட்டது. இதில் வாதியால் கூறப்பட்டவை. சான்றுகளின்பேரில், இந்த வழக்கின் தரப்பினர் களால் மெய்ப்பிக்கப்பட்ட வேண்டியுள்ளது.

6. பத்தி என் 7இல் சுட்டப்பட்ட விவர உரை, சொல்லப்பட்ட விண்ணப்பம், எதிர்வாதி எதிர்ப்ப தாவது, எவை பதிவேட்டில் உள்ள பொருட்பாடுகள் என்பது பற்றி அதாவது சில நீங்கலாக.

7. பத்தி எண் 8இல் சுட்டப்பட்ட விவரங்கள் சொல்லப்பட்ட விண்ணப்பம், எதிர்வாதி இதனை யும் எதிர்க்கிறார்.

8. விவர உரையில் சுட்டப்பட்ட பத்தி எண் 9இல் சொல்லப்பட்ட விண்ணப்பம் பற்றியும் எதிர்வாதி மறுக்கிறார் மற்றும் அந்த பொருட் பாடுகள் தொடர்பாக. பதிவேடுகளில் கட்டாய மெய்ப்பிப்பை வாதியிடம் கோருகிறார்.

9. விவர உரையின் பத்தி எண் 10, 11, 12களில் சுட்டப்பட்ட சொல்லப்பட்ட விண்ணப்பம் பற்றி எதிர்வாதி மறுக்கிறார். எதிர்வாதி மறுப்ப தாவது அவர் அந்த வாதுரைகளில் எதனையும் ஏற்கவில்லை என்பதும், அவரால் கூறப்பட்ட வாறு எதிர்வாதி ஒரு அத்துமீறல்காரர் என்பதும், வேறு வகையில், அவர் உறுதியாகக் கூறுவ தாவது அவர் ஒரு வாடகைதாரர். அதாவது வழக்கின் இடத்தைப் பொறுத்தவரை மற்றும் அவர் வாதியிடம் வாடகை செலுத்தியுள்ளார். அதாவது தாவாவில் உள்ள இடம் தொடர்பாக. மேலும், எதிர்வாதி W.B.P.T. சட்டத்தின் பிரிவு 7(1), 7(2)இன்படி விண்ணப்பம் ஒன்றினை முன்னிட்டுள்ளார். அதாவது அப்போதைய வாடகையையும் வாடகை நிலுவை ஏதேனும் கொடுபட உள்ள இருப்பின் அதனையும் செலுத்துவது தொடர்பாக மற்றும் இதன் விண்ணப்பங்கள் இந்த நீதிமன்றத்தின் முன்பு நடப்பில் உள்ளன. எதிர்வாதி கூறுவதாவது இந்த வழக்கின் பொருண்மைகள் வாதுரையில் குறிப்பிடப்பட்டவாறு நீதிமன்றத்தால் இவை கருதுகை செய்யப்பட வேண்டும். நீதியின் நலனுக்காக இவை முழுவதும் கருதுகை செய்யப் பட்டு வழக்கின் செயற்படு பொருள் இந்த பொருண்மைகளின் தொகுப்பில் எழுவ தாகும். எதிர்வாதி தான் தாவாவில் உள்ள இடத்தை துய்த்து வந்ததாக எங்கும் வாதுரை யில் கூறவில்லை. எனவே, சான்று எதனையும் எடுக்காமல் சொல்லப்பட்ட வழக்கில், உரியவாறு விசாரிக்கப்பட முடியாது. எனவே, சொல்லப்பட்ட விண்ணப்பம் செலவுத் தொகையுடன் நிராகரிக்கப் படத்தக்கதாகும்.

சொல்லப்பட்ட விண்ணப்பம் செலவுத் தொகையும் நிராகரிக்கப்பட கோரப்படுகிறது.

12. விசாரணை நீதிமன்றம் விண்ணப்பம் பற்றி விசாரணை செய்தது மற்றும் அறுதியில் வழக்கில் தீர்ப்பாணை பிறப்பித்தது. அதாவது எதிர்வாதியால் செய்யப்பட்ட குறிப்பிடப்பட்ட ஏற்புரை தொடர்பாக.

13. விசாரணை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப் பட்ட தீர்ப்பாணையினால் மன நிறைவடையாத எதிர்வாதி ஏற்புரைகள் பற்றி இதனை உயர் நீதிமன்றத்தில் F.A.T. எண் 7/2024இனை முன்னிட்டுள்ளார். உயர்நீதிமன்றம் F.A.T.யினைத் தள்ளுபடி செய்து பின்வருவனவற்றை கூறி யுள்ளது.

“12. சொல்லப்பட்ட கூறுக்கிணங்க, முதன்மை வாடகைதாரரின் சட்ட வாரிசு அவள் முதன்மை வாடகைதாரரின் மனைவியாக இருந்தாலன்றி, அவள் வாடகைதாரராக இருக்க உரிமை யுடையவன் ஆகார். [அதாவது வாடகைதாரர் என்றும் பொருள் வரையறைக்குள் பிரிவு 2 (9)இன்படி] அத்தகைய தகுதியில் தொடர்வது. அதாவது முதன்மை வாடகைதாரரின் இறப்பிற்குப் பின் 5 ஆண்டு காலத்திற்கு.

13. எனவே, எதிர்வாதி, எழுத்து மூல விவர உரையில், அவர் முதன்மை வாடகைதாரரை சார்ந்தவர் என்பதை கூடாதபோது, இதனால் அவருடைய வாடகைக் காலம் வாடகைதாரராகக் குறைக்கப்படலாம். அதேநிலையில் தொடர்வதில் எதிர்வாதி ஒரு சார்ந்தவர். அதாவது முதன்மை வாடகைதாரரின் மகள். எனவே இவர் வாடகை தாரர் நிலையை இருத்தி வைத்துக் கொள்ளும் உரிமை கொண்டவர். எதுவும் முதன்மை வாடகைதாரரின் இறப்பிற்குப் பின்னர் 5 ஆண்டு காலம் முடிவடையும் வரையிலும்.

14. எழுத்துமூல விவர உரையின் வாதங்களி லிருந்து சொல்லப்பட்ட காலம் வழக்கு முன்னிடும் நேரத்திற்கு முன்பே முடிவுற்று இருந்தது. முதன்மை வாடகைதார ரான அவரது தந்தை ரஞ்சன் கோஷ் ஜுலை 13, 2016 இறந்துள்ளார் என்பதால்.

15. மேலும் இதில் ஏற்றுக் கொள்ளப்படாத வாறு, இந்த எழுத்து மூல விவர உரையில் நிலச் சொந்தக்காரர்/வாதி சரியாகவே வாடகையைப் பெறுவதை நிறுத்தியுள்ளார். அதாவது மே 2021க்குப் பின்னர் எதிர்வாதியிடமிருந்து அதாவது முதன்மை நிலச் சொந்தக்காரரின் இறப்பில் இருந்து ஐந்து ஆண்டு காலத்திற்குப் பின்னர்.

16. எனவே, எழுத்து மூல விவர உரையில் உள்ள வாதுரையில் போதிய காரணிகள் உள்ளன. அதாவது எதிர்வாதியை 1997 சட்டத்தின் பிரிவு 2(எ) பிரிவிற்குள் கொண்டு வருவதற்கு.

17. இதில் தெளிவாக்கப்பட்ட வேண்டிய தாவது நன்கு ஏற்கப்படுகிற சட்டமாவது, சட்டவாதமாவது வாதுரையில் வாதிக்கப்பட்ட வேண்டியதில்லை. அதாவது வாதுரை மூலமாக அல்லது எழுத்து மூல விவர உரை மூலமாக.

18. இவ்வாறு, எதிர்வாதி, குறித்துரைத்து வாதிக்க வேண்டியது இல்லை. 1997 சட்டத்தின் பிரிவு 2(g) பொருந்துவது. வாதிக்கும் நோக்கத்திற் காக என்பதில் ஏற்புரை என்னும் நிலையைப் பெறும். தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 12 விதி 6இன்படி. இதில் போதுமானதாவது, தற்போதைய வழக்கில், இதில் தேவையான காரணிகள் பொருட்பாட்டின்படி 2(g)வினை நிறைவு செய்தல் வேண்டும். இவை எழுத்து மூல விவர உரையில் வாதிக்கப் பட்டுள்ளன. இது ஒரு ஏற்புரையாகக் கொள்ளப் படுகிற அளவிற்கு. இதில் எதிர்வாதி பிரிவு 2(எ)இன் நோக்கெல்லைக்குள் வருகிறார்.

19. இந்த வழக்கில் சுருக்கமாக.

20. 1997 சட்டத்தின் பிரிவு 2(g) இக்குள் வருகிற நேர்வில் எதிர்வாதி, தொடர்பாக. விசாரிக்கப் படத்தக்கதாக எதுவும் இல்லை. ஏனெனில், எதிர்வாதி தன்னிச்சையாகவே அத்து மீறியவராக கருதப்படுவார் மற்றும் வாதி உடனடியாக காலி செய்யும் தீர்ப்பாணையைப் பெற உரிமை யுடையவர் ஆவார். மேலுமான தனிப்பட்ட உரிமைகள் எதிர்வாதியின் கோரப்பட உள்ளதாக இல்லாதபோது.

21. எதிர்வாதி எழுத்துமூல விவர உரையில் அவரது தந்தை மூலமாக அதாவது முதன்மை வாடகைதாரர் மூலமாக அதாவது முதன்மை வாடகைதாரர் மூலமாக கோருகிற உரிமை வாதுரையில் புதிய வாடகை பற்றிய பேச்சு, எதிர்வாதி சார்பாக வழங்கப்படலாம் என்பது எழுப்பப்படவில்லை. அதாவது எந்தப் பக்கத்தி லிருந்தும் சொல்லப்பட்ட வாதுரை புதிய வாடகை ஏற்படுத்துவது பற்றி எதுவும் கூறப்படவில்லை அவ்வாறே புதிய வாடகை எதிர்வாதி சார்பாக ஏற்படுத்தப்பட்டிருக்குமானால் இந்த வழக்கு வேறு விதமாக அமையும்.

22. எனவே, விசாரணை நீதிபதி 1999 சட்டத்தின் பிரிவு 2(எ) உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 12 விதி 6 உடன் சேர்த்து படிக்கப்பட்டவாறு செயற் படுத்துவது நியாயமானதாகவே அமையும். இதன்படி வாதி தன்னிச்சையாகவே காலி செய்வ தற்காக தீர்ப்பாணையைப் பெற உரிமை யுடையவர் ஆவார் என்பது. அதாவது ஏற்கப்பட்ட தீர்ப்பின்வழி.

23. அத்தகைய கருத்துப் பற்றிய பொருட்பாடு, எதிர்க்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை இடையீடு செய்வதில் எந்த நியாயமும் உள்ள தாக நமக்கு தெரியவில்லை.

24. அவ்வாறே தள்ளுபடியாகிறது. அதன் படி டிசம்பர் 2, 2023 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படுகிறது. இவை உரிமை மூல ஆவண வழக்கு எண் 1068/ 2021இல் கல்கத்தா மாவட்டத்தில் 5ஆம் நீதியர் ஆயத்தில் உரிமையியல் நீதிமன்றம் கல்கத்தா வில் பிறப்பிக்கப்பட்டது.

25. செலவுத் தொகை பற்றி எந்த ஆணை யும் இல்லை.

26. இன்று வரை மேல்முறையீடு நடப்பில் உள்ளதை வைத்து எதிர்வாதி/மேல்முறை யீட்டாளர்கள் மேலுமான 3 மாத காலம். இந்த இடத்தை காலி செய்வதற்காக அளிக்கப்படுகிறது. அதாவது வாதி/எதிர்வழக்கீட்டாளர் சார்பாக. நிறைவேற்றுதல் நடப்பில் உள்ளதால் இக் காலத்திற்கு இது இவ்வாறே இருக்கும்.

27. எதிர்வாதி/மேல்முறையீட்டாளர் இடத்தை சொல்லப்பட்ட காலத்திற்கும் காலி செய்யா திருக்கும் நேர்வில், வாதி/தீர்ப்பாணை பெற்றவர். நிறைவேற்றுதல் வழக்கில் மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சுதந்திரம் கொண்டவர் மற்றும் இது நிறைவேற்றுதல் நீதிமன்றத்தால் சீக்கிரமாகவே மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சுதந்திரம் கொண்டவர் மற்றும் இது நிறைவேற்றுதல் நீதிமன்றத்தால் சீக்கிரமாகவே மேற்கொள்ளப்படும்.

28. இடைநிலை ஆணை, ஏதேனும் இருப்பின் அது காலி செய்யப்படுகிறது.

29. அவ்வாறே வழக்கமான தீர்ப்பாணை பெறப்படுகிறது.

14. இத்தகைய சூழ்நிலைகளில் மேலே சுட்டப்பட்டவாறு, எதிர்வாதி இங்கு நீதிமன்றத்தின் முன்பு தற்போதைய மனுவை முன்னிட்டுள்ளார்.

15. நாங்கள் மனுதாரர் சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ராம்நாத் ஜா என்பவரின் வாதங்களை கேட்ட றிந்தோம்

16. 1997 சட்டத்தின் பிரிவு 2(எ) பின் வருமாறு படிக்கப்படுகிறது.

**பொருள்வரையறைகள்**: இந்தச் சட்டத்தில் பொருளுக்கு அல்லது சூழ்நிலைக்கு முரணாக எதுவும் இருந்தாலன்றி.

(எ) வாடகைதாரர் என்பது, ஆள் எவராலும் அல்லது அவர் கணக்கில் அல்லது சார்பாக இடம் ஏதொன்றின் வாடகை எதுவும் அல்லது ஒரு சிறப்பு ஒப்பந்தத்திற்காக, செலுத்தப்படுகிறதோ மற்றும் அது, தொடர்ந்து உடைமையை வைத்தி ருப்பவர் உள்ளடங்கலாக, அவரது வாடகைக் காலம் முடிவுற்ற பின்னர் மற்றும் வாடகை தாரரின் இறப்பு ஏற்படும் நேர்விலும் இதனை யும் உள்ளடக்குவதாக அத்தகைய வாடகை தாரரின் இறப்பு தேதிருந்து ஐந்து ஆண்டு களுக்கு மிகாத ஒரு காலத்திற்காக இந்தச் சட்டம்

செயற்பாட்டிற்கு வருகிற தேதியி லிருந்து இவற்றில் எது பிந்தியதோ அதிலிருந்து அவரது பிணை மகன், மகள் பெற்றோர் மற்றும் இறந்து போன மகனின் மனைவி, சாதாரணமாக வாடகைதாரருடன் வசித்து வருபவர். அதாவது வாடகைதாரரின் இறப்பு போன மகளின் மனைவி, சாதாரணமாக வாடகை தாரருடன் வசித்து வருபவர். அதாவது வாடகை தாரரின் இறப்பு தேதி வரை உடன் வசித்து வந்த அவரது குடும்பத்தினரான மற்றும் அவரைச் சார்ந்தி ருந்தவர்கள் மற்றும் அவர்களுக்கு சொந்தமாக அல்லது வேறு தங்களுடைய வசதியில்லாத வர்கள் மற்றும் இடங்கள் வாழ்வதற்கல்லாது பிற நோக்கங்களுக்காக இடம் விட்டிருப்பவர்கள் அவரது பிணை போன்ற மகள் மற்றும் பெற்றோர் வாடகைதாரருடன் அவரது இறப்பிற்கு முன்பு அவரது குடும்ப வாடகைதாரருடன் அவரது இறப்பிற்கு முன்பு அவரது குடும்ப உறுப்பின ராக அவருடன் வசித்து வந்த அவரை சார்ந்தவர் கள் அல்லது வாடகைதாரரால் அதிகாரமளிக்கப் பட்டவர் அவரது உடைமையில் அந்த இடத்தில் இருந்து வந்தனர். ஆனால் தகுதி வாய்ந்த அதிகார வரம்பு பெற்ற நீதிமன்றத்தினால் எவருக்கு எதிராக காலி செய்யும் தீர்ப்பாணை அல்லது ஆணை வழங்கப்பட்டுள்ளதா அவரை உள்ளடக்காது.

**வரம்புரையாக**: வாடகைதாரரின் பிணைக்கு கால வரம்பான 5 ஆண்டு என்பது பொருந்தாது. அதாவது அவருடன் சாதாரணமாக வாழ்ந்து வந்த பிணைக்கு அதாவது அவரது இறப்பு வரை அவரது குடும்ப உறுப்பினராக இருந்தவர்க்கு பொருந்தாது மற்றும் அவரை சார்ந்தவரா யிருந்து, அவருக்கு சொந்தமான தங்கும் வசதியுடைய இடம் இல்லாதபோது.

**மேலும் வரம்புரையாக**: இந்த வாடகை தாரருக்கு முன்பே இறந்த ஆண்மகனின் மனைவி அல்லது பெற்றோர் மகள், மகன் இவர்கள் சாதாரணமாக வாடகைதாரருடன் அந்த இடத்தில் அவரது இறப்புத் தேதி வரை அவரது குடும்ப உறுப்பினராக இருந்து அவரை சார்ந்தவர் மற்றும் அவருக்கு சொந்தமான அல்லது தங்குமிடம் எதுவும் இல்லாதபோது, அவருக்கு வாடகைதாரராக இருக்க முன்னுரிமை அளிக்கப்படும். புதிய உடன்படிக்கையில் அந்த இடம் தொடர்பாக நியாய வாடகை செலுத்தம் நிபந்தனையின்பேரில், இந்த வரம்புரை வாழ்வ தற்கல்லாத பிற நோக்கத்திற்காக வாடகைக்கு விடப்பட்ட இடங்களுக்கும், தேவையான மாற்றங் களுடன் பொருந்துதல் வேண்டும்.

17. இவ்வாறு மேலே சுட்டப்பட்ட பிரிவு 2(எ) வினைப் படிப்பதில் சுட்டப்படுவதாவது இதில் குறிப்பிடப்பட்டவாறு சார்ந்துள்ள வாரிசுதாரர். அதாவது முதன்மை வாடகைதாரரின் அவன் முதன்மை வாடகைதாரரின் விதவையாக இருந்தாலன்றி வாடகைதாரராக தொடர்ந்து இருக்க உரிமையுடையவர் ஆகார். வாடகைதாரர் என்று பொருள் வரையறைக்குள் வருகிற பிரிவு 2(எ) அத்தகைய தகுதியில் 5 ஆண்டு காலத்திற்கு அதாவது முதன்மை வாடகைதாரர் இறந்த பின்னர் 5 ஆண்டுகள் வாடகைதாரராக தொடரலாம்.

18. கையில் உள்ள வழக்கில் எதிர்வாதி முதன்மை வாடகைதாரரின் மகன். இதில் பூசலாக்கப்படாதது அவர் வாடகைதாரராகத் தொடரக் கோருவது. அதாவது வழக்கில் உள்ள இடத்தில் தந்தை மூலமாக அதாவது முதன்மை வாடகைதாரர் மூலமாக.

19. உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்பு சட்டத்தின் கட்டளை 12 விதி 6 பின்வருமாறு படிக்கப்படுகிறது.

**6. ஏற்புரையின் பேரிலான தீர்ப்பு**: (1) பொருண்மைகள் வாதுரையில் கூறப்பட்டது அல்லது வேறுவகையிலானது. ஏற்கப்படுகிற விடத்து, நீதிமன்றமானது, வழக்கின் எந்த நிலை யிலும், தரப்பினர் எவரின் விண்ணப்பத்தின் பேரில் அல்லது தானே முற்பட்டு தரப்பினர்களுக் கிடையே வேறு எந்த கேள்வியும் தீர்மானிக்கப் படுவதற்கு காத்திராமல், அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கும் அல்லது அத்தகைய தீர்ப்பை தான் தக்கதெனக் கருதுகிறவாறு, அத்தகைய ஏற்புரைகள் படி பிறப்பிக்கும்.

(2) உள்விதி (1)இன்படி தீர்ப்பு ஒன்று விளம்பப்படுகிற போதெல்லாம், தீர்ப்பிற் கிணங்க தீர்ப்பாணை ஒன்று பிறப்பிக்கப்பட வேண்டும் மற்றும் அந்த தீர்ப்பாணை அந்த தீர்ப்பு விளம்பப்பட்ட தேதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சட்ட மாற்றங்கள்**

1976 உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் (திருத்தச்) சட்டத்தினால் பின்வரும் மாற்றங்கள் செயற்பாட்டிற்கு கொண்டு வரப் பட்டன.

(1) முன்பிருந்த விதி 6 மாற்றாக அமைக்கப் பட்டு மறு அமைப்பாக உள் விதி (1) செய்யப் பட்டது மற்றும்

(2) உள் விதி (2) புதிதாகப் புகுத்தப்பட்டது.

**திருத்தங்களின் நோக்கம்**

21. முதன்முதலில் விதி 6 எழுதப்பட்டவாறு நீதிமன்றம் தீர்ப்பினை அல்லது ஏற்புரையை வெளியிட்டது. இது வாதுரையில் அல்லது ஏற்புரையை வெளியிட்டது. "இது வாதுரையில் அல்லது வேறு வகையிலானது" இது பின் வருமாறு படிக்கப்படுகிறது.

6. ஏற்புரைகளின்பேரில் தீர்ப்பு: தரப்பினர் எவரும் வழக்கின் எந்த நிலையிலும், பொருண்மை கள் ஏற்கப்பட்டிருக்கிறவிடத்து, அவை வாதுரை யின்பேரில் அல்லது வேறு வகையில், உள்ள போது, அத்தகைய தீர்ப்பிற்காக அல்லது ஆணைக்காக விண்ணப்பிக்கும் அதாவது அவர் கூற உரிமை பெற்று ஏற்புரைகளின் பேரில், அதாவது தீர்ப்பானிப்பதற்காக காத்தி ராமல் தரப்பினர்களிக்கிடையேயான பிற கேள்விகள் எதனையும் மற்றும் நீதிமன்றமானது அத்தகைய விண்ணப்பத்தின்பேரில், நீதிமன்றம் நியாயமான கருதுகிற இத்தகைய ஆணையை அல்லது தீர்ப்பினை வழங்கும்.

22. சட்ட ஆணையம், இந்த வகைமுறையை கருதுகை செய்தது. ஏற்புரை பற்றி தெளிவாக்கும் கருத்துடனும் மற்றும் நீதிமன்றத்திற்கு தாமே முற்பட்டு தீர்ப்பு வழங்க அதிகாரமளிப்பதாகவும், அத்தகைய தீர்ப்பின் பேரில், தீர்ப்பாணை ஒன்றை ஏற்படுத்த விதியை திருத்தப் பரிந்துரை செய்யப்படுகிறது. இதில் கூறப்பட்டதாவது.

கோரிக்கை: ஒன்று ஏற்கப்படுகிறவிடத்து, வாதிக்காக ஒரு தீர்ப்பினை பிறப்பிக்க கட்டளை 12 விதி 6இன்படி ஒரு நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளது மற்றும் ஒரு தீர்ப்பாணையை ஏற்கப்பட்ட கோரிக்கையின்பேரில் பிறப்பிக்க (இதில் வாதிக்கு வழக்கை மேல் நடத்தும் சுதந்திரத்துடன் சாதாரண வழியில் எஞ்சிய கோரிக்கைக்காக)

இந்த விதியின் நோக்கம், தரப்பினருக்கு விரைவாக தீர்ப்பினை பெற இயல்விப்பது குறைந்தது உய்தியளவுக்கு, எதிர்வாதிகளின் ஏற்புரைக்கிணங்க வாதி உரிமையுடையது தொடர்பாக. விதியானது மிகவும் விரிவானதாக உள்ளது. வாய்மொழி ஏற்புரையையும் உள்ள டக்குவதாக சொற்களின் பயன்பாடு அல்லது வேறுவகை என்பது. 6ஆம் விதியில் உள்ளது. எழுத்துமூலமாக என்னும் சொற்கள் இல்லாது இது கட்டளை 12 விதி 1இல் பயன்படுத்தப் படுவது மூலம் அறியப்படுவது வாய்மொழி ஏற்புரையின்பேரிலும் தீர்ப்பு அளிக்கப்படலாம் என்பது. இதனை வகைப்படுத்துவது தொடர்பாக. பொருள்கோள் செய்வது விரும்பத்தக்கது. இதில் குறிப்பிடப்படலாகிறதாவது தற்போதைய விதியின்படி ஏற்புரையின் பேரிலான தீர்ப்பு ஓர் விண்ணப்பத்தின்பேரில் ஏற்புரை பிறப்பிக்கப் படலாம். வட்டார திருத்தத்திற்கிணங்க நீதிமன்றம் விண்ணப்பத்தின்பேரில், தரப்பினர் எவரும் அல்லது தானே முற்பட்டு, அத்தகைய ஆணை அல்லது தீர்ப்பினை அளிக்கலாம். இது ஒரு உபயோகமான திருத்தம். எனவே, ஏற்கப்பட வேண்டியது.

நமது கருத்துப்படி, ஒரு தீர்ப்பு ஏற்புரையின் பேரிலானது பின்னர் வருவதே ஒரு தீர்ப்பாணை சட்ட ஆணையத்தின் 54ஆம் அறிக்கை ப.145 பார்க்க.

23. நோக்கங்கள் மற்றும் காரணங்களின் விவர உரை இதில் கூறப்பட்டதாவது.

“விதி 6இன் கூறு 65இன் உள் கூறு (ii)இன்படி, கோரிக்கை ஒன்று ஏற்கப்படுகிற விடத்து, வாதிக்காக தீர்ப்பு ஒன்றினை பதிவு செய்ய நீதிமன்றத்திற்கு அதிகார வரம்புள்ளது மற்றும் அதில் தீர்ப்பாணை ஒன்றை ஏற்கப்பட்ட கோரிக்கையின்பேரில் பிறப்பிக்கும். விதியின் நோக்கம் தரப்பினருக்கு விரைந்து தீர்ப்பை பெற இயல்விப்பதாகும். குறைந்த பட்சம் அதற்கான உய்தியை பெறுதல். எதிர்வாதியின் ஏற்புரைக் கிணங்க பெறுதல் வாதிக்கு உரிமையுள்ளது. இந்த விதி விரிவானது. இதில் வாய்மொழி ஏற்புரைகளும் அடங்கும். இந்த விதியானது திருத்தப்பட்டதே வாய்மொழி ஏற்புரையை ஏற்பது தொடர்பாக. தெளிவை ஏற்படுத்தவே இந்த விதி அதனை உள்ளடக்குவது பற்றி” (இந்திய அரசிதழில் கூறுகள் பற்றிய குறிப்புகள் 8.4.1974 தேதியிடப்பட்ட பகுதி (ii) பிரிவு 2 சுகு ப. 316 பார்க்க)

24. விதி 6(i) ஏற்புரைகளின்பேரில் தீர்ப்பினை வெளியிட நீதிமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது. ஏற்புரைகள் தரப்பினர்களால் செய்யப்படுவது பிற கேள்விகள் தீர்மானிக்கப்படுவதற்காக காத்திராமல்.

25. விதி 6(2) கூறியுள்ளதாவது தீர்ப்புக் கிணங்க தீர்ப்பாணையானது பிறப்பிக்கப்படுதல் வேண்டும் என்பது.

26. விதி 6இன்படி உள்ள முதன்மை நோக்கமே விரைந்து தீர்ப்பினை தரப்பினர்களை இயல்விப்பதற்கானது. குறைந்தது ஏற்புரை என்னும் அளவுக்கு வாதி ஒரு குறிப்பிட்ட உய்தி அல்லது உய்திகளை கோருகிறவிடத்து அது எதிர்வாதிக்கு எதிராக உள்ள போதும் எதிர்வாதி ஏற்புரையை செய்வார். பிந்தியவர் உய்தி அல்லது உய்திகளுக்கு உரிமையுடையவர் ஆவார். அதாவது பிந்தியவரால் ஏற்கப்பட்டவை தொடர்பாக (உத்தம்சிங் –எதிர்– யுனைடெட் வங்கி இந்தியா 2000 (7) உச்.நீ.வ. 120 பார்க்க)

27. விதி 6இன் திருத்தத்தின் நோக்கங்கள் மற்றும் பரிகாரங்கள் பற்றிய விவர உரையில் கண்டறியப்பட்டவாறு “கோரிக்கை ஒன்று ஏற்கப் படுகிறவிடத்து வாதிக்காக நீதிமன்றத்திற்கு தீர்ப்பாணையைப் பிறப்பிக்கும். இந்த விதியின் நோக்கமே விரைவில் தீர்ப்பினை தரப்பினர் பெறுவதற்கு அவர்களை இயக்குவிப்பதாகும். குறைந்த அளவில் பரிகார அளவுக்கு பெறுவ தற்கு அதாவது எதிர்வாதிகள் ஏற்புரைகளுக் கிணங்க, வாதிக்கு பெற உரிமையுடையவற்றும் பெறுவதற்கு இயல்விப்பது.

28. விதி 6இன் வகைமுறைகள், இயல்விக்கும், உளத்தேர்வில்படியானால், அனுமதிக்கத்தக்கது மானவை. இவை கட்டாயமானதல்லது அல்லது கடப்பாடுகள் ஆனதோ அல்லது எதிர்பார்ப்பு டனானதோ அல்ல. இது இந்த விதியில் பயன் படுத்தப்பட்டுள்ளது செய்யலாம் போன்ற சொற்களில் பயன்பாட்டிலிருந்து அறியலாம்.

29. நீதிமன்றத்திற்கு இந்த விதியின் மூலம் வழங்கப்பட்டுள்ளது அதிகாரங்கள் செயலில் தடங்கல் செய்யாதவை மற்றும் இவை உறுதி யான விதியாக செய்யப்பட முடியாதவை. இவை பொதுவாக பொருந்தக் கூடியவை. இவை செயற்படுத்தப்படுவதற்கு இதன் பொருண்மை களை கவனித்துக் கொள்வதுடன் ஒவ்வொரு வழக்கின் மாறுபட்ட சூழ்நிலைகளையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

30. நீதிமன்றம், ஏற்புரைகளின்பேரில் தீர்ப்பினைப் பிறப்பிப்பது சரியானதாக அமையாது என்று கருத்துக் கொள்ளுமானால், அல்லது வழக்கில் உரியவாறு வகை செய்யப்பட முடியாது. கேள்விகள் உள்ளடங்கியுள்ளதாகக் கருதுகிற போது இவை ஏற்புரையின் அடிப்படை யில் தீர்மானிக்கப்பட முடியாதபோது, இது தனது உளத்தேர்வினைப் பயன்படுத்தி, தீர்ப்பு ஒன்றினை பிறப்பிக்க மறுக்கும் மற்றும் ஏற்கப் பட்ட பொருண்மையின் பற்றியும் தெளிவான மெய்ப்பிப்பை வலியுறுத்தலாம்.

31. ஏற்புரையின்பேரில் ஆணையிட அல்லது தீர்ப்பினை வெளியிடுவது என்பது. நீதிமன்றத்தின் உளத்தேர்வின்படியானது விதி 6(எ)இல் செய்யப் படலாம் போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது

மற்றும் இதில் கட்டாயமாக என்று வலியுறுத்தும் சொல் பயன்படுத்தப்படவில்லை இது. முதல் நிலையிலேயே தெரியப்படுத்துவதாவது. இந்த வகைமுறை ஒரு இயல்விக்கும் வகைமுறை கட்டளை 12 விதி 6 கட்டளை 8 விதி 5 உடன் சேர்த்து படிக்கப்படுதல் வேண்டும். இது சான்றுச் சட்டத்தின் பிரிவு 58இன் வகைமுறையைப் போன்றே உள்ளது. அனைத்து தொடர்புற்ற வகைமுறைகளையும் சேர்த்துப் படிக்கையில் இதில் அறியப்படுவதாவது, எதிர்வாதியின் ஏற்புரையின் அடிப்படையில் மட்டுமே வாதிக்கு நீதிமன்றம் உய்தி வழங்க கட்டுப்பட்டதாகாது. ஷேர்பகதூர் –எதிர்– மோகன் அமீன், அ.இ.அ. 1929 எல்ஜி 569 பார்க்க)

32. கூறப்பட்ட முடிபுகளில் திராப் –எதிர்– ஹோல்ட்ஸ் ஒர்த் ஜெஸ்சல் 1876 (3) Ch.D, 637 (640) M.R. கூறியதாவது. இந்த விதி வாதியை அல்லது எதிர்வாதியை முரண் பாடில்லாத செயற்பாடுகளை விட்டு விட உதவு வதாக அமையும்.

33. உத்தம்சிங் (மேற்படி) வாதி வங்கி எதிர் வாதிக்கு எதிராக அதிகமான அளவிலான பணத்தை மீளப் பெறுவதற்காக வழக்கு ஒன்றை முன்னிட்டது. இது கட்டளை 12 விதி 6இன்படி விண்ணப்பம் ஒன்றினையும் கூட முன்னிட்டு ள்ளது. ஒரு பகுதி கோரிக்கையின்பேரில், அதன் ஏற்புரையின்பேரிலான தீர்ப்பைப் பெறுவதற்கு, இந்த விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டது மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு ஒன்று உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. எதிர்வாதி இந்த நீதிமன்றத்தை அணுகியுள்ளார். இதில் நீதிமன்றத்தின் முன்பு எதிர்வாதியால் வாதிடப்பட்டதாவது, கட்டளை 12இன் விதி 6இன் (i)இல் வாதுரைகளின் ஏற்புரைகள் மட்டுமே சேர்க்கப்படும் என்பதாக.

(ii) வழக்கின் விசாரணையில், ஏற்புரைகளின் செயற்பாடு பற்றி கருதுகை செய்யப்படம் மற்றும் (iii) கட்டளை 12 விதி 6இன் வகைமுறை, கட்டளை 8இன் வகைமுறைகளுடன் சேர்த்து படிக்கப்படுகிறபோதும் மற்றும் நீதிமன்றம், வாதியை அழைப்பதன்பேரில், ஏற்புரைகள் பெறப்பட்டதன்பேரில், அதன் வழக்கை மெய்ப்பிக்கும்.

34. வாதங்களை எதிர்த்தும் கட்டளை 12 விதி 6இன் நோக்கங்களைச் சுட்டியும் நீதிமன்றம் கண்டறிந்ததாவது “கோரிக்கை ஒன்று ஏற்கப்படு கிறவிடத்து, ஏற்கப்பட்ட கோரிக்கையின்பேரில், வாதிக்காக தீர்ப்பு ஒன்றை வழங்கி அதன் பேரில், தீர்ப்பாணை ஒன்றை பிறப்பிக்க, நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளது. விதி 6இன் நோக்கெல்லை குறுகியதாக்கப்படுதல் ஆகாது. எதிர்தரப்பினரின் ஏற்புரையின்பேரில், தரப்பானது தீர்ப்புக்கு விண்ணப்பிக்கிறவிடத்து அவர் வெற்றி பெற உரிமையுடையவர் ஆவார். எதிர்வாதியினால் செய்யப்படும் ஏற்புரை தெளிவாக வும், சந்தேகம் இன்றியும், ஐயத்திற்கிடமின்றி யும் நிபந்தனையின்றியும் உள்ளபோது, கீழ்நிலை நீதிமன்றங்கள் வழக்கின் வாதிக்கு தீர்ப்பாணை அளிப்பது சரியானதே”.

35. “அல்லது வேறுவகையில் என்னும் சொற்கள்” விரிவாகவே உள்ளது. அதில் அனைத்து வழக்குகள் ஏற்புரைக்கும் உள்ள டங்கும். அதாவது வாதுரைகளின் உள்ளவை அல்லது கேள்வியில் உள்ளதற்கு தொடர்பற்றவை களும். முதலில் இருந்தவரான விதி 6இன் கூறப்பட்டவாறு “அல்லது வேறுவகையில்” என்னும் சொற்கள் எழுத்து மூலமாக என்னும் இயலாத நிலையில் விதி 1இல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதில் அறியப்படுவது தீர்ப்பானது. வாய்மொழி அல்லது எழுத்துவழி ஏற்புரை யானது வழங்கப்படலாம் என்பது. (இன்றி: பென்னி (1984 ch D 499 பார்க்க) 1976 திருத்தச் சட்டம், இந்த நிலையைத் தெளிவாக்கி யுள்ளது. இதில் கூறப்பட்டதாவது, இத்தகைய ஏற்புரைகள் வாதுரையில் அல்லது வேறுவகையில் உள்ளவை மற்றும் இவை வாய்மொழியாக அல்ல எழுத்து வழியாக இருக்கலாம். எனவே, விதி 6இன் திருத்தத்திற்குப் பின்னர், ஏற்புரைகள் கட்டளை 6இன் விதி 1அல்லது விதி 4க்குள் அடங்காது. ஆனால் அவை பொதுவான செயற்பாட்டைக் கொண்டிருக்கும். அத்தகைய ஏற்புரைகள், வெளிப்படையாக அல்லது உட்கிடையாக இருக்கும். இவை எழுத்து வழியாக அல்லது

வாய்மொழியாக இருக்கும் அல்லது இவை வழக்கு முன்னிடுவதற்கு முன்பு செய்யப் பட்டவையாக இருக்கும் அல்லது வழக்கு முன்னிடப்பட்டதற்குப் பின்னர் அல்லது நடவடிக்கைகள் நடைபெறும்போது சொல்லப் பட்டவைகளாகவும் இருக்கும்.

36. தில்லி உயர்நீதிமன்றத்தின் நீதியர் ஆயம் மிகவும் சரியாக இந்த வகைமுறையின் பொருள்கோள் பற்றி குறிப்பிட்டுள்ளது கட்டளை 12 விதி 6 உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின்படி முடிவுகளில் ITDC வரையறுக்கப்பட்டது –எதிர்– சந்தர் பால் சூட் மற்றும் சன் 2000 (84) DLT 7337 (நீ.ஆ.): 2000 AIHC 1990:

“தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 12 விதி 6 மிகவும் பரந்த உளத்தேர்வினை நீதிமன்றத்திற்கு அளிக்கிறது. இந்த விதியின்படி, நீதிமன்றம், வழக்கின் எந்த நிலையிலும், விண்ணப்பத்தின் பேரில், தரப்பினர் எவருக்கும் அல்லது தானே முற்பட்டு, தரப்பினர்களுக்கிடையேயான வேறு எந்தக் கேள்வியையும் தீர்மானிக்காது. ஆணை ஒன்றைப் பிறப்பிக்கும் அத்தகைய தீர்ப்பை அது தக்கதெனக் கருதுகிற வாறு அளிக்கும் அதாவது ஏற்புரைகளின்பேரில் வாதுரைகளின் அல்லது வேறுவழியில் கூறப்பட்ட பொருண்மைகளின் பேரில் அவை வாய்மொழியாக அல்லது எழுத்து வழி அளிக்கப்பட்டிருக்கும்.

37. “வேறு வழியில்” என்னும் சொல் பயன் படுத்தப்படுவது மேற்சொல்லப்பட்ட சூழ்நிலை களில் இது பற்றி உயர்நீதிமன்றம் பொருள்கோள் செய்துள்ளது. இந்தச் சொல்லினைக் கருதுகை செய்து, நீதிமன்றம் சொன்ன இச்சொல்லினை கருதுகை செய்ததில் கூறியுள்ளதாவது இது நீதிமன்றத்தை தீர்ப்பினை அளிக்க அதாவது தரப்பினரின் உரையின்பேரில் தீர்ப்பினைப் பிறப்பிக்க அனுமதிக்கிறது. அதாவது வாதுரை களில்பேரில் மட்டுமல்லாது வாதுரைகளின் கேள்வியில் தொடர்பற்றவை பற்றி அதாவது ஆவணம் எதிலும் அல்லது நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட உரையில் உள்ளவற்றின் பேரிலும் தீர்ப்பளிக்கும். உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 10 விதிகள் 1, 2இன்படி உரையானது பதிவு செய்யப்படுகிறது. இதுவும் கூட ஒரு விவர உரை, இது முரண்பட்ட பொருட்பாடுகளை தெளிவாக்கும் அத்தகைய உரையின் உள்ள ஏற்புரை எதுவும் தொடர்புற்றவை. இதில் கண்டறியும் நோக்கத்திற்காக மட்டுமே உள்ள படியே தரப்பினர்களுக்கிடையேயான பூசல், ஆனால் உள்ளபடியே தரப்பினர்களுக்கிடையே யான பூசல் எதுவும் உள்ளதா? இல்லையா? என்பதை கண்டறியும் நோக்கத்திற்காகவும், செயற்படுதல் தரப்பினர் எவராலும் ஏதேனும் ஏற்புரை செய்யப்படுமானால், அந்த விவர உரை பதிவு செய்யப்பட்டு, அது அவருக்கு எதிராக அறுதியானதாக அமைந்து இதன்பேரில் நீதிமன்றம் செய்யப்பட்ட ஏற்புரையின் அடிப்படை யில் தீர்ப்பினை பிறப்பால் முற்படும்.

38. திருத்தத்திற்கு முன்பான கட்டளை 12 விதி 6 ஏற்புரையின்பேரிலான தீர்ப்பினை அனுமதித்தது. அதுவும் தரப்பினரினால் விண்ணப்பம் செய்யப்படுவதன்பேரில், சட்ட ஆணையம், கூறியதாவது ஒரு தீர்ப்பானது தரப்பினரின் விண்ணப்பத்தின்பேரில் அல்லது தானே முற்பட்டு, பிறப்பிக்கப்படலாம் என்பது, (மேலே காண்க).

39. இந்த விதி ஒரு தீர்ப்பினை அறிய நீதிமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது. அதாவது கோரிக்கை ஒன்று ஏற்கப்படுகிறவிடத்தும் மற்றும் அத்தகைய ஏற்கப்பட்ட கோரிக்கையின் பேரில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படலாம். இது எந்த நிலையிலும் செய்யப்படலாம். பார்க்க (உத்தம்சிங் மேலே பார்க்க)

எனவே, வழக்கின் எந்த நிலையிலும், எதிர்வாதி அவரது எழுத்துமூல விவர உரைகள் ஏற்புரையின்பேரில், தீர்ப்பினை பெற முடியும். இதில் அவர் எதிராக பிரச்சினைகளை இணைத்த போதிலும் (ப்ரௌன் –எதிர்– பியர்சன் 1882 (21) உான 716 பார்க்க) இதுபோன்றே, எதிர்வாதி ஒருவர் வழக்கு ஒன்றை தள்ளுபடி செய்வதற்காக விண்ணப்பிக்கலாம் வாதியும் மறு இணைப்பின் மூலமாக ஏற்புரையின் அடிப்படையில் இதைச் செய்யலாம்.

40. நீதிமன்றமானது, உரிய வழக்கில், தரப்பினரால் ஏற்புரையின்பேரிலான நடவடிக்கைகளின் இடைநிலை நிறுத்தி வைப்பு நிலையிலும் தீர்ப்பினை அளிக்கும் (பால் ராஜ் தனுஜா –எதிர்– சுனில் மதன் 1999 (8) உச்.நீ.வ. 396 பார்க்க). ஆனால், வழக்கில் கேள்விகள் உள்ளடக்கப்பட்டு அவை வசதியாக வசதியாக கேள்விகள் உள்ள டக்கப்பட்ட அவை வசதியாக வகை செய்யப்பட முடியாதபோது அவை தீர்மானிக்கப்பட உள்ள நிலையில் உள்ளபோது, நீதிமன்றமானது, எந்த நிலையில் தீர்ப்பினை வழங்காது (சிம்லா ஹோல் சேல்மார்க்கெட் மேற்படி பார்க்க)

41. உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்பு (திருத்தச் சட்டம் 1976இன் விதி 6இன் உள்விதி (2) ஏற்புரையின்பேரிலான தீர்ப்புக் கிணங்க நீதிமன்றம் தீர்ப்பாணை ஒன்றினை பிறப்பிக்கலாம் உள் விதி (2) (1)ஆம் உள் விதியின் இடையிலான வாதமுறை செயல் பாடாகும்.

42. உள் விதி (1)இன் நோக்கமே வாதியை, எதிர்வாதியின் ஏற்புரையின்பேரில் தீர்ப்பினைப் பெற இயல்விப்பதாகும். அதாவது அந்த ஏற்புரையின்படிக்கு இவர் அதற்கான நலப் பயனை உடனடியாக காத்திருப்பு இன்றி பெறுவதற்கான அதாவது ஏற்கப்படாத கோரிக்கை தீர்மானிக்கப்படும் வரை காத்திருக்காது. உள் விதி (2) ஏற்புரையின்பேரிலான தீர்ப்பின் வரையுரையின்படி தீர்ப்பாணையை நீதிமன்றம் பிறப்பிப்பது, தவிர்க்க இயலாததாகும். இதனை வாதியால் நிறைவேற்ற முடியும். (உத்தம் சிங் மேற்படி காண்க). அத்தகைய வழக்கில், இரண்டு தீர்ப்பாணைகள் இருக்கலாம்.

(i) ஏற்கப்பட்ட கோரிக்கைகள் பொருத்தவை மற்றும்

(ii) ஏற்கப்படாத அல்லது வாதிக்கப்பட்ட கோரிக்கை அல்லது ஏற்கப்படாதவை தொடர்பாக. (பாய்சான்சல் –எதிர்– யுனைடெட் இந்திய வங்கி AIR 1971 உச்.நீ.1081 பார்க்க.

43. விதி 6இன்படியான ஒரு தீர்ப்பாணை ஒன்ற முதல்நிலையானதாக அல்லது அறுதி யானதாக இருக்கலாம். (பார்க்க சிவலிங்கா –எதிர்– நாராயணி AIR 1946 Mad 151)

44. நாம் கருதுவது எழுத்துமூல விவர உரையில் எதிர்வாதியினால் செய்யப்பட்ட தெளிவான ஐயத்திற்கு இடமற்ற அவரது எழுத்து மூல விவர உரையின் ஏற்புரைகளின்பேரில் உயர்நீதிமன்றமானது எந்த பிழையையும் செய்யவில்லை. அதுவும் எந்த சட்ட பிழையை யும் செய்யவில்லை அதாவது உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 12 விதி 6இனைச் செயற்படுத்தி வழக்கில் தீர்ப்பாணை பிறப்பித்தது.

45. இந்த நிலையில், நாம் கவனிக்க வேண்டியதாவது மனுதாரரின் வழக்குரைஞரால் பரிந்துரைக்கப்பட்ட பணிந்தனுப்புதலின்பற்றி 1997 மேற்கு வங்காள இடங்கள் வாடகைச் சட்டத்தின் வகைமுறைகளால் மனுதாரர் ஆளப் படவில்லை என்பது. எனவே, 1997 சட்டத்தின் பிரிவு 2(எ) தொடர்பாக. மொத்த கலந்தாய்வு தேவையற்றதாக வேறு சொற்களில், வழக்கு ரைஞரின் தரப்பிலான முயற்சியாவது, 1997 சட்டத்தின் பிரிவு 2(எ) பொருந்தாதிருக்கு மானால், அத்தகைய சூழ்நிலைகளில், மனுதாரர் கேள்வியில் உள்ள இடத்தை கையுடைமையில் கொண்டிருப்பதை தொடர உரிமையுள்ளதாக. அதாவது முதன்மை வாடகைதாரரின் சட்ட வாரிசாக.

46. நாம் அச்சப்பட வேண்டியுள்ளதாவது, மேலே குறிப்பிட்டவாறு வழக்குரைஞரால் பரிந்துரைக்கப்பட்டவாறு அந்த பணிந்தனுப்புதல் களின்படி நாம் அதன் மூலம் மனநிறை வடைந்துள்ளோம். நாம் கவனிக்க வேண்டிய தாவது. இந்தக் குறிப்பானது, உயர்நீதிமன்றத்தின் முன்பு, எழுப்பப்படவோ, வாதிக்கப்படவோ இல்லை என்பது. நமக்கு அதிர்ச்சியளிப்பது இந்தப் பொருண்மை விசாரணை நீதிமன்றத்திலும் வாதிக்கப்படவில்லை என்பதே. நாம் வழக்குரைஞரை அழைத்து குறிப்பிட்டதாவது மனுதாரரினால் விண்ணப்பத்திற்கு அளிக்கப் பட்ட பதிலுரையில் அதாவது உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை 12இன் விதி 6இன்படி எதிர் வழக்கீட்டாள ரால் முன்னிடப்பட்ட விண்ணப்பத்தின் இந்தக்

குறிப்பு உயர்நீதிமன்றத்தின் முன்பு எழுப்பப் பட்டுள்ளது. இதில் மனுதாரரின் மறுப்புகள்/ பதில்களில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதாவது இத்தகைய வாதம் எழுப்பப்பட்டது பற்றி மாறாக, பதிவில் பத்தி 9இல் மனுதாரரால் முன்னிடப்பட்டதில் இதை பத்தி 11இல் குறிப்பிடப் பட்டவாறு. இந்த ஆணை இந்த பிரச்சினை பற்றி முடிவுறுத்துவதாக உள்ளது. பதில் அளிக்கப் பட்டதில் பத்தி 9இல் வாதியால் முன்னிடப்பட்ட விண்ணப்பத்திற்காக பதிலுரையில் அதாவது உ.வி.தொ.ச.இன் கட்டளை 12இன் விதி 6இன்படி முடிவுறுத்துவதாக உள்ளது. பதிவில் அளிக்கப்பட்டதில் பத்தி 9இல் மனுதாரரால் முன்னிடப்பட்டதில் இதை பத்தி 11இல் குறிப்பிடப்பட்டவாறு இந்த ஆணை இந்த பிரச்சினை பற்றி முடிவுறுத்துவதாக உள்ளது. பதில் அளிக்கப்பட்டதில் பத்தி 9இல் வாதியால் முன்னிடப்பட்ட விண்ணப்பத்திற்காக பதிலுரை யில் அதாவது உ.வி.தொ.ச.இன் கட்டளை 12இல் விதி 6இல்படி கூறப்பட்டிருப்பதாவது.

மேலும் எதிர்வாதி மே.வ.இ.வா. சட்டத்தின் 7(11), 7(2)ஆம் பிரிவின்படி விண்ணப்பத்தினை நீதிமன்றத்தின் முன்பு முன்னிட உள்ளார். அதாவது அப்போதைய வாடகை செலுத்தத் திற்காகவும் மற்றும் வாடகை நிலுவை ஏதேனு மிருப்பின் அதற்காகவும் அதற்கான விண்ணப்பங்கள் நீதிமன்றத்தின் முன்பு நடப்பில் உள்ளன. மனுதாரருக்கிணங்க 1997 சட்டத்தின் வகைமுறைகள் மனுதாரருக்கு பொருந்தாதி ருக்கு மானால், 1997 சட்டத்தின் முறையே 7(i), 7(ii) பிரிவுகளின்படி விண்ணப்பத்தினை முன்னிடுவதற்கான காரணம் என்ன என்பது?

47. மேற்சொல்லப்பட்ட கருத்துப்படி இந்த மனு தவறுகிறது இதன் மூலம் இது தள்ளுபடி செய்யப்படுகிறது.

48. பதிவாளர் இந்த ஆணையின்படியினை அனைத்து உயர்நீதிமன்றங்களும் சுற்றறிக்கை யாக அனுப்புதல் வேண்டும் மற்றும் உயர் நீதிமன்றங்கள் முறையே மாவட்ட நீதிமன்றங் களுக்கு இதனை சுற்றறிக்கையாக அனுப்பும்.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## தமிழக அரசின் புதிய தலைமை வழக்கறிஞராக விஜய் நாராயண் பொறுப்பேற்பு

தமிழக அரசின் புதிய தலைமை வழக்கறிஞராக விஜய் நாராயண் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் தவெக வெற்றி பெற்று, ஆட்சி மாற்றம் வெற்றி பெற்று, ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த திமுக ஆட்சியில் தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக பதவி வகித்த பி.எஸ்.ராமன் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இதையடுத்து, புதிய தலைமை வழக்கறிஞராக மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயணை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டது. அதன்படி, தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் 14.5.2026 பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த 2017 முதல் 2021 வரை அதிமுக ஆட்சிக் காலத்தில் அரசின் தலைமை வழக்கறிஞராக பதவி வகித்த விஜய் நாராயண், தற்போது, தவெக ஆட்சியில் மீண்டும் தலைமை வழக்கறிஞராக நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் பள்ளிப் படிப்பை முடித்த விஜய் நாராயண், சென்னை லயோலா கல்லூரியில் பட்டப் படிப்பையும், சென்னை அரசு சட்டக் கல்லூரியில் பட்டப் படிப்பையும், சென்னை அரசு சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பையும் முடித்தார்.

பிரபல வழக்கறிஞர் எம்.கே. நம்பியார், வரலாற்று ஆய்வாளர் கே.எம்.பணிக்கர் ஆகியோரது பேரன் விஜய் நாராயண், மத்திய அரசின் முன்னாள் அட்டர்னி ஜெனரல் கே.கே.வேணுகோபால் இவரது நெருங்கிய உறவினர் ஆவார்.

இந்திய சட்ட நிறுவனத்தின் சென்னை மண்டல செயற்குழு உறுப்பினராகவும் சென்னை உயர்நீதிமன்றத்தின் தொன்மையான வழக்கறிஞர் சங்கமான மெட்ராஸ் பார் அசோசியேஷனின் தலைவராகவும் ஏற்கனவே பதவி வகித்துள்ள விஜய் நாராயண், தற்போது திருச்சி தேசிய சட்டப் பள்ளியின் பொதுக்குழு உறுப்பினராக பதவி வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**நன்றி: இந்து தமிழ் திசை 15.5.2026**

# தடுப்பு காவல் கைதியின் முறையீட்டை அரசு கூடிய விரைவில் பரிசீலிக்காததால் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல் உத்தரவு ரத்து

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ்**
**மாண்புமிகு நீதிபதி என்.கோடீஸ்வர் சிங்**
**குற்றவியல் மே.மு. எண் 2189/2026**
**(சி.அ.மனு (குற்.) எண் 3869/2026)**
**(2026 LiveLaw (SC) 448)**

**சுனில் குமார் குப்தா (எ) சுனில் செயின் ...மேல்முறையீட்டாளர்**
**–எதிர்–**
**ஒன்றிய அரசு மற்றும் இதர நபர்கள் ...எதிர்மனுதாரர்கள்**

**உத்தரவு**

1. மேல்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

2. இந்த மேல்முறையீட்டில் பரிசீலிக்கப்பட வேண்டிய கேள்வி

என்னவென்றால்: தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பின்னர் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு, தடுப்புக்காவலில் வைக்கப் பட்டவர் அளித்த மேல்முறையீட்டு மனுவைத் தீர்மானிப்பதில் மாநில அரசு காலதாமதம் செய்தது.

அந்த உத்தரவையே செல்லாததாக்குமா? குறிப்பாக, தடுப்புக்காவல் அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை யில், சம்பந்தப்பட்ட நபரின் மேல்முறையீட்டு மனு மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட முடிவு ஆகியவையும் இணைக்கப்பட்டிருந்த நிலை யில், மாநில அரசின் இந்தத் தாமதம் சட்டப்படி செல்லத்தக்கதா என்பது குறித்து இங்கே ஆராயப்பட வேண்டும்.

3. மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் மற்றும் எதிர்மனுதாரர்(கள்) தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஆகியவரின் வாதங்களைக் கேட்டோம். இது தொடர்பான ஆவணங்களையும் நாங்கள் ஆய்வு செய்தோம்.

4.மேல்முறையீட்டாளர் தரப்பு மூத்த வழக்கறிஞர், தனது வாதங்களுக்கு ஆதரவாக இந்த நீதிமன்றம் ஜெயநாராயண் சுகுல் –எதிர்– மேற்கு வங்க அரசு (1970) 1 SCC 219) மற்றும் ஷேக் அப்துல் கரீம் மற்றும் இதர நபர்கள் –எதிர்– மேற்கு வங்க அரசு (1969) 1 SCC 433) ஆகிய வழக்குகளில் வழங்கிய தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டினார்.

5. ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மைகளின்படி, 02.07.2025 அன்று மாவட்ட ஆட்சியரால், 1980–ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டாளருக்கு எதிராக ஒரு தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேல்முறையீட்டாளர் இரண்டு மேல்முறையீட்டாளர் மனுக்களை அளித்தார்; ஒன்று தடுப்புக்காவல் அதிகாரிக்கும். மற்றொன்று மாநில அரசுக்கும் அளிக்கப்பட்டது. இதனை மதுரா மாவட்டச் சிறைக் கண்காணிப்பாளர், மதுரா மாவட்ட ஆட்சியருக்கு 07.07.2025 அன்று அனுப்பிய தகவல் தொடர்பு ஆவணம் உறுதிப்படுத்துகிறது.

6. 12.07.2025 அன்று, தடுப்புக்காவல் அதிகாரியால் பரிந்துரைக்கப்பட்ட 02.07.2025 தே தியிட்ட அந்தத் தடுப்புக்காவல் உத்தரவிற்கு மாநில அரசு ஒப்புதல் அளித்தது. பின்னர் 23.07.2025 அன்று, மாநில அரசு மாவட்ட ஆட்சியருக்கு ஒரு தகவல் அனுப்பியது; அதில், மாநில அரசுக்கு அளிக்கப்பட்ட மேல்முறையீட்டு

மனு நிராகரிக்கப்பட்ட விவரத்தைத் தடுப்புக் காவலில் உள்ளவருக்குத் தெரிவிக்குமாறு கோரப்பட்டது.

7. மேற்கூறிய உண்மைகள், தடுப்புக் காவலில் உள்ளவரின் மேல்முறையீட்டு மனு மாநில அரசுக்கு உடனடியாக அனுப்பப்பட வில்லை என்பதையும், அது காலதாமதமாகவே நிராகரிக்கப் பட்டது என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றன.

8. தடுப்புக்காவலில் உள்ளவரின் மேல் முறையீட்டு மனுவை மிக விரைவாகப் பரிசீலிக்க வேண்டிய கடமை சம்பந்தப்பட்ட அரசுக்கு உள்ளது. இந்த வழக்கில், சிறை அதிகாரிகளால் தடுப்புக்காவல் அதிகாரிக்கு அந்த மனு மிக விரைவாக அனுப்பப்பட்ட பதிலும், தடுப்புக் காவல் அதிகாரி அதனை உடனடியாக மாநில அரசுக்கு அனுப்பவில்லை.

9. மாநில அரசு தனது பங்கிற்கு முதலில் தடுப்புக்காவல் உத்தரவிற்கு ஒப்புதல் அளித்து விட்டு, அதன் பின்னரே அந்த நபரின் மேல் முறையீட்டு மனுவைப் பரிசீலித்துள்ளது. மாநில அரசுக்கு அளிக்கப்படும் மேல்முறையீட்டு மனுவிற்கும், தடுப்புக்காவல் அதிகாரி அல்லது அறிவுரைக் குழுவிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

10. துரதிர்ஷ்டவசமாக, மேல்முறையீட்டு மனுவைப் பரிசீலிக்கும் நடவடிக்கை மிக விரை வாக மேற்கொள்ளப்படவில்லை. இது தடுப்புக் காவல் உத்தரவு மற்றும் அதன் பின் வழங்கப் பட்ட ஒப்புதல் ஆகிய இரண்டையுமே சட்டப்படி செல்லாததாக்குகிறது.

11. இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படை யில், தடுப்புக்காவல் உத்தரவு மற்றும் அதன் பின்னரான ஒப்புதல் ஆகிய இரண்டும் ரத்து செய்யப்படுகின்றன. அதன்படி, உயர்நீதிமன்றம் பிறப்பித்த மேல்முறையீடு செய்யப்பட்ட உத்தரவு தள்ளுபடி செய்யப்படுகிறது. மேல்முறையீட்டாளர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

12. அதற்கேற்ப, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. நிலுவையில் உள்ள இதர மனுக்கள் (ஏதேனுமிருப்பின்) இத்துடன் முடித்து வைக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## ஆள்கடத்தல் சம்பவங்களில் உடனடி வழக்குப் பதிவு: உச்சநீதிமன்றம் உத்தரவு

ஆள் கடத்தல் சம்பவங்கள் குறித்து தெரிய வந்தவுடன் காவல் நிலையங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் 8.5.2026 அன்று உத்தரவிட்டது. கடந்த 2011ஆம் ஆண்டு சென்னையில் தனது மகள் காணாமல் போன விவகாரம் தொடர்பாக, ஜி.கணேஷ் என்பவர் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனு மீது நீதிபதிகள் அசானுதீன் அமானுல்லா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு 8.5.2026 உத்தரவு பிறப்பித்தது.

அப்போது நீதிபதிகள் அமர்வு கூறுகையில், ‘இந்தியாவில் காணாமல் போன சிறார்களில் இதுவரை 47,000 பேரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதேவேளையில், ஒவ்வொரு ஆண்டும் சிறார்கள் காணாமல் போவது தொடர்பாக புதிதாக ஆயிரக்கணக்கான வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. வெவ்வேறு மாநிலங்களில் திட்டமிட்டு ஆள்கடத்தலில் ஈடுபடும் கும்பல்களுக்கு இடையே தொடர்புள்ள நிலையில், அந்தக் கும்பல்களால் பாதிக்கப்பட்டவர்களாக காணாமல் போன சிறார்கள் உள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் உள்ள ஒவ்வொரு காவல் நிலையமும் பொதுவான தளத்தில் ஒன்றிணையும் வகையில், அனைத்து இந்திய கட்டமைப்பை மத்திய உள்துறை அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும். அதில் ஆள்கடத்தலுக்கு எதிராக சிறப்பு வலைதளம் இடம் பெற வேண்டும்.

சிறார்கள் காணாமல் போய், அது குறித்து, தகவல் கிடைத்தால், உடனடியாக சம்பந்தப்பட்ட காவல் நிலையங்கள் வழக்குப் பதிவு செய்ய வேண்டும். முதல் கட்ட விசாரணைக்கோ, காணாமல் போனவர்கள் குறித்து அவர்களின் பாதுகாவலர்கள் விசாரிக்கும் வரையிலோ காத்தி ருக்காமல் கட்டாயம் பாரதீய நியாயசம்ஹிம்தா சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும். இவ்வாறு வழக்குப் பதிவு செய்வது தீவிர விசாரணையை உறுதி செய்து கால தாமதத்தை தடுக்கும். காணாமல் போன குழந்தைகள் கண்டு பிடிக்கப்பட்டால், அவர்களை 24 மணி நேரத்தில் அவர்களின் குடும்பத்திடம் ஒப்படைக்க வேண்டும். காணாமல் போன எந்தவொரு நபரும் கண்டுபிடிக்கப்பட்டால், உடனடியாக அவர்கள் ஆதார் சரிபார்ப்புக்கோ அல்லது ஆதார் அட்டைக்குப் பதிவு செய்யவோ அழைத்துச் செல்லப்பட வேண்டும். ஆதார் அட்டை பெறவும், கைவிரல் ரேகைகள் மற்றும் பிற பயோமெட்ரிக் பதிவுகளை மேற்கொள்ளவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்’ என்று உத்தரவிட்டது.

**நன்றி: தினமணி 9.5.2026**

# உயிலில் சான்றுரைப்பவர் இல்லாதது அல்லது கிட்டாமை அமினாவை விசாரித்தல் மூலமாக நிரூபிக்கப்பட வேண்டும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி ஜி.ஆர்.சுவாமினாதன்**
**மாண்புமிகு நீதிபதி எம்.ஜோதிராமன்**
**மேவ(எம்டி) எண் 53/2015 மற்றும் உபம (எண்கள்) 12131/2016, 4058/2018,6691/2020 மற்றும் 5589/2020**
**25.3.2025**
**2025 (3) CTC 681**

**எம்.உமா** ...**மேல்முறையீட்டாளர்**

–எதிர்–

**1.ராமு என்ற ராமலிங்கம் (இறந்தவர்) 2.லக்சுமி பழனிகுமார் 3.கணேஷ் 5.இரிஜா ராமலிங்கம் 5.வசந்தா**

திரு.வி.ராமகிருஷ்ணன்,
மேல்முறையீட்டாளரது வழக்குரைஞர்

திரு எஸ்.மனோகர், வழக்குரைஞர்,
2,4–5வது எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பில்

திரு.எஸ்.வெள்ளைசாமி,
வழக்குரைஞர், 3வது எதிர்மேல் முறையீட்டாளர் சார்பில்

**கோருகை:** முவ எண் 122/2007இல் மதுரை 3வது மாவட்ட நீதிப்தியால்(பி.சி.ஆர்) இயற்றப்பட்ட தீர்ப்புரையையும் தீர்ப்பாணயையும் நீக்கறவக்கவும் வழக்கை ஒட்டுமொத்த செலவுத் தொகையுடன் தள்ளுபடியாக்கவும் உரிமையியல் விசரணைமுறை தொகுப்புசட்ட பிரிவு 96 கீழ் மேல்முறையீடு வழக்கு தாக்கலானது.

## தீர்ப்புரை

(நீதிமன்றத்தின் தீர்ப்புரை நீதிபதி ஜி.ஆர்.சுவாமினாதனால் இயற்றப்பட்டது).

இந்த மேல்முறையீடு பாகப்பிரிவினைக்கான வழக்கில் உருவாகிறது.

2. மாணிக்கம் பிள்ளை என்பவர் பாருகுட்டி அம்மாளை மணந்தார். திருமண பந்தத்தில் அவர்களுக்கு இரு குழந்தைகள் பிறந்தன. அவர்கள் ராமு என்ற ராமலிங்கம், கணேஷ், உமா, ராணி என்ற லக்சுமி மற்றும் வீரபத்திரன் ஆகியோர்கள் ஆவார்கள். பெற்றோர்களுக்கு முன்னராகவே வீரபத்திரன் இறந்திருந்தார். 18.9.205 அன்று மாணிக்கம் பிள்ளை இயற்கை எய்தினார். அவருக்கு முந்தியே 1.4.2005 அன்று பாருகுட்டி அம்மாள் இறந்திருந்தாள். தாவா அட்டவணை சொத்துகளில் 2/3 பங்குரிமை எழுப்பிக் கொண்டு மதுரை 3வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தின் (பி.சி.ஆர்) கோப்பிலான முவ எண் 122/2007 ஐ ராமு என்ற ராமலிங்கமும் ர லக்சுமி பழனிகுமாரும் தாக்கலிட்டார்கள். தாவா அட்டவணை சொத்துக்கள் 3 எண்ணத்தில் உள்ளனவாகும். வழக்கில் ஒரே எதிர்வாதியாக அவர்களது சகோதரி உமா இருந்தாள். 31.102.1994 மற்றும் 9.3.1966 தேதிய கிரய பந்தரங்கள் மூலம் தாவா உருப்படி 1ஐ அவர்களது தந்தை மாணிக்கம் பிள்ளை அவர்களது தந்தையிடம் வாங்கி, அதில் கட்டுமானங்களை ஏற்படுத்தினார் என்பது வாதிகளது வழக்காகும். அவரது சொந்த நிதியிலிருந்து எதிர்வாதியின் பெயரில் தாவா சொத்துக்களில் 2வது உருப்படியை அவர்களது தந்தை வாங்கின்னர் என அவர்கள் கூடுதலாக சொன்னார்கள். மூன்றாவது அட்டவணை சொத்சீல் வங்கி வைப்பீடுகளை உட்கொண்டதானது. ஆனால், விசாரணை நீதிமன்றத்திலேயே மூன்றாவது அட்டவணையிலிலுள்ள அவர்களது கோருரிமையை வாதிகள் துறந்தார்கள்.

எதிர்வாதி உமா மாற்றுத்திறனாளியாகவும் கன்னிப் பெண்ணாகவும் உள்ளார் என்பதில் தகராறில்லை. அவள் அவர்களது பெற்றோர் களுடன் எப்போதுமே அவள் வசித்து வந்தாள். வாதிகளது கூற்றுப்படி தந்தையின் ஒப்பங்களை எதிர்வாதி பெற்று அவளுக்கு சாதகமாக உயிலை ஜோடித்தார்.

3.வழக்குரை உறுத்துக்கூற்றுகளை மறுத்துக் கொண்டு அவளது எழுத்திலான விளக்க வுரையை எதிர்வாதி தாக்கலிட்டார். தாவா உருப்படி 2 அவளது முழுமையான சொத்தாகும் என அவள் வலியுறுத்தியுரைத்தாள். வழக்கு உருப்படி 1 பொறுத்தமட்டில் அவரது சொந்த விருப்பார்வத்திலும் சுயவிருப்பத்திலும் தந்தை யால் நிறைவேற்றப்பட்ட உயில் காரணமாக அது அவளது முழுமையான சொத்தானது. அது உரியவாறு நிறைவேற்றப்பட்டு சான்று ரைக்கப்பட்டு பதிவானதாகும். அதே நாளன்று திண்டுக்கல் தாண்டிக்குடியிலிலுள்ள அவளது சொத்தை அவளுக்கு உயில்வழியாக அளித்துக் கொண்டு அவளுக்கு சாதகமாக உயிலை பாருகுட்டி அம்மாளும் நிறைவேற்றினாள். தாயாரால் நிறைவேற்றப்பட்ட உயிலுக்கு தந்தை சான்றுரைக்கையில் உயிலுக்கு தந்தை சான்று ரைக்கப்பட்ட உயிலை தாயார் நிறைவேற்றினாள்.

4.எதிரெதிர் வாதுரைகள் அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் கீழ் வரும் எழு வினாக்களை வனைந்தது.

''1,வழக்குரையில் சொல்லப்பட்டவாறு தாவா சொத்துக்களில் 1/3 பங்குக்கு வாதிகள் பாத்தியதையுள்ளவர்கள் ஆவார்களா?

2. பாகப்பிரினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பெறலுக்கு வாதி பாத்தியதை யுள்ளவர்கள் ஆவார்களா?

3. வாதிகளுக்கு பாத்தியதையாகும் உரிமைகள் என்ன?

அதன் பின்னராக விசாரணை நீதிமன்றம் கூடுதல் எழுவினாக்களை வனைந்தது.

"1. எதிர்வாதியாலான முறையற்ற செலவாக்கு மற்றும் கட்டாயப்படுத்தல் காரணத்தில் அமரா திரு.மாணிக்கம் பிள்ளையால் 12.5.1989, 13.9.1993 மற்றும் 18.2.2002 பதிவுற்ற உயில்கள் நிறைவேற்றப் பட்டுள்ளனவா?

2. 13.9.2005 தேதிய கடிதம் உண்மை யானதாகவும் நிஜமானாதாகவும் உள்ளதா?

3. 13.9.2005 தேதிய கடிதம் அமரர் திரு.மாணிக்கப்பிள்ளையின் உயிலாக பொருள் கொள்ளப்பட முடியுமா?

4. வழக்கு உருப்படி 2 துரு மாணிக்கம் பிள்ளை சொந்தமாக கொண்டிருந்தாரா?

5. தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் வழக்கு மதிப்பீடு சட்டப் பிரிவு 37(2)ஐ பிரயோகிக்க, எதிர்வாதியுடன் சேர்ந்து தாவா சொத்துக்களில் கூட்டு உடைமையையும் அனுபோகத்தையும் வாதிகள் கொண்டு உள்ளார்களா?

6. வழக்கு சரியாக மதிப்பீடாகி சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படுகிறதா?

7. பகுதி பாகபிரிவினை கோரலுக்காக வழக்கு மோசமானதாகுமா?'

5. அவளை வாசா1 எனவாக இரண்டாவது வாதி விசாரித்துக் கொண்டாள். வாதி 2 எனவாக திரு.எம்.பாலமுருகன் என்பவர் விசாரிக்கப்பட்டு சா.ஏ1-11 குறியீடாகின. எதிர்வாதி தன்னை எவாசா 1 எனவாக விசாரித்துக் கொண்டாள். வழக்கு நடவடிக்கைகளில் தரப்பினரராக சேர்க்கப்படாத அவளது சகோதரர் கணேஷ் எ.வா.சா.3 எனவாக விசாரிக்கப் பட்டார். அவளது தரப்பில் இரு பிற சாட்சிகள் விசாரிக்கப் பட்டார்கள். சா பி1-பி102 குறியீடாகின.

6. இரு தரப்பினர்களையும் கேட்டறிந்த பின்னரும் பதிவாவணத்திலிலுள்ள சாட்சியத்தை பரிசீலித்த பின்பாகவும் 24.9.2014 அன்று தீர்ப்புரையையும் முதல்நிலை தீர்ப்பாணையை யும் விசாரணை நீதிபதி இயற்றினார். தாவா அட்டவணை சொத்துகளில் தலா 1/3 பங்கு வாதிகள் ஒவ்வொருவருக்கும் எதிர்வாதிக்கும் தரப்பட்டது. தாவா இரண்டாவது உருப்படி தொடர்பாக வழக்கு தள்ளுபடியானது. வழக்கு முதலாவது சொத்து தொடர்பான முதல்நிலை தீர்ப்பாணை வழங்கலில் துயருற்று எதிர்வாதி

மேவ (எம்டி) எண் 53/2018ஐ தாக்கலிட்டாள். தாவா இரண்டாவது அட்டவணை தள்ளுபடி யானது தொடர்பாக வாதிகள் மேவ (எம்டி) 57/ 2018 தாக்கலிட்டார்கள். இந்த செயல்பாட்களில் நிலுவையின்போது முதலாவது வாதி மரணித்து அவரது சட்டபூர்வ வாரிசுகள் பதிவாவணத்தில் கொணரப்பட்டுள்ளார்கள்.

7. மேல்முறையீடுக்கான காரணங்களில் விவரிக்கப்பட்ட அனைத்து வாதங்களையும் மேமு சார்பு வழக்குரைஞர் மறுவலியுறுத்தினார். விரிவான எழுத்தலான வாதங்களையும் அவர் பணிந்தளித்து அவற்றின் ஊடாக எங்களை இட்டுச் சென்றார். தாவா உயில் நிறைவேற்றம் சந்தேகமா சூழல்களால் விழலாகிறது என்ற கூற்றை விசாரணை நீதிமன்றம் சரியாக நிராகரித்த பின்னர் அது 1872இன் இந்திய சாட்சிய சட்டப் பிரிவுகள் 68 மற்றும் 68 கீழ் முறையாக நிலைநாட்டப்படவில்லை என தீர்ப்பிட்டதில் பிழையிழைத்தது என அவர் பணிந்திட்டார். வழக்கு உயில் என்பது பதிவுற்ற ஆவணமாகும். அது உயில் எழுதி வைத்தவர் மனைவி பாருகுட்டி அம்மாவாலும் சங்கர லிங்கம் என்பவராலும் சான்றுரைக்கப்பட்டது. சாட்சிய அழைப்பானை சங்கரலிங்கத்தின் முகவரிக்கு கொண்டு செல்லப்பட்டது. கிராமத்தை விட்டு மூன்றாண்டுககு முன்னரே முகவரியாளர் சென்றிருந்தார் என்ற மேற்குறிப்புடன் அது திருப்பப்பட்டது. திருப்பப்பட்ட அழைப்பாணை சா.சி.1 என நீதிமன்ற ஆவணமாக குறியிடப் பட்டது. சான்றுரைத்த சாட்சியின் (சங்கரலிங்கம்) இருப்பிடம் தெரியப்படாததாலும் பிற சாட்சி நிபாருகுட்டி அம்மாள் நீ ஏற்கனவே இறந்தி ருந்ததாலும் எதிர்வாதி இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 69ஐ பிரயோகிக்க வேண்டியிருந்தது. அவர்களது பெற்றோர்கள் ஆன பாருகுட்டி அம்மாள் (சான்றுரைக்கும் சாட்சி) மற்றும் மாணிக்கம் பிள்ளை [உயிலை எழுதி வைத்தவர்] கையெழுத்துடனும் ஒப்பங்களன் பரிச்சமுள்ள அவளது சகோதாரர் கணேசை விசாரித்து கொண்டு எதிர்வாதி அவளது பொறுப்பை நிறைவேற்றினாள். சா.சி.1 ஒரு நீதிமன்ற ஆவணமாக உள்ளது எனவும் திருப்பப்பட்ட அழைப்பாணையில் நீதிமன்ற அலுவரால் மேற்குறிப்பு செய்யப்பட்டது எனவும் ஆன பொருண்மையில் கணிசமான முக்கியத்தை வழக்குரைஞர் வைத்தார். அது வாதிகளால் எதிர்க்கப்படவில்லை என்ற காரணத்தால் மேற்குறிப்பு வைத்த அமினாவை விசாரித்தல் தேவையானதல்ல என அவர் வாதிட்டார். எதிர்வாதி எவாசா1 ஆக அவளை விசாரித்துக் கொண்டாள். சாட்சிய அழைப்பாணை திருப்பப் பட்டது மிகவும் பின்கூட்டியதானது. ஆகையால் சங்கரலிங்கத்தின் இருப்பிடம் பற்றி பேசிட எதிர்வாதிக்கு சந்தர்ப்பம் இருந்ததில்லை. ஏதோ வொரு இடத்தில் சங்கரலிங்கம் இருந்தார் என்பது வாதிகளது வழக்காக இருந்ததில்லை. எதிர்வாதி இயன்முறையாக உடல் ஊனமுற்ற வளாக உள்ளதால் சான்றுரைத்தவர் கடைசியில் வசித்திருப்பதாக சொல்லப்படும் கிராமத்துக்கு அவள் தனிப்பட்ட முறையில் செல்ல முடிந்திருக்காது. வழக்கு பகுதி பாகப்பிரிவினையால் பாதிப்புறு கிறது என்பது அவரது இறுதி வாதகமாக இருந்தது. மாணிக்கம் பிள்ளைக்கு முந்தியே பாருகுட்டி அம்மாள் இறந்திருந்தாள். வாதிகள் கூற்றுப்படி, பாருகுட்டி அம்மாளும் உயிலெ முதாது இறந்தாள் என்பதால் அவள்து பங்கும் அவளது கணவர் மாணிக்கம் பிள்ளைக்கு சேர்ந்து ஆஸ்தியின் ஒரு பகுதியாக ஆகியிருந் திருக்கும். அது உட்படுத்தப்பட்டாததால் வழக்கு பாகப்பிரிவினைக்காக மோசமாகும். இந்த எதிர்வாதத்தை அவளது எழுத்திலான விளக்க வுரையில் எதிர்வாதி குறித்ததாக எழுப்பி யிருந்தாள். தாயாரின் சொத்தில் பங்கு கோரிக் கொண்டு வழக்கு முவ எண் 44/2007ஐ வாதி திண்டுக்கல் மாவட்ட நீதிபதியின் கோப்பில் தாக்கலிட்டிருந்தாள். அது பிறழ்கைக்காக தள்ளுபடியானது. அது மீட்டளிப்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எதிர்வாதி யால் முன்னிறுத்தப்பட்ட பகுதி பாகப் பிரிவினைக் கான வேண்டுகையை நீதிமன்றம் போகிற போக்கில் தள்ளுபடி செய்தது. அவரது வாதங் களுக்கு ஆதரவாக் எண்ணிலடங்கும் பல்வேறு தீர்ப்புவழி சட்டங்களிலும் வழக்குரைஞர் நம்புகை வைத்தார். [கெஞ்ச்சகவுடா –எதிர்– சித்தே கவுடா (1994) 4 SCC 294, காந்தி –எதிர்– சாமினாத

கவுண்டர், 2006 (1) CTC 267, அல்லி சேகர் –எதிர்– ராமு மற்றும் கருப்பாயம்மாள் –எதிர்– சாமியப்ப கவண்டர் (2017) 6 MLJ 689s நீ

8.உயில் மெய்ப்பிக்கப்படவில்லை என்ற விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்க்கும் எமே,உகள்/வாதிகள் சாரபில் முன்னிலையான வழக்குரைசர் ஆதரித்தார். வாதியிடமிருந்து அறிவுறுத்தல்கள் பெற்ற பின்பு, பாகப்பிரிவினைக் காக கூடுதல் வழக்கை வாதிகள் தொடுக்க மாட்டார்கள் எனவும் அவர்களது கூற்றுப்படி பாகபிரிவினைக்கு பிற சொத்து ஏதும் கிடையாது எனவும் வழக்குரைஞர் விளக்கவுரையை அளித்தார்.

9. எதிரெதிர் வாதங்களை நாங்கள் கவன மாக பரிசீலித்து பதிவாவணத்திலுள்ள சாட்சியத்தை மறுசீர்தூக்கினோம்.

ஏ. (18.2.2002 தேதிய உயில் சா.பி8) தாவா உயிலை மெய்ப்பிக்க எதிர்வாதி தவறினார் என விசாரணை நீதிமன்றம் முடிவெடுத்தது தவறானதா?

பி. பகுதி பாகப்பிரிவினைக்காக வழக்கு மோசமானது என்ற முகாந்திரத்தில் வழக்கி லிருந்து வாதிகளை கீழமை நீதிமன்றம் அகற்றி யிருக்க வேண்டுமா?

10. வழக்கு முதலாவது அட்டவணை சொத்து பாகப்பிரிவினைக்காக வாதிகளின் வேணுகைக்கு எதிர்வினையாக சா.பி8 18.2.2002 தேதிய உயிலை எதிர்வாதி பிரேரித்தார். அது பதிவு ஆவணமாக உள்ளது. (ஆவண் எண் 454/2002). உயிலை பதிவிடுதல் மட்டுமே உயிலுக்கு செல்லுமை முத்திரையை அளிக்காது என்பது நன்கு அறுதியானதாகும். இந்திய வாரிசுரிமை சட்டப் பிரிவு 63இன் வகையங்கள் கீழான சட்டபூர்வ வலியுறுத்துகளுக்கு ஏற்ப அது நிரூபிக்கப்பட வேண்டும். [காண்க. லீலா –எதிர்– முருகானந்தம் 2025 INSC 10] உயில் மெய்ப்பிக்கப்படாகும் முறையை 1872இன் இந்திய சாட்சிய சட்ட 68 பிரிவு வகுக்கிறது. அது கீழ்வருமாறு வாசிப்பா கிறது.

68. சட்டநெறியால் அவசியமாக்கப்படும் ஆவண நிறைவேற்றலின் நிரூபணம். சட்ட நெறி யால் ஆவணம் சான்றுரைப்பாதல் அவசிய மாக்கப்படுமானால், சான்றுரைத்த சாட்சி ஒருவர் உயிரோடிருந்து நீதிமன்றத்தின் செயலுக்கு உட்பட்டவராகவும் சாட்சியம் அளிக்கும் திறனுள்ளவ ராக இருப்பாரானால், அதன் நிறைவேற்றத்தை மெய்ப்பித்தல் நோக்கத்துக்காக குறைந்தது ஒரு சான்றுரைத்த சாட்சி அழைக்கப்பட்டிருக்கும் வரையில் அது சாட்சியமாக பிரயோகிக்கப் பட கூடாது.

[நிபந்தனை: அதை நிறைவற்றொயிருப்ப தாக சொல்லப்படுபவரால் அது குறித்தவாறு மறுக்கப்பட்டாலொழிய, 1980ன் இந்திய பதிவு சட்ட (108இன் 16) வகையங்களுக்கு இசை வாக பதிவாக்கியுள்ள் உயில் இல்லாத ஆவணம் எதனது நிறைவேற்றலின் நிரூபணமாக சான்று ரைத்த ஒரு சாட்சியை அழைத்தல் தேவையான தாகக் கூடாது.]

இரு நபர்கள் உயில் மெய்ப்பிக்கப்பட வேண்டிய தாகும். மாணிக்கம் பிள்ளையின் மனைவி பாருகுட்டி அம்மாவாலும் எம்.ராஜாவின் மகன் சங்கரலிங்கத்தாலும் சா.பி8 உயில் சான்றுரைக்கப் பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. பாருகுட்டி அம்மாள் மாணிக்கம் பிள்ளைக்கு முன்னராக இறந்திருந்தாள். அவள் ஏப்ரல் 2005இல் இறந்தாள். ஆகையால் உயிலின் மற்ற சான்று ரைத்தல் சாட்சியான சங்கரலிங்கத்தை விசாரித்துக் கொண்டு உயிலை மெய்ப்பித்தலுக்கான பொறுப்பு உயிலை ப்ரேரித்தவளான உமாமை சேர்ந்ததானது.

11. சட்டமுறை தேவைப்பாடை பூர்த்தியாக்க லுக்கு ஆர்.சங்கரலிங்கத்துக்கு அழைப்பாணை இடப்பட்டது. அழைப்பானை கீழ்வரும் மேற் குறிப்புடன் திருப்பப்பட்டது.

‘‘உத்தரவுப்படி 5.7.2013ந் தேதியில் கட்டளையில் கண்ட் கிராமம் சென்று மேற்படி சாட்சியாளரை தேடி விசாரித்ததில் மேற்படியார் மேற்படி ஊரில் சுமார் 3 வருடமாக குடியில்லை என்று சொல்லியதால் மேற்படியார்க்கு வந்த சாட்சி சம்மன் நகலை ஒட்டவோ சார்வு செய்யவோ முடியாத விபரத்துக்கு மேற்படி ஊர் கிராம உதவி

யாளரிடம் அத்தாட்சி வாங்கியும் இத்துடன் சாட்சி சமன் நகலை ஆஜர் வைத்து இருக்கிறேன் என்று உறுதியாக சொல்கிறேன்.''

12. சங்கரலிங்கம் கண்டுபிடிக்கப்பட முடிய வில்லை என்பதால் இந்திய சாட்சிய ச ட்ட பிரிவு 69இன் விதிமுறைகள்படி அவளால் உயிலை நிரூபிக்கவியலும் என்ற தளத்தில் எதிர்வாதி மேல்தொடர்ந்தாள். உயிலின் மற்ற சான்று ரைப்பாளரானாக பாருகுட்டி அம்மாள் இருந்த தால் தாயாரது மற்றும் தந்தையினது கையெழுத்து களை யும் ஒப்பங்களையும் பற்றி பேசிடலுக்கு அவளது சகோதரர் கணேசை அவள் விசாரித்தாள். மேமு/எதிர்வாதி சார்பு வழக்குரைஞரது கூற்றுப்படி பிரிவு 69இன் தேவைப்பாடு பூர்த்தி யானதானது.

13. பிரிவு 69ஐ எதிர்வாதி உதவிக்கு நாடுதல் நியாயமற்றது என்ற முடிவுக்கு கீழமை நீதிமன்றம் வந்தது. சொன்ன அனுமாந்த்தின் துல்லியத்தை பரிசோதித்திட சட்டமுறை வகையத்தை உற்று நோக்குதல் தேவையாகும். இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 69 வருமாறு:

''69. சான்றுரைத்த சாட்சி கண்டுபிடிக்கப் படாத நேர்வில் நிரூபணம்::–

அத்தகைய சான்றுரைத்த சாட்சி எவரும் கண்டுபிடிக்கப்பட இயலவில்லையானால் அல்லது ஆவணம் ஐக்கிய ராஜ்யத்தில் நிறைவேற்றப் பட்டதாக இருக்குமானால் சாட்ரித்த சாட்சி ஒருவரது சான்றுரைத்தல் அவரது கையெழுத்தில் உள்ளது என்பதும் ஆவணத்தை நிறைவேற்றும் நபரது ஒப்பம் அந்த நபரது கையெழுத்தில் உள்ளது என்பதும் மெய்ப்பிக்கப்பட வேண்டும்.''

பிரிவு 69இன் சேவையை பயன்படுத்திட தாவா உயிலுக்கு சான்றுரைத்த சாட்சிகள் கண்ட றியப்பட இயலவில்லை என பிரேரிப்பாளர் நிரூபிக்க வேண்டும். சாட்சிகளில் ஒருவரான பாருகுட்டி அம்மாள் ஏற்கனவே இறந்திருந்தாள் என்பது ஏற்கப்பட்ட பொருண்மையாகும். இரண்டாவது சான்றொப்பசாட்சியான சங்கர லிங்கம் கண்டறியப்பட முடியவில்லை என்பதை எதிர்வாதி நிரூபித்திருந்தாளா எனபது விடை காணப்பட வேண்டிய கேள்வியாக அமைகிறது. வேறேந்த பொருண்மை போன்று இதுவும் நிரூபிக்கப்பட வேண்டிய பொருண்மையாக விளங்குகிறது. பொறுப்பு முற்றிலும் பிரேரிப்பாளரை சேர்ந்ததானது. நிச்சயமாக, நிகழ்தகவு மேலோங்கல் நிரூபண அளவீடாக உள்ளதாகும். விடாமுயற்சியுறு தேடுதல் உள்ள போதிலும் சொன்ன சாட்சி கண்டுபிடிக்கப்பட முடியவில்லை என காட்டுதல் போதுமானதாக இருந்திருக்கும். (2008) 5 SCC 117இல் அறிவிப்பான [சந்தர் காந்தா பன்சால் -எதிர்- ராஜிந்தர் சிங் ஆனந்த்] வழக்கு தீர்ப்புரையில் விடாற்சி என்ற சொல்லை பரிசீலிக்கையில் உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது வருமாறு.:''

''16. உரிய விடாமுயற்சி என்ற சொற்கள் தொகுப்புசட்டத்தில் வரையறையாகியிருக்க வில்லை. 2006 பதிப்பு ஆக்ஸ்போர்ட் அகராதிப் படி கவனமான மற்றும் நிலையான பொருந்துகை அல்லது உழைப்பு என்பது விடாமுயற்சியின் அர்த்தமாகும். ஒருவரது பணியிலும் கடமை களிலும் அக்கறையையும் முயற்சியையும் காடிக்கொண்டு கவனமாகவும் உறுதியுடன் இருத்தல் விடாமுயற்சி என்பதாகும். பிலாக் சட்ட அகராதிப்படி தரப்பட்ட சந்தர்ப்பத்தில் ஏதோ வொன்றை சாதிக்க ஒருவரிடமிருந்து எதிர் பார்க்கப்படும் கவனம்/ ஜாக்கிரதை, எச்சரிக்கை மற்றும் கவனம் என்பது விடாமுயற்சி என்ப தாகும்.''

14. தாவா உயிலில் சொல்லப்பட்டுள்ள சங்கரலிங்கத்தின் முகவரிக்கு அழைப்பாணையை இட்டு செல்லும் தனித்த செய்கை உயிலின் பிரேரிப்பாளரிடம் எதிர்பாக்கப்படும் விடாமுயற்சி யுடனான தேடுதலின் தேவைப்பாடை பூர்த்தி யாக்காது. ஏற்கனவே சொல்லப்பட்டுள்ள அமினாவினது மேற்குறிப்புடன் அழைப் பாணை திருப்பப்பட்டது. எதிர்வாதி அமினாவைக் கூட விசாரிக்கவில்லை. சொன்ன ஆவணத்தை சா.சி1 எனவாக நீதிமன்றம் தானாகவே குறியிட்டிருந்தது. அமினாவால் எடுக்கப்பட்ட முயல்வின் இயல்பு அறியப்படவில்லை. அமினாவை விசாரித்தலுக்கு தேவை கிடையாது என அவரது பணிந்துரையில் மேமு சார்பு வழக்குரைஞர் முயன்றார். இந்த வாதம் நிராகரிக்கப்பட வேண்டிய

தாகும். அமினா விசாரிக்கப்பட்டிருந்தால் மட்டுமே வாழும் சாட்சி பற்றி அவர் விசாரித்த நபர்கள் குறித்த தகவலை வெளிக்கொணர இயன்றிருந்திருந்திருக்கும். முழுமையான மற்றும் முறையான விசாரணையை அமினா மேற்கொண்டார் என காட்டி பதிவாவணத்தில் ஏதுமில்லை. அமினாவால் மேற்கொள்ளப் பட்டதாக சொல்லப்படும் விசாரணையின் தன்மை தெளிவாக இருக்கவில்லை. நிஜத்தில் விசாரணை செய்யாமல் அமினா மேற்குறிப்பை வைத்திருத்தலுக்கான சாத்தியக்கூறு விலக்கப் பட முடியாது. அமினா மேற்குறிப்பு செய்தி ருந்தது பொருண்மைரீதியாக மெய்யாக இருந்தாலும் கூட கேள்வியிலிலுள்ள கிராமத்தில் சங்கரலிங்கம் கிட்டவில்லை என மட்டுமே அது அர்த்தமாகிறது. அவர் வேறிடத்தில் இருந்தாலும் கூட அவர் இன்னும் கண்டுபிடிக்கப்பட முடிய வில்லை என காட்டுதல் பிரேரிப்பவரது கடமை யானது.

15. (2008) 14 SCC 754இல் அறிவிப்பான பாபு சிங் –எதிர்– ராம் சஹாய் வழக்கு தீர்ப்புரையில், சான்றுரைத்த சாட்சி இறந்தவர் ஆவார் அல்லது நீதிமன்றத்தின் ஆள்வையில் உள்ளவரல்ல அல்லது எதிர்தரப்பால் தடுத்து வைக்கப்பட்டார் அல்லது விடாமுற்சியுறு தேடுத லிலும் அவர் கண்டுபிடிக்கப்பட என்ற நேர்வில் மட்டுமே உயிலை எழுதிவைத்தவரது/ நிறை வேற்றியவரது மற்றும் சாட்சியின் கையெழுத்தை நிரூபிக்க சாட்சிகளை பிரிவு 69இல் வலியு றுத்தாக்கப்படும் முறையில் உயில் மெய்ப்பிக்கப் படலாம் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பிட்டிருந்தது. சங்கரலிங்கம் மரணித்தார் என்பது மேமு இன் வழக்காக இருந்ததில்லை. அவர் நீதிமன்றத்தின் ஆள்வரைக்கு அப்பால் இருத்திவைக்கப்பட்டார் அல்லது உடற்திறனின்மையால் அவர் விசாரிக்கப் பட முடியவில்லை என்ற கூற்றுரை இருந்த தில்லை. அத்தகைய சாட்சி கண்டறியப்பட இயன்றதில்லை எனும் சொல்லமைப்பின் வரம்புக்குள் அந்த சந்தர்ப்பங்களும் வந்த மையும். ஆகையால் சுந்தரலிங்கத்தை கண்டு பிடிக்க பெரும் முயற்சி எடுக்கப்பட்டது என்பதை நிரூபித்தல் எதிர்வாதிக்கு கடப்பட்டானது. இதற்கான சாட்சியம் ஏதும் கிடையாது. இந்திய சாட்சிய சட்ட 69 ஐ பிரயொகிக்க தன்னை மீண்டும் அழைத்து சாட்சியம் அளித்தலிலிருந்து எதிர்வாதியை எதுவும் தடுத்து நிறுத்தவில்லை.

16. இது விஷயம் தொடர்பாக விசாரணை நீதிமன்றத்தின் கலந்தாய்வு கீழ் வருமாறு:

பொருட்கூறு தாட்களை ஆழ்ந்து வாசித்ததின் பேரில் விசாரணை தேதி 9.7.2013இக்கு முன்பாக சான்றுரத்தவருக்கு அனுப்பப்பட்டி ருந்து திருப்பப்பட்ட அழைப்பாணையை இந்த நீதிமன்றம் காண இயுல்கிறது. வழக்கு தரப்பினர் களுக்கு அழைப்பாணை குறியிட பட்டிருந்திருக்க முடியும். துரதிர்ஷ்டவசமாக அது குறியீடாகி யிருக்கவில்லை. அதிர்ஷ்டவசமாக அது கோப்பில் கிட்டுகிறது. ஆகையால் பொருட்கூறு தாள் வரையறைக்குள் ஆவணத்தை கொணரலுக்கு அதை சா.சி3 என குறியிட தானாகவே இந்த நீதிமன்றம் விரும்புகிறது. மதுரை 14, திருமால் புர்ம அஞ்சல், சாஸ்திரி நகர், ஊமச்சிகுளம் திரு.சங்கரலிங்கம்த/பெ. சொன்ன அழைப்பாணை எடுத்து செல்லப்பபட்டது. அது கீழ்வரும் மேற் குறிப்புடன் திருப்பப்பட்டது.

''மேலே தரப்பட்டுள்ளது'' ஆகையால் இந்த நீதிமன்றத்தால் செய்யப்பட்ட திருப்பல் மேற் குறிப்பை இணக்கமாக ஆழ்ந்து வாசித்தலின் பேரில் மூன்றாண்டு முன் வரை கிராமத்தில் அவர் இருந்தார் என்பதை நீதிமன்றம் காண வியன்றது. அவர் கண்டுபிடிக்கப்பட முடிய வில்லை என்பது எதிர்வாதியினது வழக்கு அல்ல. சட்டப் பிரிவு 69ஐ பிரயோகித்தலுக்கு அதிதீவிர முயல்வுகள் உள்ளபோதிலும் சான்று ரைத்தவர் கண்டறியப்பட முடியவில்லை என மெய்ப்பித்தல் எதிர்வாதியின் அல்லது பிரேரிப்பாளரது கடமையாகும்.

31. ஆனால் சொன்ன கூறை முழுமையாக நிரூபிக்க அவரது சுட்டு விரலைக் கூட அசைத்தி ருக்காத பிரேரிப்பாளர் சாட்சியை கண்டுபிடிக்க அவர் எடுத்த அனைத்து நடவடிக்கைகள் பற்றியும் சாட்சியின் மாற்று முகவரி குறித்து அவருக்கு தெரிந்ததா என்பது பற்றியும் பேசிடலுக்கு அழைப்பாணை சார்வாக்க இந்த

நீதிமன்றத்தால் பணிக்கப்பட்ட அமினாவை விசாரிப்பதை உசிதமானதாக கருதவில்லை. மேலும் சான்றுரைத்தவர் இல்லாதது பற்றி உறுதிகூறிய கிராம உதவியாளரையும் அவர்கள் விசாரிக்கவில்லை. ஒரு பிரேரிப்பாளர் உயிலை நிரூபித்துக் கொண்டிருக்கும் போதெல்லாம் சான்றுரைத்தவரை கண்டுபிடித்தலுக்கு அவர் களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் நீதிமன்றத்தில் அவர்கள் உறுதிகூற வேண்டும். அழைப்பாணை மேற்குறிப்பை ஆழ்ந்து வாசித்தலில் சொன்ன முகவரியில் மூன்றாண்டுக்கு முன்னராக சானறுரைத்தவர் இருந்தார் என் கண்டறியப் பட்டது. அது நேர்வாக இருக்குமானால் சான்று ரைத்தவரின் இப்போதைய முகவரியை கண்டு பிடித்திட கிராமத்துக்கு பிரேரிப்பாளர் தனிப்பட்டு சென்றிருந்திருக்க முடியும் அல்லது அவரது தரப்பில் யாரையாவது அனுப்ப முடிந்திருந்தி ருக்கும். மேலும், இந்த அழைப்பாணை தவிர சான்றுரைத்தவரை கண்டுபிடிக்க வேறேந்த நடவடிக்கைகளையும் பிரேரிப்பாளர் எடுத்திருக்க வில்லை. அனைத்துக்கும் சிகரமாக. சான்று ரைத்தவரை அவளால் கண்டுபிடிக்க இயல வில்லை என குறைந்தது பிரமாணம் கீழ் அவள் கூறியிருக்கவேயில்லை.''

17. 1918 SCC Online LB 64இல் அறிவிப் பான அசோமியா –எதிர்– வி.எஸ்.ஆர். எம்.செட்டி. வழக்கு தீர்ப்பில் கண்டிப்பானதாகவும் விடா முயற்சியுள்ளதாகவும் நேர்மையானதாகவும் நீதிமன்றத்து திருப்தியானதாகவும் உள்ள விசாரணையை உயிலை பிரேரிப்பவர் மேற் கொள்ள வேண்டும் என கீழமை பர்மாவின் உயர்நீதிமன்றம் தீர்ப்பிட்டது. அறியப்பட்டி ருந்தால் அது சாட்சியின் வசிப்பிடத்திலும் அவர் காணப்படக் கூடும். இதர இடங்களிலும் பொதுவாக அவரை பற்றி தகவல் அளிக்கக் கூடிய உறவினர் களிடமும் பிறரிடமும் செய்யப்பட வேண்டும். 1967 33 CLT 811இல் அறிவிப்பான சீதா தாகுவனி –எதிர்– ராமசந்திர நாஹக் பிரிவு 69 பின்பற்றப் படுமுன் அனைத்து சாட்சிகளும் இல்லாதி ருத்தல் உரியவாறு கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என ஒரிசா உயர்நீதிமன்றம் தீர்ப்பிட்டது.

18. 2013 (3) CTC 729இல் அறிவிப்பான (பழனியம்மாள் எதிர் பாப்பாத்தி) வழக்கு தீர்ப்பில் மேமு சார்பு வழக்குரைஞர் நம்புகை வைத்தார். சொன்ன வழக்கு பதிவுற்ற உயில் உட்பட்டதாகி அதில் எழுத்த மட்டுமே விசாரிக்கப் பட்டார். வழக்கு விசாரணையின்போது சான்று ரைத்த சாட்சிகள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்ற குறிப்புரை எழுத்தரிடம் அல்லது பிரேரிப்பாளரிடம் வைக்கப்படவில்லை. உயில் நிரூபிக்கப்பட்டது என உயர்நீதிமன்றம் தீர்ப்பிட்டது. அந்த வழக்கு 1999இல் தொடுக்கப்பட்டது. உயில் 9.7.1969 தேதியிலானது. பிற சொற்களில் முப்பதாண்டு பழைய உயில் பிரேரிக்கப்பட்டது. உயில் நிரூபிக்கப்பட்டது எ கீழமை நீதிமன்றங்கள் ஒருங்கியல்வாக தீர்ப்பிட்டன. உவிதொச பிரிவு 100 கீழ் ஆள்வை செலுத்தலில் இந்த நீதிமன்றம் தலையிட இணங்கவில்லை. தனித்திலும் தனித்த வழக்கு என்ற சொல்லாடல் நீதிபதியால் பிரயோகிக்கப் பட்டது. ஆகையால் அத்தகைய தீர்ப்பு இந்த வழக்கு பொருண்மைகளுக்கு இயந்திரகதியில் பொருத்தப்பட முடியாது. கையிலிலுள்ள வழக்கில் தாவா உயில் 2003வது வருடத்தியதாகும். எதிர்வாதியின் கூற்றுப்படி கூட வழக்கு விசாரணையின் போது சான்றுரைத்த சாட்சிகளில் ஒருவர் உயிரோடி ருந்தார். அதன் காரணமாக அழைப்பானை யிடப்பட்டது. சொன்ன தீர்ப்பு பொருண்மைகளில் பேரில் வேறுபடுத்தி காணத்தக்கதாகும் என நாங்கள் தீர்ப்பிடுகிறோம்.

19. உயில் நிறைவேற்றத்தை வாதிகள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என மேமு சார்பு வழக்குரைஞர் கூறுதல் நியாயமானதல்ல. உயிலின் செல்லுமைக்கு வாதிகள் சவாலிட்டு ள்ளார்கள் என்பதை வழக்குரை உறுத்துக்கூற்று களை உற்றுநோக்கல் காட்டும். ஆகையால் இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 68 கீழானன பொறுப்படைவை பூர்த்தியாக்கல் எதிர்வாதிக்கு கடப்பபடானது.

20. கையிலிலுள்ள வழக்கில் சங்கரலிங்கம் உயிரோடில்லை என எவ்விடத்திலும் மேமு/ எதிர்வாதி உமா வாக்குமூலம் அளித்திருந்த தில்லை. மூன்றாண்டுக்கு முன்பாக இடத்தை விட்டு சங்கரலிங்கம் அகன்றிருந்தார் எனவதை

விசாரித்தல் வெளிப்படுத்தியிருந்தது என்ற மேற்குறிப்பை வைத்திருத்த அமினாவை அவள் விசாரித்திருந்திருந்ததில்லை. மேமு பெரு பணக்கார பெண்மணி ஆவாள். அவளது முதுமை மற்றும் உடல்சார் நிலை காரணத்தால் தனிப்பட்ட தேடுதல் மேற்கொள்ளல் நிலைமையில் அவள் இருந்ததில்லை. ஆனால் அவளது கட்டளையிலான வழிவகைகளில் பிரபல துப்பறிதல் முகமையை அவள் நியமித்திருந்து சான்றுரைத்த சாட்சியின் இருப்பிடத்தை பற்றிய தகவலை அறிய முடிந்திருந்திருக்கும். அந்த மாதிரியான எதனையும் அவள் செய்திடவில்லை. அதன் காரமாகவே சட்டநெறியால் அவசியமான வாறு தாவா உயிலை எதிர்வாதி நிரூபிக்க வில்லை என கீழமை நீதிமன்றம் முடிவெடுத்திருந்தது. கீழமை நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட அணுகுமுறை திடமானது எனவும் தலையீடு தேவைப்பாடாக்கப்படவில்லை எனவும் நாங்கள் கருதுகிறோம்.

21. தாவா அட்டவணைச் சொத்தில் பாரு குட்டி அம்மாளின் ஆஸ்தியில் மாணிக்கம் பிள்ளைக்கு உண்டான பங்கு சேர்க்கப்பட்டதால் வழக்கு பகுதி பாகப்பிரிவினை தீதால் பாதிப்பானது என மேமு/எதிர்வாதி சார்பு வழக்குரைஞர் வாதிட்டார். சொன்ன வாதத்தை ஆராய்தலுக்கு முன், பாகப்பிரிவினைக்கு ஆட்படாத அனைத்து சொத்துகளையும் அவர் சேர்க்கவில்லையானால் ஒரு வாதி வழக்கிலிருந்து ஏன் நீக்கப்படுகிறார் என்ற விரிவான கோட்பாடை நாங்கள் குறிப்பில் கொள்ள வேண்டும். இந்த கோட்பாடு பொருத்தப் படாவிடில் பாகப்பிரிவினைக்கான அடுத்தடுத்த வழக்குகளுடன் எதிர்வாதி அலைக்கழிக்கப் படுவாள். தரப்பினர்கள் இடையில் பாகப்பிரிவினைக் கான இரண்டாவது வழக்குக்கு சாத்தியமில்லை என்பது தெளிவானால் சொன்ன கோட்பாடை பொருத்துதல் தேவையற்றதாகும். பாகப்பிரிவினை செய்தலுக்கு வேறேது சொத்தும் கிடையாது எனவும் மேமு எதிராக பாகப்பிரிவினைக்காக வழக்கு எவனையும் அவர்கள் தாக்கலிடமாட்டார்கள் எனவும் ஆன ஆணித்தரமான கூற்று வாதி களால் வைக்கப்பட்டது. கூடுதல் வழக்குக்கு குறியெல்லை இல்லாத போதும் வேறு சொத்து ஏதும் விடப்பட்டிருக்கவில்லை என்பது தெளிவாக உள்ளதாலும் பகுதி பாகப்பிரிவினைகளை வழக்கு மோசமானதாகும் என்ற வாதம் நிராகரிக்கப் பட வேண்டியதாகிறது. தகுதிப்பாடுகள் அடிப்படையிலும் கூட தூத்துக்குடியிலுள்ள சொத்துக்களை பாருகுட்டி அம்மாள் மேமு இக்கு உயில்வழியாக அளித்திருந்து மேமு அவற்றை அவளது சகோதரர கணேசுக்கு அறுதியளித்திருந்தாள் என்பது காணப்படுகிறது. தூத்துக்குடி சொத்து பொறுத்து தனி வழக்கை வாதிகள் முன்னராக தாக்கலிட்டிருந்தார்கள். ஆனால் அதை பிறழ்வுக்காக தள்ளுபடியாக விட்டிருந்தார்கள். அறிவுறுத்தல்கள் பேரில் இந்த பிரச்னைக்கு தீர்வு ஏற்கனவே காணப்பட்டுள்ளது எனவும் அதற்கு புத்துயிர் அளிக்கப்படாது எனவும் வாதிகளது வழக்கு ரைஞரால் எங்களிடம் உறுதிமொழி அளிக்கப் பட்டிருந்தது.

22. ஏற்கனவே சொல்லப்பட்டவாறு எவாசா3 கணேசும் மாணிக்கம் பிள்ளையின் சட்டபூர்வ வாரிசாக உள்ளார். அவர் எதிர்வாதியாக சேர்க்கப்படவில்லை. இங்குள்ள மேகுஇக்கு ஆதரவாக அவர் சாட்சிக்கூண்டில் ஏறியிருந்தாலும் கீழமை நீதிமன்றத்தில் உள்ள நடவடிக்கைளில் அவர் இணைந்திடத் தேர்ந்த தில்லை. ஆனால் இந்த மேல்முறையீட்டில் அவர் தன்னை இணைக்கப்பட பெற்றார். தாவா உயில் நிரூபிக்கப் பட்டிருந்ததில்லை என்ற கீழமை நீதிமன்ற தீர்ப்பை நாங்கள் உறுதியாக்குவதால் அவரது பங்குக்கு கணேசும் பாத்தியதையுள்ளவர் ஆவார். ஆகையால் கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் திருத்தப்படுகிறது. தாவா சொத்தின் முதலாவது உருப்படியில் முதலாவது வாதியின் வாரிசுகள் லி பங்குக்கு திரளாக பாத்தியதை உள்ளவர்கள் ஆவார்கள். [2வது எமேமு] இரண்டாவது வாதியும் [மேமு] எதிர்வாதியும் வழக்கில் சேர்க்கப்பட்ட [இங்குள்ள எமேமு3] கணேசும் தாவா சொத்தின் முதலாவது உருப்படியில் தலா 1/4 பங்குக்கு பாத்தியதை உள்ளவர்கள் ஆவார்கள்.

23.அதற்கிணங்க இந்த மேல்முறையீடு தீர்வாக்கப்படுகிறது. செலவு தொகையில்லை. விளைவாக தொடர்புறு பல்வகை மனுக்கள் முடித்து வைக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: பா.ஞானசேகரன்**

# காலதாமதத்தை மன்னித்து மறுதரப்பில்லா தீர்ப்பை ரத்து செய்ததோடு ரூ.60,000/- செலவுத் தொகை மனுதாரருக்கு வழங்க உத்தரவு

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி ஆர்.சக்திவேல் அவர்கள்**
**உ.சீ.மனு: 1167/2023 மற்றும் 3282/2024**
**உ.இவ.மனுக்கள் எண்: 8082/2023 மற்றும் 17543/2024**
(2026 (2) CTC 578)
**தீர்ப்பு ஒத்தி வைப்பு: 17/12/2025**
**தீர்ப்பு பகர்ந்த நாள்: 06/01/2026**

உ.சீ.மனு: 1167/2023

ராஜலட்சுமி அம்மாள் ...மனுதாரர்/எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/வாதி

–எதிர்–

1. ராதா அம்மாள்
2. அமுதா சித்ரா (காலஞ்சென்றவர்) ...எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
3. அஜித் குமார்
4. மீனா ...எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/காலஞ்சென்ற 3–வது பிரதிவாதியின் வாரிசுகள்

**கோரிக்கை**: 1950–ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 227–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த சிவில் சீராய்வு மனுவானது, விருத்தாசலம் முதன்மை சார்பு நீதிமன்றத்தால், அசல் வழக்கு எண் O.S.No.253/2015–இல் தொடரப்பட்ட இடைக்கால மனு I.A.No.440/2017–இல் தாக்கல் செய்யப்பட்ட மற்றுமொரு இடைக்கால மனுவான I.A.No.242/2021–இல், ஜுலை 14, 2022 அன்று பிறப்பிக்கப் பட்ட முறையான மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்: திரு. ஜே. ஆண்டனி ஜேசு

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்: திரு. சி. முனுசாமி

உ.சீ.மனு: 3282/2024

1. ராதா அம்மாள்

2. அமுதா சித்ரா (காலஞ்சென்றவர்) ... மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

3. அஜித் குமார்

4.மீனா ... மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் / 3–வது பிரதிவாதியின் வாரிசுகள்

–எதிர்–

ராஜலட்சுமி அம்மாள் ...எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

கோரிக்கை : 1908–ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 115–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த சிவில் சீராய்வு மனுவானது, விருத்தாசலம் முதன்மை சார்பு நீதிமன்றத்தால், அசல் வழக்கு எண் ஙூ.கு.மீணி.253/2015–இன் நிறைவேற்று மனு உ.க.மீணி.51/2017–இல் ஜுன் 27, 2024 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து, இந்தச் சிவில் சீராய்வு மனுவை அனுமதிக்குமாறு கோரி தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்: திரு. சி. முனுசாமி

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்: திரு. ஜே. ஆண்டனி ஜேசு

## பொது உத்தரவு

1. விருத்தாசலம் முதன்மை சார்பு நீதிமன்றத்தால், அசல் வழக்கு 253/2015-இல் தொடரப்பட்ட இடைக்கால மனு. 440/2017-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மற்றுமொரு இடைக்கால மனுவான 242/2021-இல், ஜூலை 14, 2022 அன்று பிறப்பிக்கப் பட்ட உத்தரவினால் அதிருப்தி யடைந்த அந்த மனுவின் எதிர்மனுதாரரும், அசல் வழக்கின் வாதியுமானவர், 1950-ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 227-இன் கீழ் இந்த உரிமையியல் சீராய்வு மனுவை (1167/2023) தாக்கல் செய்துள்ளார்.

2. அதேபோல், விருத்தாசலம் முதன்மை சார்பு நீதிமன்றத்தால், அசல் வழக்கு 253/2015-இன் நிறைவேற்று மனு 51/2017-இல் ஜூன் 27, 2024 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவினால் அதிருப்தியடைந்த அந்த மனுவின் எதிர்மனுதாரர்களும், அசல் வழக்கின் பிரதிவாதி களுமானவர்கள், 1908-ஆம் ஆண்டு உரிமை யியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 115-இன் கீழ் இந்த உரிமையியல் சீராய்வு மனுவை (CRP No.3282/2024) தாக்கல் செய்துள்ளனர்.

3. இவ்விரு சீராய்வு மனுக்களும் ஒரே அசல் வழக்கின் பின்னணியைக் கொண்டிருப்பதாலும், இவற்றில் தொடர்புடைய பிரச்சினைகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளதாலும், இவை இரண்டும் இந்த ஒரே பொது உத்தரவின் மூலம் முடிவு செய்யப்படுகின்றன.

4. தெளிவு பேணும் பொருட்டு, தரப்பினர் அசல் வழக்கில் அவர்கள் வகைப்படுத்தப் பட்டுள்ள வரிசைப்படியே இங்கும் குறிப்பிடப்படுவர்.

5. வாதி, 2014 ஜூன் 26-ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். வாதியின் கூற்றுப்படி, வழக்கின் சொத்துக்கள் முதலில் கோவிந்தராசு கோவிந்த சாமி என்பவருக்குச் சொந்தமானவை. அவர் மறைவுக்குப் பிறகு 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் அவரது சட்டப்பூர்வ வாரிசுகளாக உள்ளனர். பிரதிவாதிகள் 1 முதல் 3 மற்றும் வாதி ஆகியோர் ஜூன் 26, 2014 அன்று ஒரு விற்பனை ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். அதன் விற்பனை விலை ரூ.1,75,000/- என நிர்ண யிக்கப்பட்டது. ஒப்பந்தம் கையெழுத்தான அன்றே (ஜூன் 26, 2014), வாதி பிரதிவாதி களுக்கு முன்பணமாக ரூ.1,50,000/- வழங்கினார். ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஓராண்டு காலம் நிர்ணயிக்கப்பட்டது. வாதி தனது தரப்பு ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்ற எப்போதும் தயாராகவும் விருப்பத்துடனும் இருந்தார். இருப்பினும், பிரதிவாதிகள் விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்ற முன்வரவில்லை. எனவே, ஜூன் 10, 2015 அன்று வாதி, ஒப்பந்தப்படி விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்றுமாறு பிரதிவாதிகளுக்கு சட்டப்பூர்வ அறிவிப்பு அனுப்பினார். பிரதி வாதிகள் அந்த அறிவிப்பை ஜூன் 13, 2015 அன்று பெற்றுக் கொண்டபோதிலும், விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்ற முன் வரவில்லை. எனவே, வாதி ஆகஸ்ட் 2015-இல் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.

6. நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப் பட்டும் பிரதிவாதிகள் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. எனவே, பிரதிவாதிகள் நீதிமன்றத்திற்கு வராததால், அவர்கள் இல்லா நிலையாகக் கருதப்பட்டு, இறுதியில் ஜனவரி 8, 2016 அன்று ஒருதலைப்பட்ச தீர்ப்பு வழங்கப் பட்டது.

7. அந்த மறுதரப்பில்லா தீர்ப்பின் அடிப்படை யில், விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்றக் கோரி வாதி நிறைவேற்று மனுவைத் தாக்கல் செய்தார். அதற்கான அறிவிப்பைப் பெற்ற பிறகும், பிரதிவாதிகள் நிறைவேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. எனவே, உரிய சட்ட நடைமுறைகளைப் பின்பற்றிய பிறகு, நிறைவேற்று நீதிமன்றம் வாதிக்கு ஆதரவாக விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்றி வைத்தது.

8. அந்த விற்பனைப் பத்திரத்தின் அடிப்படை யில், சொத்தை சுவாதீனம் பெற வாதி ஒரு நிறைவேற்று மனுவைத் தாக்கல் செய்தார்.

நிறைவேற்று நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு, நி.ம.எண் 51/2017–இல் ஜூன் 27, 2024 அன்று பிறப்பித்த உத்தரவின் படி, வழக்கின் சொத்தின் சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைக்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டது. அந்த உத்தரவினால் அதிருப்தியடைந்து, பிரதிவாதிகள் இந்த உரிமையியல் சீராய்வு மனுவை (3282/2024) தாக்கல் செய்துள்ளனர்.

9. இதற்கிடையில், பிரதிவாதிகள் 1 முதல் 3 வரை, அசல் வழக்கு எண் 253/2015–இல் ஒருதலைப்பட்சமாகப் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்யக் கோரும் மனுவைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 551 நாட்கள் கால தாமதத்தை மன்னிக்கக் கோரி இடைக்கால மனு எண். 440/2017–ஐத் தாக்கல் செய்தனர். இந்த இடைக்கால மனு நிலுவையில் இருந்தபோது, மூன்றாவது பிரதிவாதியான சித்ரா என்பவர் ஜனவரி 29, 2018 அன்று உயில் ஏதும் எழுதாமல் காலமானார். அவருக்கு அஜித் என்ற மகனும், மீனா என்ற மகளும் சட்டப்பூர்வ வாரிசுகளாக உள்ளனர். துக்கத்திலிருந்த காரணத்தினால், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மூன்றாவது பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் சேர்க்க பிரதிவாதிகளால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை; இதனால், மூன்றாவது பிரதிவாதிக்கு எதிராக இ.ம.எண் 440/2017 காலாவதியானது. அதனைத் தொடர்ந்து, காலாவதியானதை ரத்து செய்யவும், காலஞ் சென்ற மூன்றாவது பிரதிவாதி சித்ராவின் வாரிசுகளை வழக்கில் சேர்க்கவும் கோரி, 358 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இ.ம.எண். 242/2021 என்ற மனுவைத் தாக்கல் செய்தனர். விசாரணை நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் கேட்டு, மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழிப் பத்திரத்தில் கூறப்பட்ட காரணங்களை ஏற்றுக்கொண்டு, இ.ம.எண். 242/2021 மனுவை அனுமதித்தது. இந்த உத்தரவினால் அதிருப்தியடைந்து, அந்த மனுவின் எதிர்மனுதாரரான வாதி, இந்த உரிமையியல் சீராய்வு மனுவை (1167/2023) தாக்கல் செய்துள்ளார்.

10. உரிமையியல் சீராய்வு மனு 3282/2024–இன் மனுதாரர்கள் மற்றும் உரிமையியல் சீராய்வு மனு. 1167/2023–இன் எதிர்மனுதாரர்களான பிரதிவாதிகள் 1, 2 மற்றும் காலஞ்சென்ற 3–வது பிரதிவாதியின் வாரிசுகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. சி. முனுசாமி அவர்கள் முன்வைத்த வாதமாவது: ஒருதலைப் பட்ச தீர்ப்பை ரத்து செய்யக் கோரும் மனுவைத் தாக்கல் செய்ய ஏற்பட்ட 551 நாட்கள் கால தாமதத்தை மன்னிக்கக் கோரி பிரதிவாதிகள் விசாரணை நீதிமன்றத்தில் இ.ம.எண் 440/2017–ஐ தாக்கல் செய்தனர். அது நிலுவையில் இருந்தபோது, 3–வது பிரதிவாதி சித்ரா காலமானார்; அவருக்கு இங்குள்ள 3 மற்றும் 4–வது சீராய்வு மனுதாரர்கள் வாரிசுகளாக உள்ளனர். பிரதிவாதிகள் 1 மற்றும் 2 துக்கத்தில் இருந்ததால், குறிப்பிட்ட காலத்திற்குள் வாரிசுகளைச் சேர்க்கும் மனுவைத் தாக்கல் செய்ய முடியவில்லை; அதன் விளைவாக 3–வது பிரதிவாதிக்கு எதிராக இ.ம.எண் 440/2017 காலாவதியானது. எனவே, அந்த நிலையை ரத்து செய்து வாரிசுகளைச் சேர்க்க 358 நாட்கள் காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்ட இ.ம. எண்.242/2021 மனு அனுமதிக்கப்பட்டது. தற்போது இ.ம.எண் 440/2017 மனு நிலுவையில் உள்ளது. இத்தகையச் சூழ்நிலை யில், நிறைவேற்று நீதிமன்றம் சொத்து சுவாதீனத்தை ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளது. பிரதிவாதிகளின் தரப்பு நியாயங்களுக்கு வழக்கில் வெற்றி பெற நல்ல வாய்ப்புள்ளது. சொத்து சுவாதீனத்தை ஒப்படைப்பது பிரதிவாதிகளின் உரிமைகளைப் பாதிக்கும். எனவே, பிரதிவாதிகளின் சீராய்வு மனுவை அனுமதித்து, நிறைவேற்று நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்யுமாறும், வாதியின் சீராய்வு மனுவான 1167/2023–ஐத் தள்ளுபடி செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

11. இதற்கு மறுப்பாக, உரிமையியல் சீராய்வு மனு எண். 1167/2023–இன் மனுதாரரும் உரிமையியல் சீராய்வு மனு எண். 3282/2024–இன் எதிர்மனுதாரருமான வாதி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு.ஆண்டனி ஜேசு அவர்கள் முன்வைத்த வாதமாவது: பிரதி

வாதிகள் வழக்கின் அழைப்பாணையைப் பெற்ற பிறகும், வேண்டுமென்றே வழக்கை மறு தரப்பில்லா வகையில் விடுவித்தனர்; அதன் தொடர்ச்சியாக ஜனவரி 8, 2016 அன்று மறுதரப்பில்லா தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும், அந்தத் தீர்ப்பை நிறைவேற்றுவதைத் தாமதப் படுத்தும் நோக்கில், 551 நாட்கள் கால தாமதத்துடன் ரத்து மனுவைத் தாக்கல் செய்தனர். மேலும், காலஞ்சென்ற 3–வது பிரதி வாதி சித்ராவின் வாரிசுகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் வழக்கில் சேர்க்க வில்லை. பிரதிவாதிகளின் இத்தகைய நடத்தை, வழக்கை எவ்வளவு முடியுமோ அவ்வளவு இழுத்தடிக்க வேண்டும் என்பதையே காட்டுகிறது. அவர்களின் செயல் நேர்மையானது அல்ல. நிறைவேற்று நீதிமன்றத்தின் உத்தரவில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை. எனவே, பிரதிவாதிகளின் சீராய்வு மனுவைத் தள்ளுபடி செய்யவும், வாதியின் சீராய்வு மனுவான 1167/2023–ஐ அனுமதிக்கவும் அவர் கோரினார்.

12. இருதரப்பு வாதங்களையும் இந்த நீதிமன்றம் கவனமுடன் பரிசீலித்தது மற்றும் ஆவணக் கோப்பில் உள்ள ஆதாரங்களை ஆய்வு செய்தது.

13. இ.ம.எண். 242/2021–இல் பிறப்பிக்கப் பட்ட உத்தரவை ரத்து செய்யக் கோரும் விண்ணப்பத்தைப் பொறுத்தவரை, 1908–ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை XXII, விதிகள் 4 மற்றும் 9–இன் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்களில் ஏற்படும் காலதாமதத்தை மன்னிக்கக் கோரி, 1963–ஆம் ஆண்டு காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 5–இன் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்களைத் தீர்மானிக்கும்போது, நீதிமன்றங்கள் தாராள மான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும் என்பது நிலைநாட்டப்பட்ட சட்ட விதியாகும்.

14. இந்த வழக்கில், அசல் வழக்கு ஜனவரி 8, 2016 அன்று ஒருதலைப்பட்சமாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. அந்த ஒருதலைப்பட்ச தீர்ப்பை ரத்து செய்யக் கோரும் மனுவைத் தாக்கல் செய்ய ஏற்பட்ட 551 நாட்கள் கால தாமதத்தை மன்னிக்கக் கோரி பிரதிவாதிகள் இ.ம.எண். 440/2017 மனுவைத் தாக்கல் செய்தனர். அந்த மனு நிலுவையில் இருந்த போது, வழக்கின் 3–வது பிரதிவாதியான சித்ரா காலமானார். அவரது வாரிசுகளை வழக்கில் சேர்க்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத தால், 3–வது பிரதிவாதிக்கு எதிராக இ.ம.எண். 440/2017 மனு காலாவதியானது. பின்னர், பிரதிவாதிகள் அந்தக் காலாவதி நிலையை ரத்து செய்து, காலஞ்சென்ற 3–வது பிரதிவாதியின் வாரிசுகளான அஜித் மற்றும் மீனாவை வழக்கில் சேர்க்க உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை XXII, விதி 4–இன் கீழ் மனுத் தாக்கல் செய்தனர். அதனுடன், அந்த மனுவைத் தாக்கல் செய்ய ஏற்பட்ட 358 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக் கோரி பிரிவு 5–இன் கீழ் இ.ம.எண். 242/2021 மனுவைத் தாக்கல் செய்தனர். இங்கு குறிப்பிடத்தக்கது என்னவென்றால், காலஞ்சென்ற 3–வது பிரதிவாதியின் வாரிசு களான அஜித் மற்றும் மீனா ஆகியோர் சீராய்வு மனு 1167/2023–இல் எதிர்மனுதாரர்கள் 3 மற்றும் 4 ஆகவும், சீராய்வு மனு. 3282/ 2024–இல் சீராய்வு மனுதாரர்கள் 3 மற்றும் 4 ஆகவும் உள்ளனர். 3–வது பிரதிவாதியின் (1–வது பிரதிவாதியின் மகள்) திடீர் மறைவு காரணமாக, மற்ற பிரதிவாதிகளால் தங்களது வழக்கறிஞரைத் தொடர்பு கொண்டு உரிய காலத்திற்குள் வாரிசுகளைச் சேர்க்கும் மனுவைத் தாக்கல் செய்ய முடியவில்லை என்பதே இ.ம.எண்.242/2021 மனுவின் உறுதிமொழிப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள காரணமாகும்.

15. மேலே குறிப்பிட்டபடி, வாரிசுகளைச் சேர்க்கும் மனுக்களுக்கான காலதாமதத்தை மன்னிக்கும் மனுக்களைத் தீர்மானிக்கும்போது தாராளமான அணுகுமுறை அவசியமாகும். விசாரணை நீதிமன்றம் அனைத்து உண்மை களையும் சூழ்நிலைகளையும் பரிசீலித்து, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரதிவாதிகள் 1, 2 மற்றும் 3–வது பிரதிவாதியின் வாரிசுகளுக்கு சாதகமாக உத்தரவிட்டுள்ளது. இதில் எவ்வித

முறைகேடோ அல்லது சட்டவிரோதமோ இருப்பதாக இந்த நீதிமன்றம் கருதவில்லை. எனவே, விசாரணை நீதிமன்றம் இ.ம.எண்.242/2021-இல் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய இந்த நீதிமன்றம் விரும்பவில்லை.

16. நி.கோ.மனு. 51/2017-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யக் கோரும் விண்ணப்பத்தைப் பொறுத்தவரை, ஜுன் 26, 2014 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த ஒப்பந்த நிறைவேற்ற வழக்குத் தொடரப்பட்டது. வாதி தங்களை நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டாம் என்றும் சமரசம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் கேட்டுக் கொண்டதாகப் பிரதிவாதிகள் கூறுகின்றனர். வாதியின் வார்த்தைகளை உண்மையாக நம்பி அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்றும், அதன் விளைவாக ஜனவரி 8, 2016 அன்று ஒருதலைப்பட்ச தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் பிரதிவாதிகள் தரப்பில் கூறப்படுகிறது.

17. இந்த வழக்கை விசாரிக்கும் போது, நிலவும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, ஒட்டுமொத்தப் பிரச்சினையையும் சுமுகமான சமரசம் மூலம் தீர்ப்பதற்கான வாய்ப்புகளை ஆராயுமாறு இருதரப்பினருக்கும் இந்த நீதிமன்றம் பரிந்துரைத்தது.

18. வாதி தரப்பு வழக்கறிஞர், தற்போது ஒட்டுமொத்தப் பிரச்சினைக்கும் சமரசம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளதாகத் தெரிவித்தார். மேலும், விற்பனைப் பத்திரத்தைப் பெறுவதற்கும், நி.கோ.மனு. 51/2017 மனுவைத் தாக்கல் செய்வதற்கும் வாதிக்குக் கணிசமான செலவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அந்தச் செலவுத் தொகையை வழங்கப் பிரதிவாதிகள் தயாராக இருந்தால், ஒருதலைப்பட்ச தீர்ப்பை ரத்து செய்வதற்குத் தங்களுக்குத் தடை ஏதுமில்லை என வாதி தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.

19. பிரதிவாதிகள் 1, 2 மற்றும் காலஞ்சென்ற மூன்றாவது பிரதிவாதியின் வாரிசுகள் தரப்பு வழக்கறிஞர், உரிய அறிவுறுத்தல்களைப் பெற்ற பிறகு, வாதிக்கு ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) வழக்குச் செலவாக வழங்க முன்வந்தார்.

20. இந்த வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டும், தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள உடன்படிக்கையின் அடிப்படையிலும், இயற்கை நீதித் தத்துவத்தை முழுமையாகப் பின்பற்றி வழக்கின் தகுதியின் அடிப்படையில் முடிவெடுக்கும் பொருட்டும், நிறைவேற்று நீதிமன்றம் நி.கோ.மனு எண் 51/2017-இல் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யவும், அத்துடன் ரூ.60,000/- வழக்குச் செலவு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு மறுதரப்பில்லா வகை தீர்ப்பை ரத்து செய்ய விசாரணை நீதிமன்றத்திற்கு உத்தரவிடவும் இந்த நீதிமன்றம் முனைகிறது.

21. இறுதியாக, இந்த சிவில் சீராய்வு மனுக்கள் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் முடிவு செய்யப்படுகின்றன:

(i) பிரதிவாதிகள் 1, 2 மற்றும் காலஞ்சென்ற மூன்றாவது பிரதிவாதியின் வாரிசுகள், வாதிக்கு ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) தொகையை 2026, ஜனவரி 28-ஆம் தேதி அல்லது அதற்கு முன்னதாகச் செலுத்த வேண்டும்;

(ii) அந்த நிபந்தனையின் அடிப்படையில், சீராய்வு மனு எண் 1167/2023ன் படியான மனு தள்ளுபடி செய்யப்படுகிறது மற்றும் விசாரணை நீதிமன்றம் இ.ம.எண். 242/2021-இல் ஜுலை 14, 2022 அன்று பிறப்பித்த உத்தரவு உறுதி செய்யப்படுகிறது. மேலும், சீராய்வு மனு எண். 3282/2024 மனு அனுமதிக்கப்படுகிறது மற்றும் நிறைவேற்று நீதிமன்றம் நி.ம.எண். 51/2017-இல் ஜுன் 27, 2024 அன்று பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது;

(iii) வாதிக்கு ரூ.60,000/- தொகையைச் செலுத்திய பிறகு, பிரதிவாதிகள் அது குறித்த

நினைவூட்டுக் குறிப்பை விசாரணை நீதிமன்றத்திலும் நிறைவேற்று நீதிமன்றத்திலும் தாக்கல் செய்ய வேண்டும்;

(iv) அத்தகைய நினைவூட்டுக் குறிப்பைப் பெற்றவுடன், விசாரணை நீதிமன்றம் பிரிவு 5–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண். 440/2017 மனுவை அனுமதிக்க வேண்டும். மேலும், கட்டளை IX, விதி 13–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ரத்து மனுவைக் கோப்பில் எடுத்துக் கொண்டு, மறுதரப்பில்லா வகை தீர்ப்பை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும்;

(v) ஒருதலைப்பட்ச தீர்ப்பை விசாரணை நீதிமன்றம் ரத்து செய்தவுடன், பிரதிவாதிகள் ஏற்கனவே தங்களது பதில் உரையினை ரத்து மனுவுடன் தாக்கல் செய்யவில்லை எனில், 30 நாட்களுக்குள் அதனைத் தாக்கல் செய்ய வேண்டும்;

(vi) அசல் வழக்கினை விரைந்து முடிப்பதற்கு இருதரப்பினரும் விசாரணை நீதிமன்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்;

(vii) வாதி, 1963–ஆம் ஆண்டு குறிப்பிட்ட நிவாரணச் சட்டம் பிரிவு 22 மற்றும் 1908–ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VI, விதி 17–இன் கீழ், மாற்றுப் பரிகாரமாகத் தான் வழங்கிய முன்பணத்தைத் திரும்பக் கோரி மனுத் தாக்கல் செய்தால், விசாரணை நீதிமன்றம் அந்த மனுவை சட்டப்படி பரிசீலிக்க வேண்டும்;

(viii) வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, இந்தச் சீராய்வு மனுக்களுக்கான செலவுத் தொகை குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்பட வில்லை;

(ix) அதன் விளைவாக, இதனுடன் தொடர்பு டைய சிவில் இடைக்கால மனுக்கள் முடிக்கப் படுகின்றன.

22. இந்த உத்தரவு நிறைவேற்றப்பட்டதை தெரிவிப்பதற்காக, இவ்வழக்கை 2026, ஜனவரி 29–ஆம் தேதியில் பட்டியலிடவும்.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## நீதித்துறை மீது நம்பகத்தன்மையை இழக்கும் வகையில் உத்தரவுகள் இருக்கக் கூடாது

நீதித் துறை மீது நம்பகத்தன்மையை இழக்கும் வகையிலான உத்தரவுகளை நீதிமன்றங்கள் பிறப்பிக்கக் கூடாது என உச்சநீதிமன்றம் 8.5.2026 தெரிவித்தது.

முன்னதாக, நில குத்தகை தொடர்பாக கடந்த 1996–இல் துணை ஆட்சியரின் உத்தரவுக்கு எதிராக 22 ஆண்டுகள் கழித்துத் தாக்கல் செய்யப் பட்ட மனு மீது 2024, ஏப்ரல் மற்றும் மே மாதம் என இரு உத்தரவுகளை குஜராத் வருவாய் தீர்ப்பாய பொறுப்புத் தலைவர் பிறப்பித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டது.

இது தொடர்பான மனுக்களை விசாரித்த குஜராத் உயர்நீதிமன்றம், தீர்ப்பாய பொறுப்புத் தலைவர் தனது பணிகளை மேற்கொள்ளவில்லை. துணை ஆட்சியர் பிறப்பித்த உத்தரவு தொடர்பாக நீண்ட கால தாமதத்துக்கு பின்பு தாக்கல் செய்யப் பட்ட மனு மீது இரு வேறுபட்ட உத்தரவுகளை அவர் பிறப்பித்துள்ளார். எனவே, கட்டாய விடுப்பில் அவரை பணியில் இருந்து விடுவிக்க குஜராத் அரசுக்கு உத்தரவிடப்படுகிறது என 2024, செப்டம்பரில் தீர்ப்பளித்தது.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பாய பொறுப்புத் தலைவர் மனுத்தாக்கல் செய்தார்.

அந்த மனு மீது உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த் மற்றும் நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, விபுல் எம். பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது.

அப்போது தீர்ப்பாய பொறுப்புத் லைவர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் வாதிடுகையில், குஜராத் வருவாய் தீர்ப்பாய பொறுப்புத் தலைவராக பணியாற்றியவர் பள்ளியின் முன்னாள் முதல்வர். அவர் மாவட்ட நீதிபதியாகவும் சிறப்பாகவே செயல்பட்டுள்ளார்.

இரு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாக உயர்நீதிமன்றத்தில் தவறாக குறிப்பிடப்பட்டது என்றார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், இந்த மனுவை விசாரணைக்கு ஏற்கிறோம். நீதிமன்றங்கள் தவறான உத்தரவை பிறப்பித்தால்கூட அதை திருத்திக் கொள்ளலாம். ஆனால் நீதித் துறை மீது பொது மக்கள் வைத்திருக்கும் நம்பகத்தன்மையை பாதிக்கும் வகையிலான அதிர்ச்சிகரமான உத்தரவு களை பிறப்பிக்கக் கூடாது எனத் தெரிவித்தனர்.

**நன்றி: தினமணி 23.5.2026**

# முகமதிய சட்டமும் சொத்து பங்கீடும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி டாக்டர் ஜி.ஜெயச்சந்திரன்**
**மே.வ.எண் 449/2022, உ.ப.ம.எண் 16191/2022**
**16.7.2025**
**2025 (5) CTC 236**

**கனி இஸ்ரத் ஜபீன்** ...**மேல்முறையீட்டாளர்**

**–எதிர்–**

**ஸமாஸ் ப்ரவீன்** ...**எதிர்வழக்கீட்டாளர்கள்**

**ஜஸ்ஹத் கணம்**
**மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்**

**கே. குமார்**
**எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்**

மே.வ.அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகை யின்றி, ப.மக்கள் முடிக்கப்பட்டன.

**கோரிக்கை**: மு.வ.எண் 33/2018, IIIஆம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியின் கோப்பில் திருப்பத்தூரின் வேலூரில் உள்ளது. இதில் முதல் மேல்முறையீடு அனுமதிக்கப் பட்டது. 1908 உ.வி.தொ.ச. இன் 96ஆம் பிரிவின் உடன்படிக்கப்படுகிறது. கட்டளை 41, 41(ஆ)வின்படி மேல்முறையீட்டு வழக்கானது முன்னிடப்பட்டது. 22.4.2022 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை தள்ளுபடி செய்யக் கோரி.

தீர்ப்பு 7.7.2025க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 16.7.2025 அன்று வெளியிடப்பட்டது.

## தீர்ப்பு

1.எதிர்வாதி பாகப்பிரிவினை வழக்கில் மேல்முறையீட்டாளர் வாதி (ஸமாஸ் பர்வீன்) பாகப்பிரிவினைக்காக வழக்கு ஒன்றை முன்னிட்டுள்ளார். எதிர்வாதிக்கு பணிப்புரை அளிக்க கோரி அதாவது தாவாவில் உள்ள சொத்தினை நான்கு சமபாகங்களாகப் பிரித்து அதில் 3/4 பங்கினை வாதிக்கு ஒதுக்கீடு செய்யப் பணிக்குமாறு.

2. வாதியின் வழக்காவது தாவாவில் உள்ள சொத்து, ஜனாப் காக்கா ஷகினா அஸ்லாம் என்பவருக்கு சொந்தமானது. அதாவது மலாஸ் அஸ்லாம் பாஷாவின் மனைவி. சொல்லப்பட்ட ஜனாப் காகா ஷகினா அஸ்லாம் 23.11.2007 அன்று இறந்துள்ளார். ஜெரியத் சட்டத்திற் கிணங்க முகமதிய பெண்ணின் சொத்தானது. கணவருக்கும் உடன்பிறந்தவர்களுக்கும் சென்ற டையும் காகா ரியாஸ் அகமது சாகிப். இவர் ஜனாப் காகா சாகிப் அஸ்லாமின் சகோதரர் அவரது கலை மூடல் மலாஸ் அஸ்லாம் பாஷா சம பங்கு பெறும் உரிமை கொண்டுள்ளார். அதாவது அவளது சொத்தில் காக்கா ரியாஸ் அகமது சாகிப் அதன் பின்னர் அவரது பங்கினை மலாஸ் அஸ்லாம் பாஷா சார்பாக அளித்துள்ளார். ஒரு விடுவிப்பு ஆவணம் 14.7.2008 தேதி யிட்டதன் மூலமாக. எனவே மலாஸ் அஸ்லாம் பாஷா இதன் குமு சொந்தக்காரர் ஆனால் அதாவது தாவாவில் உள்ள சொத்திற்கு.

3. வாதி, மலாஸ் அஸ்லாம் பாச்சாவின் சகோதரியானதால் அவருக்கு 1/4 பங்கு சொத்தில் உரிமை உள்ளதென கோருகிறார். அதாவது மலாஸ் அஸ்லாம் பாஷாவின் இரண்டாவது மனைவி வாதி 3/4 பங்கினை தாவாவில் உள்ள சொத்தில் கோருகிறார். அதாவது முகமதிய சட்டத்தின்படி குமு ரியாத் சட்டம்). இவர் ஜமாத்துதாரர்களை சொத்து பாகப்பிரிவினைக்காக அணுகி 3/4 பங்கினை ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளார். எனினும் எதிர்வாதி பாகப்பிரிவினை செய்யாது இருந்து ள்ளார். எனவே வாதி அறிக்கை அளித்த பின்னர், வழக்கினை முன்னிட்டுள்ளார்.

(மலாஸ் அஸ்லாம் பாஷா – விற்கு மனைவி வழியாக வந்த சொத்து) இறந்தவர் ஒரு அச்சகத்தை நடத்தி வந்துள்ளார். அதன் மதிப்பு 1,00,000/ மற்றும் வங்கி வைப்பீடாக ரூ.3,27,828 அவர் கோரியது. 3/4 பங்கு மேற்சொல்லப்பட்ட உடைமைகள் தொடர்பாக.

5. எதிர்வாதி, வாதியின் கோரிக்கைகளை மறுத்து கூறியுள்ளதாவது, மலாஸ் அஸ்லாம் பாஷா 6.6.2015 அன்று உயில் எழுதாது இறந்துள்ளார் என்று கூறுவது பொய்யானது மற்றும் சொத்தானது வாதியை சென்றடையும் என்பதும் மற்றும் எதிர்வாதி 3:1 என்ற விகிதாச்சாரத்திலும் ஷெரியத் சட்டப்படி பெறுவர் என்பதும் எதிர்வாதி வாதமாவது, அவரது வாழ் நாளின்போது, மலாஸ் அஸ்லாம் பாஷா தாவாவில் உள்ள சொத்தினை வகை செய்துள்ளார் என்பதும் அவரது இறப்பின்போது அவருக்கு ரூ.3,50,000 கடன் வாணியம்பாடியினை பாரத ஸ்டேட் வங்கிக்கு செலுத்தத்தக்கதாக இருந்தது என்பதும், பிற கடன்கள் 1,50,000 இருந்ததாகக் கூறப்பட்டது. எதிர்வாதிகள் கோரிக்கை யானது அவர் அனைத்து கடன்களையும் இறந்தவர் சார்பாக அளித்து விட்டார் என்பது.

6. மேலும், இதில் வாதிடப்பட்டதாவது மலாஸ் அஸ்லாம் பாஷா அவரது வாழ்நாளின் போது வாய்மொழிக் கொடை (ஷிபா) ஆக எதிர்வாதிக்கு 24.7.2013 அன்று சொத்தினை மரியாதைக்குரிய சாட்சிகளின் முன்னிலையில் அளித்துள்ளார் என்பது. அவர் மேலும் அவருக்கு சொத்தின் உடைமையை அளித்துள்ளார். எதிர்வாதி சொல்லப் பட்ட இடத்தில் தற்போது வசித்து வருகிறார் மற்றும் முனிசிபல் வரியைச் செலுத்தி வருகிறார் வனைந்துள்ளது.

1) வாதிக்கு அவரால் கோரப்பட்டவாறு தாவாவில் உள்ள சொத்தில் 3/4 பங்குக்கு அவர் உரிமையுடையவரா?

2) மலாஸ் அஸ்லாம் பாஷா 24.7.2013 அன்று தாவாவில் உள்ள சொத்தினை எதிர்வாதி சார்பாக ஷிபா கொடையாக அளித்துள்ளாரா

3) வேறு எந்த உய்திகளுக்கு வாதி உரிமை யுடையவர்?

8. விசாரணை நீதிமன்றம் பகுதி வழக்கினை அனுமதித்துள்ளது. முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. வாதி சார்பாக, அவருக்கு 3/4 பங்கு இளம் எண் 1 இல் உரிமையுள்ளதாக விளம்பப்பட்டது. அதாவது தங்கியுள்ள சொத்து (அசையாச் சொத்து) எனினும் இளம் எண் 2 தொடர்பாக அதாவது (அச்சகம்) பொருத்து இது தள்ளுபடி செய்யப்பட்டது. அசையாச் சொத்து 3/4 பங்கினை வாதிக்கு அளிப்பதில் எதிர்ப்பு மற்றும் தீர்ப்பாணையினால் குறையுற்ற வாதிக்கு அளிப்பதில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையினால் குறையுற்ற எதிர்வாதி/மேல்முறையீட்டாளர் இந்த தற்போதைய மேல்முறையீட்டினைச் செய்துள்ளார்.

9. மேல்முறையீட்டாளர், வாதமாவது விசாரணை நீதிமன்றம் வாய் கருதுகை செய்ய தவறி விட்டது. மேல்முறையீட்டாளருக்கிணங்க, சொத்து மலாஸ் அஸ்லாம் பாஷா கைக்கு வந்தது. அவரது முதல் மனைவி ஜனாப் காகா ஷகிலா அஸ்லாம் மூலமாக மற்றும் அவர் வாய்மொழி கொடையை இரண்டாம் மனைவி (மேல்முறையீட்டாளர்) சார்பாக செய்துள்ளார். அதாவது பெரியவர்கள் முன்னிலையில் மேலும் இதில் வாதிடப்பட்ட தாவது இது ஒரு வசிக்கும் வீடான காரணத்தால், இருவரும் அதாவது மலாஸ் அஸ்லாம் பாட்சாவும் எதிர்வாதி யும் அதில் வசித்து வந்துள்ளனர். வாய்மொழிக் கொடைக்கான மூன்று முக்கிய நிபந்தனைகள். அதாவது விளம்புகை ஏற்கப் படுதல் மற்றும் உடைமை ஒப்படைக்கப்படுவதில் இவை நிறைவேற்றப்பட்டுள்ளன.

10. வாய்மொழி கொடைக்கு ஆதரவாக,

DW3இனால் விளம்புகை பேசப்பட்டுள்ளது. அவர் அதை விவரித்துள்ளார். அதாவது வாய்மொழிக் கொடை பெரியவர்கள் முன்னிலை யில் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

எதிர்வாதியின் சான்றுரை மூலமாக, ஏற்கப் பட்டது நிரூபிக்கப்பட்டது.

எதிர்வாதியினால் உடைமை சான்றாக்கப் பட்டது. அதாவது அந்தச் சொத்தில் தொடர்ந்து தங்குவது மற்றும் அவளால் செலுத்தப்பட்ட முனிசிபல் வரிகள்.

11. மாறாக, எதிர்வழக்கீட்டாளர்/வாதி சார்பாக முன்னிலையாகிற, வழக்கறிஞர் பணிந்தளிப்ப தாவது இவர் கோரிக்கை என்பது ஒரு புனையப்பட்ட கதை. இது எதிர்வாதியால் அமைக்கப்பட்டது. அதாவது சட்டப்படியான வாதியின் பங்கை தடுப்பதற்காக DW1, DW2. DW3இன் சான்றுகள் தொடர்ச்சியாக இல்லை மற்றும் முரண்பட்டதாக உள்ளது. விசாரணை நீதிமன்றம் DW3இன் கூற்றை சரியாகவே நம்பாதுள்ளது. இது வாய்மொழி கொடையின் மேம்படுத்தப்பட்ட கூற்றாக மற்றும் கோரிக்கை யினை அவ்வாறே நிராகரித்துள்ளது.

12. தீர்மானிக்கப்பட வேண்டிய குறிப்புகள். விசாரணை நீதிமன்றம் 24.7.2013 தேதியிடப் பட்ட (ஷிபா) வாய்மொழி ஆவணத்தை நம்பாது தவறு செய்துள்ளதா?

13. சாட்சி ஏ, விற்பனை ஆவணம் 3.1.1994 தேதியிடப்பட்டது. ஜனாப் காகா ஷகிலா அஸ்லாம் பெயரில் அவர் 23.11.2007இல் இறந்துள்ளார். இது பூசலாக்கப்படவில்லை. அதாவது முதல் இனத்தில் 1/2 பங்கு தாவா வில் உள்ள சொத்தி இது மலாஸ் அஸ்லாம் பாஷாவின் கைக்கு வந்தது. அவரது மனைவி யின் இறப்பில்பேரில் அகமது சாகிப் அஸ்லாம் பாஷாவின் சகோதரர் அவரது 1/2 பங்கினை மலாஸ் அஸ்லாம் பாஷா சார்பாக விடுவித்து ள்ளார். விடுவிப்பு ஆவணம் 14.7.2008 தேதியிடப்பட்டது. இதன் மூலம் மலாஸ் அஸ்லாம் பாஷா மொத்த சொத்தின் சொந்தக் காரர் ஆகிறார்.

14. எனவே, மலாஸ் அஸ்லாம் பாஷா முதல் இனச்சொத்தின் மொத்த சொந்தக்காரர் ஆகிறார். இது வாதி மற்றும் எதிர்வாதி இருவராலும் ஏற்கப்பட்ட ஒன்று. ஜனாப் காகா சாஹீமா அக்லாமின் இறப்பிற்குப் பின்னர், மாலாஸ் அஸ்லாம் பாஷா எதிர்வாதியைத் திருமணம் செய்துள்ளார் மற்றும் இருவரும் முதல் இனச் சொத்தில் வாழ்கிற வீட்டு இடத்தில் வசித்து வந்துள்ளனர்.

15. வாதியின் வழக்காவது மலாஸ் அஸ்லாம் பாஷா உயில் எழுதாது 6.6.2015 அன்று இறந்துள்ளார் மற்றும் அவரது வாழ்நாளின் போது அவர் ஒரே அச்சகத்தை நடத்தி வந்தார். அது கிராபிக் ஆர்ட் பிரிண்டர்ஸ் என்றும் பெயரிலானது இன எண் 2 வழக்கின் சொத்து, செரியத் சட்டப்படி மலாஸ் அஸ்லாம் பாஷா விற்கும் அவரது மனைவி மற்றும் சகோதரிக்கு 1: 3 முறையே சொத்தில் பங்கு பெறுவர்.

16. மாறாக எதிர்வாதி அவரது வாழ்நாளின் போது கோருவதாவது மலாஸ் அஸ்லாம் பாஷா வாய்மொழியாக கொடை 24.7.2013 அன்று முதல் இனச் சொத்தினை அவருக்கு கொடை யாக அளித்துள்ளார். அதுவும் பெரியவர்கள் முன்னிலையில் இந்த வாய்மொழிக் கொடைக்க ஆதாரமாக எதிர்வாதி பின்வரும் சாட்சிகளை விசாரித்துள்ளார்.

சுனாகைசர் அகமது, செயலாளர் தலைவர், வன்னியம்பதி கல்விச் சங்கம் DW2.

முகமது ப்ரூல்லா, கட்டிட ஒப்பந்ததாரர் DW3. மற்றும்

முகமது மக்கின், வியாபாரி, வன்னியம்பாடி DW4.

17. இந்தச் சாட்சிகள் பொதுவாக வாய்மொழிக் கொடை பற்றிக் கூறியுள்ளார். அதாவது மலாஸ் அஸ்லாம் பாஷாவினால் எதிர்வாதி சார்பாக செய்யப்பட்ட கொடை அவர்கள் முன்னிலையில் செய்யப்பட்டதாக. இவரது தன்னிச்சையான விளம்புகையை இவர்கள் உறுதி செய்தன மலாஸ் அஸ்லாம் பாஷாவினால் செய்யப் பட்டது. அந்தக் கொடை எதிர்வாதிகளால் ஏற்கப் பட்டது. இதில் சில முரண்பாடுகள் இருந்தன. எனினும், இது அவருடைய நம்பகத் தன்மை யினையும் தடை செய்யவில்லை. ஏனெனில் இவர்கள் மூத்தவர்கள் மற்றும் மரியாதைக் குரியவர்கள் அவர்களது இன உறுப்பினர்கள் மற்றும் இவர்கள் வாதிக்கு எதிராக பொய்யாக

எதனையும் கூறக் காரணம் எதுவும் இல்லை.

18. எதிர்வழக்கீட்டாளர்/வாதியின் வழக்கறிஞர், வலிமையாக வாதிட்டதாவது, DW2 & DW3யிட மிருந்து ஒரு சீரான சாட்சியோ நம்பத்தகுந்த சாட்சியமாகவோ இல்லை என்பது. அதாவது கொடை பற்றிய விளம்புகை தொடர்பாக மற்றும் தொடர்பற்ற காலத்தில் எதிர்வாதி முன்னிலை யாயிருந்தல் கூறப்பட்ட விளம்புகை வாதிக் கிணங்க முதலாவதாக பேசப்பட்டது DW4 பற்றியதே, இது மேம்படுத்தப்பட்ட கூற்றாகத் தோன்றுகிறது. DW2 & DW3 – எதிர்வாதியின் வழக்கை உறுதிப்படுத்த தவறியுள்ளனர்.

19. எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞரின் வாதமாவது, வெளிப்படையாக சிறந்ததாக தோன்றியபோதும் அதனை ஏற்க முடியாது. ஷியாவின் விளம்புகையை சாட்சிகள் முழுவது மாக திருப்பிக் கூறுவதில் ஏற்பட்டுள்ள தவறுகை. இதனால் வாய்மொழிக் கொடை செல்லத்தக்க தாக ஆக்கப்படாது. முகமதியச் சட்டத்தின்படி எது ஷிபாவினை முடிவுறுத்துகிறது என்பது விளம்புதல், ஏற்பது மற்றும் உடைமையை ஒப்படைப்பது இவற்றில் உள்ளவாறே விளம்புகையினை கூறவில்லை.

20. கொடையளித்தவரின் விளம்புகையை உள்ளபடியே திரும்பிக் கூற தவறியுள்ளது. இது ஷிபாயினை செல்லத்தக்கதான ஆக்காது. உச்ச நீதிமன்றம் மன்சூர் ஷாபீர் (சிறப்பு) மற்றும் பிறர் –எதிர்– ஷாலிமா (இறப்பு) அவர்களது ச.சார்பாக மற்றும் பிறர், 2025 (1) த.த.வ. 226 (உச்.நீ.), 2025 (1) M.W.N. (உரிமையியல்) 210 (உச்.நீ.) வாய்மொழி கொடையின் தேவையான குறிப்புகளை கலந்தாய்வு செய்வ தற்கு பின்னர், பின்வருவனவற்றைக் கண்ட றிந்துள்ளது.

"25 மேற்சொல்லப்பட்ட கலந்தாய்வுகளில் வெளிவந்தவை இதில் 3 முக்கிய தேவையான உள்ளன. இவை செய்யத்தக்ககொடை ஆவணத் திற்கு முக்கியமானவை.

(அ) கொடையானது, கொடையளிப்பவரால் கட்டாயமாக விளம்புகை செய்யப்பட வேண்டும். அதாவது கொடை பெறுபவருக்கு.

(ஆ) அத்தகைய கொடை ஏற்கப்படுதல் வேண்டும். வெளிப்படையாகவோ உட்கிடை யாகவோ அதாவது கொடை பெறுபவரால் அல்லது அவர் சார்பாக.

(இ) விளம்புகை மற்றும் ஏற்பது அல்லாது உடைமையானது ஒப்படைப்பு செய்யப்படுதல் வேண்டும். அதாவது செல்லத்தக்க கொடை என்பதில்.

26. ஒரு செல்லத்தக்க கொடை ஆவணத்தில் இவை அடுத்தடுத்து அமைதல் வேண்டும். ஒன்றன்பின் ஒன்றாக பிந்தியது சரியானதாக அமைய முந்தியது சரியானதாக இருத்தல் வேண்டும்.

வேறுசொற்களில் (அ) இணங்கப்படவில்லை யானால் (ஆ) மற்றும் (இ) எந்த விளைவையும் கொண்டிருக்காது. இது போன்றே (அ) மற்றும் (இ) நிறைவேற்றப்படவில்லையானால் (ஆ)வினால் எந்த மாற்றமும் ஏற்படாது. அறுதியாக அனைத்து நிபந்தனைகளும், நிறைவேற்றப்படுதல் வேண்டும்".

21. தற்போதைய வழக்கும் DW1 (எதிர்வாதி) வலியுறுத்தி கூறியதாவது அவள் அந்தக் கொடையை ஏற்றுள்ளார். அப்போதிலிருந்தே அந்தச் சொத்தினை உடைமையில் கொண்டு ள்ளார் என்பது. அது ஒரு வசிக்கும் வீடாக உள்ளதாலும் மற்றும் எதிர்வாதியும் அதில் வசித்து வருவதாலும், அதாவது இறந்த மலாஸ் அஸ்லாம் பாஷா உடன் வாழ்ந்து வந்துள்ளார். இதில் ஏற்பது மற்றும் உடைமை உட்கிடையே யானவை. இது பற்றி வேறு எந்த மேலுமான மெய்ப்பிப்பும் தேவையிராது.

22. வாதியின் சாட்சிகள் வாய்மொழி கொடை பற்றி அறியப்பட்டதாக கூறவில்லை. எனினும், கடன் பற்றி அவர்கள் எதனையும் அறிந்திருக்க வில்லை. அதாவது மலாஸ் அஸ்லாம் பாஷா வினால் விட்டுச் செல்லப்பட்ட கடன்கள் தொடர்பாக. இது பற்றி இவர்கள் எந்தச் சான்றையும் அளிக்க வில்லை. அதாவது அந்த அச்சகம் அவருக்கு சொந்தமாக இருந்தது என்றோ அல்லது

ரூ.3,29,828 அவரது வங்கிக் கணக்கில் அதாவது வாணியம்பாடி கிளை பாரத ஸ்டேட் வங்கியிலும் உள்ளதாக எனவே இதில் சான்றாவது வாதி வழக்கின் இணைப்புச் சொத்தினை இணையாக உடைமையில் கொண்டிருக்க வில்லை அல்லது கூட்டாக அதனை துய்க்க வில்லை என்பது. அதாவது மலாஸ் அஸ்லாம் பாஷாவின் இறப்பிற்குப் பின்னர் இதன் விளைவாக மலாஸ் அஸ்லாம் பாஷா உயில் எழுதாது இறந்துள்ளார் என்பது பற்றிய கோரிக்கை அதாவது அவரது சகோதரியினால் இவை கைக் கொள்ளப்படும் என்பதாக அதாவது வாதியால் 3/4 பங்கு மற்றும் இரண்டாம் மனைவி எதிர்வாதி யால் 1/4 பங்கு அளவிற்கு பயன்படுத்தப்படும் என்பது. சரியானதல்ல. வாய்மொழி விழா 24.7.2013 தேதியிடப்பட்டது. எதிர்வாதியினால் வாய்மொழி அளிக்கப்பட்டது மெய்ப்பிக்கப் பட்டது. அதாவது நிகழக் கூடியவை பற்றிய சூழ்நிலைகள் காரணமாக இது சரியானதாக மனநிறைவளிக்கிறது.

23. கையில் உள்ள வழக்கில், மலாஸ் அஸ்லாம் பாஷாவின் விளம்புகை அதாவது மனைவிக்கு சொத்தினைக் கொடையாக அளிப்பது என்பது பற்றி DW3 & DW4யினால் பேசப் பட்டது. DW4, DW2 & DW3யினால் பேசப்பட்ட உள்ளபடியேயான விளம்புகை பொதுவாக உறுதி செய்யப்பட்டதாவது மலாஸ் அஸ்லாம் பாஷா வெளிப்படையாக விளம்புகை செய்த தாவது அவருடைய எண்ணமான எதிர் வாதிக்கு சொத்தினை கொடையாக அளிப்பது பற்றியது. அவர்கள் முன்னிலையிலேயே பேசப் பட்டது. எதிர்வாதி முன்னிலையில் விளம்புகை செய்யப் பட்ட நேரம் இது அனைத்து சாட்சி களாலும் ஒரு சீராக ஆதரிக்கப்பட்டது. இதை அவர் உடைமையை கொடையளிப்பவர் கையிலிருந்து பெற்றானா என்றும் ஐயம் எதிர்வழக்கீட்டாளர்களால் எழுப்பப் படுவது எந்த விளைவையும் ஏற்படுத்தாது. ஏற்பது வெளிப்படையாக அல்லது உட்கிடையாக இருக்கலாம் மற்றும் இது கொடையளிப்பவரின் முன்னிலையில் வாய்மொழியாக அல்லது உடைமை மாற்றாக இருக்க வேண்டும் என்ப தில்லை.

24. இந்த வழக்கில், தங்கியுள்ள வீடு தொடர்பாக விளம்புகை அமைந்துள்ளது. (இன எண்) இங்கு மலாஸ் அஸ்லாம் பாஷாவும் எதிர்வாதியும் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்ந்துள்ளனர். எனவே விளம்புகை ஏற்பது மற்றும் உடைமை இருப்பது பற்றி எந்த ஐயப்பாடும் இல்லை. இவையே ஷிபாவின் முக்கிய செல்லத்தக்க குறிப்புகள். இது இந்தத் தீர்ப்பில் ஆதாரமாக்கப்படுகிறது. பம்பாய் உயர் நீதிமன்றம் காதரான் பீ மற்றும் பிறர் –எதிர்– பாத்திமா பீ மற்றும் பிறர் அ.இ.அ. 1987 பம்பா. 406 தொடர்பான பக்கம் 413. இதில் கூறப்பட்ட தாவது.

“பொது விதியாவது, கொடையளிப்பவர் அந்தச் சொத்து தொடர்பாக அனைத்து கட்டுப்பாடுகளையும் விலக்குதல் வேண்டும். அதாவது கொடையின் நுதல் பொருளாக உள்ள சொத்தின் மீது உடைமை ஒப்படைப்பு என்பது. கொடையை தொடர்வதாகும். ஆனால் குழந்தைக்கு தந்தை ஒரு பொருளை கொடையாக அளிக்கும் போது இந்த நிலை வேறுபட்டதாக அமையும். இதில் உண்மையாவது தந்தை தன் குழந்தைக்கு கொடையாக அளிப்பதில் சட்டத்தில் எந்தத் தவறும் காணப்படவில்லை. இரண்டு நிலை களில், இடர்பாடு எழுகிறது. முதலாவதாக ஓர் இளையராக உள்ளபோது, அவர் அதனை உள்ளபடியே உடை பெற முடியாத சொத்தாக இருப்பின் அதாவது அவரது காப்பாளர் மூலமாக மட்டுமே அதன் உடைமையைப் பெற முடியும் என்பதாக இரண்டாவதாக குழந்தையின் காப்பாளர் தந்தையாவார். அதாவது இளைய ரான குழந்தைக்கு ஒரு முகமதிய தந்தை அவரது இளையரான குழந்தைக்கு கையுடைமைய அளித்தல் என்பது. வலது கையிலிருந்து இடது கைக்கு ஒரு பொருளை மாற்றுவது போன்றது ஆகும். இதுவே உடைமை மாற்றும் என்பதற்கு முக்கியத்துவம் அளிக்காததற்காக காரணமாகும். நல்லெண்ணத்துடன் தந்தையினால் ஒரு

கொடை இளையரான குழந்தைக்கு செய்யப்படும் போது உடைமை பற்றிய கேள்விக்கு முக்கியம் இல்லை. இதில் தேவை நீடிக்கும்போது, இது வேறு முறையில் நிறைவேற்றப்படுகிறது. அதாவது கொடைத் தேதி வரை, தந்தை அதன் உடைமையைக் கொண்டிருப்பார். அதாவது தொடர்புடைய சொத்து தொடர்பாக, அந்தக் குழந்தை சார்பாக கொடையாக அளிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அவரிடம் உடைமை இருக்கும். அதாவது இளையர் சார்பாக.

25. இது போன்ற நெறிமுறையே கணவரின் கொடை தொடர்பாகவும் பொருந்துவதாகும் தங்கும் வீட்டை சொத்தாக மனைவிக்கு அளிப்பதில் உடைமை ஒப்படைத்தல் என்பது தேவைப்படாது. இதில் தரப்பினர்கள் தங்கியுள்ளபோது, அதாவது கொடைச் சொத்தில் தங்கியிருக்கும்போது, மேற்சொல்லப்பட்ட பொருண்மைகளின் சொத்தில் தங்கியிருக்கும்போது, மேற்சொல்லப்பட்ட பொருண்மைகளின் கருத்தில், சட்டநிலை, நீதிமன்றம் கண்டறிவதாவது விசாரணை நீதிமன்றம், DW2 முதல் DW4 வரையிலான சாட்சிகளை உரியவாறு ஏற்க தவறி விட்டது. இவர்கள் வாய்மொழி – கொடை பற்றி எதிர்வாதி சார்பாக சான்றளித்துள்ளனர். மேலும் வாதியின் வழக்காவது, அவள் சேர்ந்து உடைமையை கொண்டிருந்தாள். அதாவது அவளது சகோதர னுடன் இதற்கான சான்று ஆதாரமாக அளிக்கப் படவில்லை. வாதியின் பக்க சான்றாவது இந்த வாய்மொழி இது பற்றி முழுமையாக அறிந்தி ருக்கவில்லை.

26. அவ்வாறே, மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கப்படுகிறது. இதன் விளைவாக, தொடர்புடைய உரிமையியல் பல்வகை மனு முடிக்கப்படுகிறது. செலவுத் தொகை பற்றி. எந்த ஆணையும் இல்லை. தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மு.வ.எண் 33/2016. இது IIIஆம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியால் பிறப்பிக்கப்பட்டது. வேலூரில் திருப்பத்தூரில் இது தள்ளுபடி செய்யப்பட்டது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## சென்னை உயர்நீதிமன்றத்துக்கு 19 பேரை புதிய நீதிபதிகளாக நியமிக்க வேண்டும்

### – உச்சநீதிமன்ற கொலீஜியம் பரிந்துரை

சென்னை உயர்நீதிமன்றத்துக்கு 19 பேரை புதிய நீதிபதிகளாக நியமிக்க உச்சநீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு அனுமதிக்கப்பட்ட மொத்தம் உள்ள 75 நீதிபதிகள் பணியிடங்களில் தற்போது 23 நீதிபதி பணியிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் காலியாக உள்ளன.

இந்த காலிப் பணியிடங்களை நிரப்பும் வகை யில் கடந்தாண்டு மாவட்ட நீதிபதிகள் அந்தஸ்தில் உள்ள சென்னை உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளர் எஸ்.அல்லி மற்றும் மாவட்ட நீதிபதிகளான பி.முருகன், எம்.டி.சுமதி, சி.திருமகள் சந்திரசேகர், டி.லிங்கேஸ்வரன், கே.பாலதண்டாயுதம், எஸ்.கார்த்திகேயன், பி.முருகேசன், என். குணசேகரன் ஆகிய 9 பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

இதேபோல சென்னை உயர்நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை சிறப்பு வழக்கறிஞர்களாக பணியாற்றிய என். ரமேஷ், ரஜினிஷ் பதியில், வழக்கறிஞர் ஜி.கே.முத்துகுமார், மத்திய அரசின் துணை சொலிசிட்டர் ஜெனரலாக பதவி வகித்த ஆர்.ராஜேஷ் விவேகானந்தன், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உதவி சொலிசிட்டர் ஜெனரலாக பதவி வகித்த கே.கோவிந்த ராஜன், புதுச்சேரி மாநில அரசு வழக்கறிஞராக பதவி வகித்த ஆர்.அனிதா மற்றும் வழக்கறிஞர்கள் இ.மனோகரன், என்.திலீப் குமார், கே. அப்பா துரை ஆகிய 10 பேரின் பெயர் களும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் பணியிடத்துக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான கொலீஜியத்தின் கூட்டம் 18.5.2026 அன்று நடைபெற்றது. இதில் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு புதிய நீதிபதிகளாக, சென்னை உயர்நீதிமன்ற கொலீஜியத்தால் பரிந்துரைக்கப்பட்ட 19 பேருக்கும் ஒப்புதல் அளித்த உச்சநீதிமன்ற கொலீஜியம், இந்தப் பட்டியலை மத்திய அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. அடுத்தக் கட்டமாக, இவர்களின் நியமனத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில், குடியரசுத் தலைவர் இவர்களை சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளாக நியமித்து உத்தரவு பிறப்பிப்பார்.

**நன்றி: இந்து தமிழ் திசை 20.5.2026**

# புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான சட்டச் சிக்கல்கள் உண்மைகள் சார்ந்தவை என்பதால், அவற்றை வழக்கின் முழு விசாரணைக்குப் பின்னரே தீர்மானிக்க முடியும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி டாக்டர் அனிதா சுமந்த்**
**மாண்புமிகு நீதிபதி என்.செந்தில்குமார்**
**O.S.A. எண் 143/2025**
**(2025 (6) CTC 885)**

**எஸ். விஜயகுமார்** ...**மேல்முறையீட்டாளர்**

**–எதிர்–**

**இ. ஜீவானந்தம்** ...**எதிர்மனுதாரர்**

**வேண்டுகை**: உரிமையியல் வழக்கின் (C.S.No. 656/2008) இடைக்கால மனு எண் A.No.4183/2022–இல், 11.01.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக, சென்னை உயர் நீதிமன்ற அசல் பிரிவு விதிகளின் கட்டளை XXXVI விதி 9 மற்றும் உரிமைப் பட்டைய சாசனத்தின் பிரிவு 15–ன் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மேல்முறையீடு.

மேல்முறையீட்டாளர் சார்பாக: திரு. ஸ்ரீநாத் ஸ்ரீதேவன் (மூத்த வழக்கறிஞர்), திரு.சி.தியாக ராஜன் அவர்களுக்காக.

எதிர்மனுதாரர் சார்பாக: திரு.எஸ்.தங்க சிவன்.

## தீர்ப்புரை

(மாண்புமிகு நீதிபதி டாக்டர் அனிதா சுமந்த் அவர்களால் வழங்கப்பட்டது)

வழக்கின் பிரதிவாதியே இந்த மேல்முறை யீட்டாளர் ஆவார். எதிர்மனுதாரர் (வாதி) பின் வரும் கோரிக்கைகளை முன்வைத்து இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்:

(அ) வழக்கு அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள சொத்து தொடர்பாக, வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே 05.07.2002 அன்று ஏற்பட்ட ஒப்பந்தம்/புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரி, பிரதிவாதியால் அனுப்பப் பட்ட 25.06.2007 தேதியிட்ட அறிவிப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து 29.08.2007 அன்று அளிக்கப்பட்ட மறுப்புரை ஆகியவை சட்டவிரோத மானவை என்றும், அவை நடைமுறைப்படுத்தத் தக்கவை அல்ல என்றும் அறிவிக்கக் கோருதல்.

(ஆ) வழக்கு சொத்து தொடர்பாக 05.07.2002 தேதியிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் வாதிக்குள்ள உரிமைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலோ அல்லது வழக்கு சொத்தை விற்பனை செய்தல், அடமானம் வைத்தல், விற்பனை ஒப்பந்தம் செய்தல், மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் அல்லது வாதியின் உரிமைகளுக்கு முரணாக வேறு எந்த வகையிலாவது வில்லங்கம் ஏற்படுத்துவதைத் தடுத்தும், பிரதிவாதிக்கோ அல்லது அவர் சார்பாக உரிமை கோரும் நபர்களுக்கோ எதிராக நிரந்தரத் தடை உத்தரவு வழங்கக் கோருதல்.

(இ) வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையிலான 05.07.2002 தேதியிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 9 மற்றும் 10 ஆகிய பிரிவுகளின் கீழ் பிரதிவாதிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும், வழக்கு சொத்து தொடர்பான நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதித் தீர்ப்பு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் வாதி அந்தச் சொத்தை வாங்குவதற்கு வழிவகை செய்யவும் பிரதி வாதிக்கு சட்ட ரீதியான தடையுத்தரவு பிறப்பிக்கக் கோருதல்.

(ஈ) வழக்கின் செலவுத் தொகையை வழங்கக் கோருதல்.

(உ) இந்த வழக்கின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, இந்த மாண்புமிகு நீதிமன்றம் தகுதியெனக் கருதும் இதர உத்தரவுகளைப் பிறப்பித்து நீதி வழங்கக் கோருதல்.

2. இந்த வழக்கின் வாதப் பிரதிவாதங்கள் முடிவடைந்துவிட்டன; அதாவது, பிரதிவாதியும் தனது பதில் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

3. இந்நிலை நீடிக்கையில், வழக்கின் வாதுரையில் திருத்தம் செய்யக் கோரும் மனு (A.No. 3566 of 2019) உட்படப் பல இடைக்கால மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அந்தத் திருத்த மனுவானது 06.09.2019 தேதியிட்ட உத்தரவின் மூலம் கற்றறிந்த தனி நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டது. வாதங்களை விரிவாகப் பரிசீலித்த நீதிபதி, வாதுரையில் கோரப்பட்ட திருத்தங்களை நிராகரித்தார். இந்த உத்தரவை எதிர்த்துத் தொடரப்பட்ட மேல்முறையீட்டில், 18.08.2022 தேதியிட்ட உத்தரவின் மூலம் தனி நீதிபரின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது.

4. 18.08.2022 தேதியிட்ட அந்த உத்தரவில், தரப்பினர்களுக்கு இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான பல்வேறு வாதங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. இறுதியாக, சாரதாமணி கந்தப்பன் –எதிர்– எஸ். ராஜலட்சுமி மற்றும் பலர் [(2011) 12 SCC 8] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், வாதுரையைத் திருத்தம் செய்வதற்கான கோரிக்கையை இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு நிராகரித்தது.

5. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்துகளைக் கவனித்தால், அது மற்றொரு விற்பனை ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கான ஒரு உடன்படிக்கை மட்டுமே என்று மேல்முறையீட்டாளர் தரப்பு இரு நீதிபதிகள் அமர்வில் வாதிட்டது. எனவே, ஸ்பீச் அண்ட் சாஃப்ட்வேர் டெக்னாலஜிஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் –எதிர்– நியோஸ் இன்டராக்டிவ் லிமிடெட் [(2009) 1 SCC 475] என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, வாதுரை திருத்த மனுக்களை அனுமதிக்க முடியாது என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

6. ‘ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கான மற்றொரு உடன்படிக்கை சட்டப்படி அமல்படுத்தத்தக்கது அல்ல; மேலும் அது தரப்பினர்களுக்கு எந்த உரிமையையும் வழங்காது’ என்று ஸ்பீச் அண்ட் சாஃப்ட்வேர் டெக்னாலஜிஸ் வழக்கின் 22–வது பத்தியில் கூறப்பட்டுள்ள கருத்து மேற்கோள் காட்டப்பட்டது.

7. இத்தீர்ப்பினை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. S.L.P(C) டைரி எண் 42163/2022 வழக்கை 24.04.2023 அன்று தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்றம், வழக்கின் அனைத்து வாதங்களையும் முதன்மை வழக்கிலேயே எழுப்பிக் கொள்ள அனுமதி அளித்தது. மேலும், இரு நீதிபதிகள் அமர்வின் உத்தரவில் கூறப்பட்டுள்ள எந்தவொரு கருத்தும், வழக்கின் விசாரணையின்போது தரப்பினரின் உரிமைகளைப் பாதிக்காது என்பதையும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

8. மேற்கூறிய உத்தரவுகளைக் கருத்தில் கொண்டு, மேல்முறையீட்டாளர் சிவில் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 14 விதி 2–ன் கீழ் தனி நீதிபதியிடம் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். அந்த மனு 11.01.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த உத்தரவை எதிர்த்தே தற்போது இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.தியாகராஜன் அவர்களுக்காக ஆஜரான மூத்த வழக்கறிஞர் திரு.ஸ்ரீநாத் ஸ்ரீதேவன், சிவில் நடைமுறைச் சட்டம் கட்டளை 14 விதி 2–ன் விதிகளின்படி, ஒரு வழக்கை அதன் சட்டப்பூர்வமான அம்சத்தின் அடிப்படையில் ஆரம்ப நிலையிலேயே தீர்க்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்று வாதிட்டார். மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி, இந்த மனுவில் எழுப்பப்பட்டுள்ள அம்சம் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு சார்ந்தது என்பதால், அதனை ஒரு ஆரம்ப கட்டப் பிரச்சனையாக எடுத்துக் கொண்டு, அதன் அடிப்படையிலேயே வழக்கைத் தீர்மானிக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

10. மீண்டும், ஸ்பீச் அண்ட் சாஃப்ட்வேர் டெக்னாலஜிஸ் (மேலே குறிப்பிடப்பட்டது)

மற்றும் பெங்களூரு விவசாய உற்பத்தி சந்தைக் குழு –எதிர்– கர்நாடக அரசு மற்றும் பலர் [(2022) 7 SCC 796] ஆகிய வழக்குகளில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் மேல்முறையீட்டாளர் தரப்பில் முன்னிறுத்தப்பட்டன.

11. இதற்கு நேர்மாறாக, எதிர்மனுதாரர் (வாதி) சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு. தங்க சிவன், இரு நீதிபதிகள் அமர்வின் உத்தரவை உச்ச நீதிமன்றம் உறுதி செய்திருந்தாலும், விசாரணைக்குரிய அனைத்து அம்சங்களையும் அது திறந்தே வைத்துள்ளது என்றும், மேலும் தரப்பினரின் உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் விசாரணை தொடர வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். அவர் சத்ய நாத் மற்றும் மற்றொருவர் –எதிர்– சரோஜாமணி [(2022) 7 SCC 644] என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் தனது வாதத்திற்கு ஆதாரமாக முன்வைத்தார்.

12. இரு தரப்பு வழக்கறிஞர்களின் விரிவான வாதங்களையும் நாங்கள் கேட்டறிந்தோம், மேலும் இது தொடர்பான ஆவணங்களையும் கவனமாகப் பரிசீலித்தோம்.

13. தரப்பினர்கள் 05.07.2002 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். வாதுரையின் கோரிக்கை (அ)–வில், 25.06.2007 மற்றும் 29.08.2007 தேதியிட்ட அறிவிப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன; அவற்றின் மூலம் 05.07.2002 தேதியிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்து செய்ய மேல்முறையீட்டாளர் முயன்றுள்ளார். எனவே, அந்த அறிவிப்புகள் சட்டவிரோதமானவை மற்றும் அமல்படுத்த முடியாதவை என அறிவிக்கக் கோரிக்கை (அ) கோருகிறது. மற்ற இரண்டு கோரிக்கைகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்துகளை அமல்படுத்தக் கோரும் நிரந்தர மற்றும் கட்டளை உறுத்துக்கட்டளைகள் தொடர்பானவை ஆகும்.

14. இந்த ஒப்பந்தம் என்பது மற்றொரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கான ஒரு உடன்படிக்கை மட்டுமே என்றும், இது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால் இந்த வழக்கே பராமரிக்கத்தக்கது அல்ல என்றும் மேல்முறையீட்டாளர் எங்கள் முன்பும், தனி நீதிபதியிடமும் வாதிட்டுள்ளார்.

15. மாறாக, இந்த ஒப்பந்தம் ஒரு உடன்படிக்கைக் கான உடன்படிக்கை என்பதை எதிர்மனுதாரர் கடுமையாக மறுத்துள்ளார். ஒப்பந்தத்திற்கான விலை, முன் பணம் செலுத்தியதற்கான ஒப்புதல், மீதித் தொகையைச் செலுத்துவது தொடர்பான நிபந்தனைகள் போன்ற அனைத்து அடிப்படை அம்சங்களும் தரப்பினரிடையே இறுதி செய்யப்பட்டு விட்டதை அந்த ஒப்பந்தத்தின் சரத்துகள் காட்டுவதாக அவரது வழக்கறிஞர் எங்களுக்கு விளக்கினார்.

16. மேலும், இந்த ஒப்பந்தத்தின் அசல் தலைப்பு 'ஒப்பந்த குறிப்பாணை' என்று இருந்ததாகவும், பின்னர் மேல்முறையீட்டாளரால் 'ஒப்பந்தம்' என்ற சொல் அடிக்கப்பட்டு, கைப்பட 'புரிந்துணர்வு' என்று மாற்றப்பட்டதாகவும் அவர் கவனத்தை ஈர்த்தார். ஒட்டுமொத்தமாக, இந்த ஒப்பந்தத்தின் மூலமே உறுதியான உரிமைகளும் தகுதிகளும் உருவாகின்றன என்று அவர் வாதிட்டார். தரப்பினரிடையே உண்மைகள் தொடர்பான சர்ச்சைகள் இருப்பதால், சிவில் நடைமுறைச் சட்டம் கட்டளை 14 விதி 1–ன் கீழ் கூறப்படும் கோரிக்கையை ஏற்க முடியாது என்றும் வாதிட்டார்.

17. இவ்விவகாரத்தை கவனமாகப் பரிசீலித்த பிறகு, நாங்கள் எதிர்மனுதாரரின் கருத்துடன் உடன்படுகிறோம். சத்யநாத் (மேலே குறிப்பிடப்பட்டது) வழக்கில், சிவில் நடைமுறைச் சட்டம் கட்டளை 14 விதி 2–ன் நோக்கத்தை உச்ச நீதிமன்றம் விரிவாகப் பரிசீலித்துள்ளது. சந்தேகத்திற்கு இடமின்றி, கட்டளை 14 விதி 2–ன் விதிகள் நடைமுறைச் சட்டத்தின் ஒரு பகுதியாகும். ஒரு வழக்கினை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவதே இந்த நடைமுறையின் அடிப்படை நோக்கமாகும். 1976–ஆம் ஆண்டு சட்டம் 104–ன் மூலம் இந்த விதி திருத்தப்பட்டது (01.04.1977 முதல் அமல்), இது வழக்கைத்

திரும்ப அனுப்புவதற்கான சாத்தியக்கூறுகளைத் தவிர்ப்பதற்காகக் கொண்டுவரப்பட்டது.

18. இருப்பினும், சட்டத் திருத்தத்திற்குப் பிறகு, ஒரு விவகாரம் சட்டம் மற்றும் உண்மைகள் கலந்த ஒரு விஷயமாக இருந்தால், மற்றும் சட்டப்பூர்வமான முடிவு என்பது உண்மைகளை நிரூபிப்பதன் அடிப்படையில் அமைய வேண்டும் என்றால், அத்தகைய விவகாரத்தை ஒரு ஆரம்பகட்டப் பிரச்சனையாக விசாரிக்க முடியாது என்பதை இந்த விதி தெளிவுபடுத்துகிறது.

19. அந்த நீதிபதிகள் அமர்வு இவ்வாறு குறிப்பிடுகிறது: 'வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எந்த ஆதாரங்களும் தேவைப்படாத சூழலில், வாதுரையை வாசிப்பதன் மூலமோ அல்லது நடைமுறையிலுள்ள சட்டத்தின் அடிப்படையிலோ, நீதிமன்றத்தின் அதிகார வரம்பு அல்லது வழக்குத் தாக்கல் செய்வதற்கான தடை தெளிவாகத் தெரிந்தால் மட்டுமே, வழக்கை விரைந்து முடிக்கும் நோக்கில் அத்தகைய விவகாரங்களை ஆரம்ப கட்டப் பிரச்சனைகளாக நீதிமன்றம் தீர்மானிக்கலாம். எனவே, நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லாதபோது அல்லது சட்டரீதியான தடை இருக்கும்போது, தவறான காரணங்களைக் கூறி நீதிமன்ற நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தும் நபர்களால் நீதிமன்றத்தின் செயல்முறை துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருக்க, அத்தகைய விவகாரங்களை முதலிலேயே தீர்மானிக்க வேண்டியது அவசியம்.'

20. சிவில் நடைமுறைச் சட்டம் கட்டளை 14 விதி 2-ன் படி, ஆரம்பகட்டப் பிரச்சனைகளை வரையறுக்கும்போது, அங்கு உண்மைகள் தொடர்பான சர்ச்சைகள் ஏதுமில்லை என்பதை உறுதி செய்த பின்னரே மிகக் கவனமாகச் செய்ய வேண்டும் என்பதைக் காட்ட நீதிமன்றம் பல்வேறு தீர்ப்புகளை மேற்கோள் காட்டியுள்ளது.

21. தற்போதைய வழக்கில், உண்மைகள் தரப்பினரால் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது மற்றொரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கான உடன்படிக்கை மட்டுமே என்று மேல்முறையீட்டாளர் வலியுறுத்தும்போது, எதிர்மனுதாரர் அதனை மறுக்கிறார். மேலும், ஒப்பந்தத்தின் சரத்துகளைச் சுட்டிக்காட்டி, அதன் மூலம் தரப்பினருக்குத் திட்டவட்டமான உரிமைகள் கிடைக்கின்றன என்று வாதிடுகிறார். சத்யநாத் (மேலே குறிப்பிடப்பட்டது) வழக்கில், உச்ச நீதிமன்றம் இதனை சிவில் நடைமுறைச் சட்டம் கட்டளை 14 விதி 2-ஐ, வாதுரையை நிராகரிப்பது தொடர்பான கட்டளை 7 விதி 11-உடன் ஒப்பிட்டுள்ளது. வாதுரையில் உள்ள வாசகங்களை மட்டுமே கொண்டு, மற்ற வாதங்களோ அல்லது ஆதாரங்களோ இன்றி ஒரு வழக்கு பராமரிக்கத்தக்கது அல்ல என்று நிறுவும் சூழ்நிலைகளில் மட்டுமே இது பொருந்தும்.

22. தற்போதைய வழக்கை அத்தகைய ஒன்றாக நாங்கள் கருதவில்லை. அனைத்து வாதங்களையும் பரிசீலித்து, விசாரணை நடைமுறைகளுக்குப் பிறகே இந்தப் பிரச்சனைகளில் ஒரு முடிவுக்கு வர முடியும். எனவே, வரையறுக்கப்பட்ட பிரச்சனைகளுக்கு விடை கிடைக்க வேண்டுமானால், அவை விசாரணை முறையை கடந்தாக வேண்டும்.

23. ஸ்பீச் அண்ட் சாஃப்ட்வேர் டெக்னாலஜிஸ் (மேலே குறிப்பிடப்பட்டது) வழக்கின் 22-வது பத்தியில், அந்த விருப்பக் கடிதம் என்பது மற்றொரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கான உடன்படிக்கையே தவிர வேறில்லை என்று உண்மைகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது. 'இரு தரப்பினரும் 15.09.2006 தேதியிட்ட இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஒரு காலக்கெடுவை நிர்ணயிக்க ஒப்புக்கொண்டனர்' என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் அந்த விருப்பக் கடிதம் மற்றொரு ஒப்பந்தத்திற்கான உடன்படிக்கை மட்டுமே என்று தெளிவான முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், தற்போதைய வழக்கில் எங்களால் அத்தகைய திட்டவட்டமான முடிவை எடுக்க முடியாது.

24. அதுமட்டுமின்றி, உச்ச நீதிமன்றம் 24.04.2023 தேதியிட்ட தனது உத்தரவில்,

‘அனைத்து வாதங்களையும் முதன்மை வழக்கில் எழுப்பிக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது மற்றும் மேல்முறையீடு செய்யப்பட்ட உத்தரவில் உள்ள எந்தவொரு கருத்தும் விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினரின் உரிமைகளைப் பாதிக்காது’ என்று குறிப்பிட்டுள்ளது. எனவே, உண்மைச் செய்திகள் அனைத்தும் விரிவாக ஆராயப்பட வேண்டிய நிலையில் உள்ளன. தரப்பினர் அளிக்கும் சாட்சியங்களைக் கருத்தில் கொண்டு, வழக்கின் விசாரணையின்போது தான் அவை வகைப்படுத்தப்பட வேண்டும். உண்மைகள் நிலைநாட்டப்பட்ட பின்னரே, அந்த உண்மைகளின் அடிப்படையில் சட்டப்பூர்வமான பிரச்சனையைத் தீர்மானிக்க முடியும். எனவே, உச்ச நீதிமன்றம் வழங்கிய இந்தச் சுதந்திரம், இந்த மேல்முறையீட்டைத் தீர்மானிப்பதில் கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு காரணியாகும்.

25. அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்ததில், தற்போது ஆரம்பகட்டப் பிரச்சனையாக எழுப்பக் கோரும் இந்த விவகாரம், வழக்கின் விசாரணை யின்போதே தீர்மானிக்கப்பட வேண்டிய விசாரணைக்குரிய பிரச்சனைகளின் ஒரு பகுதியாக அமையலாம் என்ற தனி நீதிபதியின் முடிவுடன் நாங்கள் உடன்படுகிறோம்.

26. இந்த மேல்முறையீட்டில் எந்தவிதமான தகுதியும் காணப்படாததால், இதனை நாங்கள் தள்ளுபடி செய்கிறோம். கட்டணங்கள் ஏதுமில்லை.

27. இந்த வழக்கு 2008-ஆம் ஆண்டைச் சேர்ந்தது என்பதைக் கருத்தில் கொண்டு, இதனை முடிப்பதற்கான காலக்கெடுவை நிர்ண யிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது; அந்தக் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். தரப்பினர்கள் 20.06.2025 (வெள்ளிக்கிழமை) அன்று வரைவுப் பிரச்சனைகளுடன் பிரச்சனை களை வரையறுக்க மாண்புமிகு தனி நீதிபதி முன்னிலையில் ஆஜராக வேண்டும். சாட்சியங்கள் மற்றும் வாதங்கள் அனைத்தும் 20.06.2025 முதல் நான்கு மாத காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## சென்னை உயர்நீதிமன்றத்தில் 2 கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள் நியமனம் அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஜான் சத்யன்

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நடைபெறும் வழக்குகளில் தமிழக அரசின் சார்பில் ஆஜராகி வாதிட ஏதுவாக 2 கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள் மற்றும் மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞரை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அரசு தலைமை வழக்கறிஞராக இருந்த பி.எஸ்.ராமன் ராஜினாமா செய்தார். அதேபோல, அரசு தரப்பின் பல்வேறு வழக்கறிஞர்களும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தனர். இதையடுத்து, அந்தப் பதவிகளுக்கு புதியவர்கள் நியமனம் செய்யப் பட்டு வருகின்றனர்.

அதன்படி, சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக விஜய் நாராயண் ஏற்கனவே நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்நிலையில், அவருடைய பரிந்துரைப்படி சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தமிழக அரசு தரப்பில் வழக்குகளில் ஆஜராகி, வாதிட ஏதுவாக மூத்த வழக்கறிஞர்கள், பி.வி.பால சுப்பிரமணியம், டி.கவுதமன் ஆகியோரை கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர்கள் அந்தஸ்தில் நியமித்து தமிழக அரசு உத்தர விட்டுள்ளது.

அதேபோல, மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞராக மூத்த வழக்கறிஞர் ஜான் சத்யனை நியமித்தும் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இவர்கள் அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயணை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

**நன்றி: இந்து தமிழ் திசை 18.5.2026**

# நீதிமன்றத்தில் ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டு பின்னர் அதே நீதிமன்றத்தின் ஆள்வரையை மறுப்பது நிலையுறுத்ததக்கதல்ல...

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி முனைவர் அனிதா சுமந்த்
மாண்புமிகு நீதிபதி சி.குமரப்பன்
முதலேற்பு பிரிவு மேல்முறையீடு எண் 42/2025 மற்றும்
உபம எண் 3747/2025
2025 (3) சி.டி.சி. 690

திரு. டி.கோவிந்தசாமி மேல்முறையீட்டாளர்

–எதிர்–

1. திருமதி சித்ரா.2. வி.காயத்ரி 3. வி.சஞ்சனா 4.ஜி.விஜயமணி
5. அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்–தலைமை மேலாளர், இந்தியன் வங்கி, 9, முதலாவது பிரதான சாலை, அடையார், சென்னை–600020
6. தலைவர், இந்தியன் வங்கி, தலைமை அலுவலகம், ராயப்பேட்டை, சென்னை–600014

திரு.கே.வி.பாபு மேல்முறையீட்டாளர் சார்பில்

திரு. ஆர்.சங்கரசுப்பு , 1வது எமேமு சார்பில். 2–6வது எமேமு சார்பாக எவரும் முன்னிலை யாகவில்லை

**கோருகை:** உவ எண் 297/2012இல் வி.எண் 4397/2024இல் இயற்றப்பட்ட 31.1.2025 தேதிய தீர்ப்பாணை உத்தரவை நீக்கற்வக்குமாறு கோரிக் கொண்டு முதலேற்பு பிரிவு மேல்முறையீடு உரிமைபட்டய சட்ட சரத்து 15 உடன் வாசிப்பாகும் முதலேற்பு பிரிவு விதிகளின் வகுமுறை 36 விதி 9 கீழ் தாக்கலானது.

## தீர்ப்புரை

[நீதிமன்ற தீர்ப்புரை சி.குமரப்பனால் வழங்கப்பட்டது]

இந்த நீதிமன்றத்தால் 24.4.2012 அன்று அளிக்கப்பட்ட அனுமதியை ரத்தாக்கலுக்காக மேமு/4வது எதிர்வாதி கோருகை வைத்த வி எண் 4397/2025இல் இயற்றப்பட்ட ஆணைக்கு எதிராக இந்த முதலேற்பு பிரிவு மேல்முறையீடு உருவாகிக் கொண்டிருக்கிறது.

2.இப்போதைய முபிமே இக்கு வழிய மைக்கும் பொருண்மைகள் வருமாறு.வி எண் 5628/2014இல் ஏற்பட்ட 7.10.2015 தேதிய ஆணைபடி வழக்கில் இப்போதைய மேமு டி.கோவிந்தசாமி சேர்க்கப்பட்டார். துவக்கத்தில் வழக்கு கீழ்வரும் பரிகாரங் களுக்காக 1–3வது எமேமுகளால் தாக்கலானது.

(ஏ) 24.2.2005 தேதிய அறுதியளிப்பு ஆவண எண் 1598/2002 சட்டத்தில் நிலைய தக்கவும் செயல்படுத்தவியல்லதும் உள்ளது எனவும் அது வதியை கட்டுறுத்திக் கொண்டிருக்க வில்லை என விளம்புகை

(பி)பொது ஏலம் மூலமான அல்லது வேறு வழியிலான விற்ப்னை உட்பட அட்டவணையில் சொல்லப்படும் பிணயத்தே செயல்படுத்துவதில் லிருந்து இரண்டாவது எதிர்வாதியையும் மூன்றாவது எதிர்வாதியையும் தடுத்து நிறுத்த லுக்கான நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தல்

3. சொன்ன வழக்கில், தாவா சொத்து செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்தக்கும் எனவும் சொத்தின் உரிமை மூலம் குறித்த ஒப்பந்தங்கள் பற்றிய விவரங்கள் கோரப்பட்ட தால் அது நிலம் பற்றிய வழக்காக பொருள றியப்பட்ட வேண்டும் எனவும் அது உவிதொச பிரிவு16 கீழ் வகைசெய்யப்பட்டவாறு, நில வெல்லை ஆள்வை செலுத்தும் நீதிமன்றத்தில்

அது தொடுக்கப்பட்ட தேவையாகும் எனவும் ஆன முகாந்திரத்தில் விண்ணப்ப எண் 4397/ 2024 தாக்கலானது.

4. இப்போதைய விண்ணப்பம் தீயெண்ணத்தில் பத்தாண்டு காலஅளவுக்கு பின்பு தாக்கலானது எனவும் இத்தகைய முதல்நிலை எதிர்ப்பை எழுப்பலில் உண்டான பத்தாண்டு கால அளவிலான மட்டுமீறிய தாமத்துக்கு போதிய காரணத்தை இங்குள்ள மேமு அளித்திருக்க வில்லை எனவும் வாதிட்டுக் கொண்டு சொன்ன வழக்கு எமேமுகளால் மறுக்கப்பட்டது. இங்குள்ள மேமு பல்வேறு நடவடிக்கைகளில் திறனுடன் பங்கெடுத்துள்ளார் எனவும் கூடுதலாக வாதிடப் பட்டது. வழக்கு தாக்கல் தேதியிலிருந்து 12வருட கால அளவிலான தாமதத்துக்கு பின்னரும் இணைப்பு தேதியிலிருந்து 9 ஆண்டுகளுக்கு பின்பும் வழக்கு தரப்பினர் அத்தகைய பரிகாரத்தை கோரவியலாது.

5. ஒவ்வொரு தரப்பிலான பணிந்துரை களை பரிசீலித்த பின் தனிநீதிபதி, மேமு இப்போதைய விண்ணப்பத்தை தாமதமாகவும் வழக்கை இழுத்தடித்தல் நோக்கத்துடன் தாக்க லிட்டுள்ளார் எனவும் ஆன முகாந்திரத்தில் விண்ணப்பத்தை தள்ளுபடி செய்தார்.

6.மேமு தரப்பு வழக்குரைஞர் திரு. கே.வி.பாபுவையும் முதலாவது எமேமு தரப்பு வழக்குரைஞர் திரு ஆர்.சங்கரசுப்பையும் நான் கேட்டறிந்தேன்.

7. 24.5.2002 தேதிய அறுதியளிப்பு சட்டத்தில் இல்லாநிலையதாகவும் செயல்படுத்த வியலாததும் உள்ளது எனவும் அறிவித்தலுக் கான கோருகை சட்டத்தில் செல்லாததாகவும் செயல்படுத்தவியலாதும் உள்ளது எனவும் வாதியை அது கட்டுறுத்திக் கொண்டிருக்க வில்லை எனவும் அது பாத்தியதை பற்றிய விளம்புகையன்றி வேறேதுமில்லை எனவும் நிலம் காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளதாகும் எனவும் மேமு சார்பு வழக்குரைஞர் திரு.கே.வி.பாபு தீவிரமாக வாதிட்டார், அதற்கிணங்க இந்த நீதிமன்றத்துக்கு ஆள்வை கிடையாது. ஆகையால் இந்த நீதிமன்றத்தால் தரப்பட்ட விடுப்பை ரத்தாக்கு மாறு அவர் வேண்டினார். அவரது வாது ரைத்தலுக்கு ஆதரவாக மேமு சார்பு வழக்குரைஞர் கீழ் வரும் தீர்ப்புரைகளில் நம்புகை வைத்தார்.

(i) 1950 SCC 200 இல் அறிவிப்பான கிரண் சிங் மற்றும் பிறர் எதிர் ஷமன் பாஸ்வன் மற்றும் பிறர்

(ii)1960 SCC Online Cal 109இல் அறிவிப்பான தாமிரமரணி இன்வெஸ்ட்மென்ட்ஸ் பிரைவேட் லிட் எதிர் மெடா பில்ம்ஸ் பிரைவேட் லிமிடெட்

(iii) 1997 3 LW 391இல் அறிவிப்பான டி.கே.எஸ்.புகழேந்தி –எதிர்– கனிஷ்க் கோல்ட் பிரைவேட் லிட் மற்றும் பிறர்.

(iv) 1998 1 LW 640இல் அறிவிப்பான பி.சிதம்பரம் –எதிர்– பெத்தாச்சி மற்றும் பிறர்

8. மாறாக, இளவரின் சொத்து சட்டவிரோத மாக ஏலத்தில் கொணரப்பட்டுள்ளது எனவும் தற்போதைய நிலை உத்தரவு உள்ள போதிலும் சொத்திலிருந்து வங்கி அவர்களது உடைமை நீக்கிட அதன் விளைவாக அவமதிப்பு விண்ணப்பம் தாக்கலாகி 1–3வது எமேமுகள்து உடைமை மீட்டளிப்பானது எனவும் முதலாவது எமேமு சார்பு வழக்குரைஞர் திரு. ஆர்.சங்கர சுப்பு ஆவேசமக வாதிட்டார். வழக்கில் அவர் சேர்க்கப்பட்ட 2015இலிருந்து இங்குள்ள மேமு அனைத்து நடவடிக்கைகளிலும் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறந்து ஒன்றுக்கு பின் ஒன்றாக விண்ணபத்தை தாக்கலிட்டுக் கொண்டிருக்கிறார் என வழக்குரைஞர் மேலும் வாதிட்டார். ஆகையால் இந்த நீதிமன்ற ஆள்வரையில் இணங்கியிருந்து, நீண்ட கால அளவிலான தாமதத்துக்கு பின் நீதிமன்றத்தின் நிலவெல்லை ஆள்வை பற்றி மறுப்புரையை அவர் வைத்திட இயலாது. அவரது வாதத்துக்கு ஆதரவாக கீழ் வரும் தீர்ப்புரைகளில் எமேமு சார்பு வழக்குரைஞர் நம்புகை கொண்டார்.

(i) 1950 SCC 200இல் அறிவிப்பான சித்தரஞ்சன் முகர்ஜி –எதிர்– பஹு மாதோ

(ii) 1960 SCC Online Cal 109இல் அறிவிப்பான தேபேந்திர நாத் சவுத்ரி –எதிர்– சதர்ன் பேங்க் லிட்.

(iii) 1997 3 LW 391இல் அறிவிப்பான என்.தனலட்சுமி மற்றும் 2 பிறர் –எதிர்– எஸ்.ஏகனாதன்

(iv) 1998 1 LW 640இல் அறிவிப்பான சயிண்டிபிக் காம்பவுண்ட்ஸ் அண்ட் ப்ராசெசஸ் பிரைவேட் லிட் –எதிர்– நேசனல் சோப்னட் ஒர்க்ஸ்

(iv) 2005 (3) CTC 86 இல் அறிவிப்பான பிடி உம்மர் கோயா –எதிர்– தமிழ்நாடு செஸ் அசோசியேசன்.

9. ஒவ்வொரு தரப்பு பணிந்துரைக்கும் நாங்கள் ஆழ்ந்த பரிசீலிப்பை அளித்திருக்கிறோம்.

10. உவிதொச பிரிவு 16 (i)படி அசையா சொத்தில் பாத்தியதை அல்லது நலனுரிமை எதனையும் தீர்மானித்திட சொத்து அமையப் பெற்றுள்ள இடத்தில் ஆள்வை செலுத்தும் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட வேண்டும். ஏற்றவாறு, சொத்து காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. கோரப்படும் பரிகாரம் நில பற்றிய வழக்கு விளிம்புகளுக்குள் அமைகிறது எனும் அவரது வாதத்துக்கு வலுவளிக்க இங்கு மேலே குறிப்பிடப்பட்ட தீர்ப்புரையில் மேமு சார்பு வழக்குரைஞர் நம்புகை கொள்ள விழைந்தார். மேலுள்ள தீர்ப்புரைகளில் சொல்லப்படும் சட்ட கருத்துவிளக்கம் பற்றி எங்களுக்கு முற்றிலும் எந்த குறையும் கிடையாது. மேமு சார்பு வழக்குரைஞரால் சரியாக வாதிடப்பட்டவாறு 24.5.2002 தேதிய அறுதிளிப்பு ஆவணம் பொறுத்து விளம்புகை பரிகாரத்தை வாதிகள் கோரியதால் அது முற்றிலும் நிலம் பற்றிய வழக்கு வரையரைக்குள் வருவதாகும். அது நிலம் பற்றிய வழக்காக இருக்குமானால் அப்போது சொத்து அமைவிடத்தில் ஆள்வையுற்ற நீதிமன்றத்தில் தாக்கலிடப்பட வேண்டியதாகும்.

11. ஆனால் மேமு சார்பு வழக்குரைஞரது மேலுள்ள பணிந்துரையை பரிசீலிக்கையில், மேலே குறிப்பாடான அனைத்து வழக்குகளிலும் வழக்கு தாக்கலான பின் உடனடியாக அனுமதி ரத்துக்கான விண்ணப்பம் தாக்கலிடப்ப்பட்டது. ஆகையால் நிலவெல்லை ஆள்வரைக்கு சவாலிட்ட நபர் ஆள்வரைக்கு இணங்கியிருக்கவில்லை என்பதும் உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் திறனுறுவாக ஈடுபட்டிருக்கவில்லை என்பதும் தாராளமாக தெளிவாகிறது.

12.ஆனால் கையிலிலுள்ள வழக்கில் இந்த மேமு 2015இல் சேர்க்கப்பட்டார். தொடர்ச்சியாக நிலவெல்லை பற்றிய கேள்வி எதனையும் எழுப்பாது விண்ணப்ப எண் 1893/2015 இல் எதிருரையை அவர் தாக்கலிட்டார். இந்த மேமு உட்பட்ட எதிர்வாதிகள் எதிராக உறுத்துக் கட்டளைக்காக முவி எண் 1291/2015இல் ஆன விண்ணப்பத்திலும் அவர் பங்கெடுத்தார். இந்த நீதிமன்றம் 21.12.2015 தேதிய ஆணை கீழ் தற்போதைய நிலைக்காக உத்தரவிட்டது. இந்த மேமு சர்பேசி நடவடிக்கைகளில் ஏல வாங்குனர் ஆவார் என்பதை சொல்லுதல் இங்கு தொடர்புடையதாகும். மற்ற எதிர்க்கும் தரப்பினரான வங்கி அத்தகைய எதிர்ப்பை காட்டவில்லை. ஆகையால் இத்தகைய பின்புலத்தில் விடுப்பு ரத்து தொடர்பான விண்ணப்பத்தை நாங்கள் தகுதிப்பாடுகள்பேரில் சீர்தூக்க வேண்டும்.

13. இது தொடர்பில் பி.டி.உம்மர் கோயர் வழக்கில் இந்த் நீதிமன்ற இரு நீதியர் அமர்வு தீர்ப்புரையில் குறிப்பாடு வைத்தல் உசிதமான தாகும்.

9. இடைக்கால உறுத்துக்கட்டளைகளை அகற்றலுக்காக முவி எண்கள் 517/2015 மற்றும் 518/2015 ஆன இரு விண்ணப்பங்களை உவ எண்52/2005 இன் இரண்டாவது எதிர்வாதி தாக்கலிட்டார் என்பது மற்றுமொரு முக்கிய கூறாகும். அதனுள் வைக்கப்பட்ட அவர்களது எதிருரைகளையும் உறுத்துக்கூற்றுகளையும் நாங்கள் ஆழ்ந்து வாசித்துள்ளோம். முபிமே எண் 65/2005இல் மேல்முறையீட்டாளரான திரு.பி.டி.உம்மர் கோயாவால் 4.2.2005 அன்று உரியவாறு பிரமாணமான உறுதிமொழி ஆவணத்தில் இப்போதைய வழக்கு செல்லதக்கதல்ல எனவும் விஷயத்த்தில் இந்த நீதிமன்றத்துக்கு ஆள்வரை கிடையாது எனவும் ஆன குறிப்பாடு பத்தி 3இல் இருந்தாலும், சரியாக வாதிடப்பட்டவாறு, முன்னராக வழங்கப்

பட்ட விடுப்பு ரத்துக்கு குறித்த வேண்டுகை ஏதுமில்லை. எதிர்மாறாக சொன்ன 4.2.2005 தேதிய உறுதிமொழி ஆவணத்தை ஆழ்ந்து வாசித்தல் உறுத்துகட்டளை வழங்குதல் பற்றி பேரளவாக அவர் வழக்காடியிருந்து முவி எண் 62/2005இல் வழங்கப்பட்ட 31.1.2005 தேதிய இடைக்கால உறுத்துக்கட்டளை நீக்கலை வெகுவாக வேண்டியுள்ளார் என்பதை விரிவாக காட்டுகிறது. சொன்ன உறுதிமொழி ஆவணத்தை அவர் 15.2.2005 அன்றுதான தாக்கலிட்டார். விண்ணப்ப எண் 279/2005இல் வழங்கப் பட்ட 24.1.2005 தேதியிட்ட வழக்கிடலுக்கான விடுப்பை ரத்தாக்கலுக்கான விண்ணப்பதை சொன்னபி.டி.உம்மர் கோயா தாக்கலிட்டார். பிற சொற்களில், சரியாக சுட்டப்பட்டவாறு, இங்குள்ள மேல்முறையீட்டாளர்/2ஆவது எதிர்வாதி நடவடிக்கைகளில் பங்கேற்று அதன் நீக்கத்துக் காக எதிர் உறுதிமொழியாவணத்தை தாக்கலிட்டு பின்னராக வழக்கிடல் விடுப்பை ரத்தாக்க மனுவை தாக்கலிட்டார். இத்தகைய சந்தர்ப்பத்தில் நீதிபதியால் சரியாக கருத்துரைக்கப்பட்டவாறு, இந்த நீதிமன்றத்தின் ஆள்வைக்கு அவர் இரண்டாவது எதிர்வாதி இணங்கினார் அதன் பின், அளிக்கப்பட்ட விடுப்பு மோசமானதாகும் என அவர் வாதிடலுக்கு சுதந்திரம் அவருக்கு கிடையாது. மற்ற மேல்முறையீடில் சொன்ன தடை பொருத்ததக்கதல்ல என வாதிடப்பட்ட போதிலும், திரு.சிவத்தால் சரியாக சுட்டப்பட்ட வாறு, உறுத்துக்கட்டளை ஆணையை எதிர்த்து அங்கு மீண்டும் ஓர் உறுதிமொழியவணம் தாக்கலிடப்பட்டது. அப்போது மட்டுமே விடுப்பு ரத்துக்கான தனி விண்ணப்பம் தாக்கலிடப் பட்டது. இது தொடர்பில் சித்தரஞ்சன் –எதிர்– பர்ஹு AIR 1953 SC 472 வழக்கில் உச்ச நீதிமன்றத்திலான தீர்ப்புரையை குறிப்பாடில் வைப்பது பயனுடையதாகும். அந்த நேர்வில் வழக்கு 17.2.1947 அன்று தொடுக்கப்பட்டு எதிர்மனுதாரர் 11.3.1947 அன்று ஆஜரானார். ஒத்த எதிர்ப்பை பரிசீலிக்கையில் வழக்கின் சாத்திய ஆரம்ப சந்தர்ப்பத்தில், வழக்கை கல்கத்தாவில் தாக்கலிட விடுப்பு முறையற்று வழங்கப்பட்டிருந்தது என முறையிட்டுக் கொண்டும் அந்த கேள்வி தீர்வ்வாகும் வரையில் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தடையாணையை வேண்டிக் கொண்டும் டொலிகஞ்ச் ராணுவ அதிகாரிகளிட மிருந்து உரித்தான ரூ.21000ஐ வசூலித்து தக்கவைத்தலுக்கு தரப்பினர்களின் வழக்குரைஞர் களை கூட்டு வரபெறுனர்களாக நியமிக்கும் ஆணை நீதிமன்றத்தால் இயற்றலாவதற்கு சம்மத உத்தரவு பெறலுக்கு நிலுவையாகும் வழக்கை எதிர்மனுதாரர் பயன்படுத்தினார் என நீதிபதிகள் தீர்ப்பிட்டுள்ளார்கள். இந்த அனுகூலத்தை அவர் அடைந்திருக்கும் நிலை யில், உறுத்துக்கட்டளைக்கும் இதர தொடர்பு களில் பெறுனருக்கும் ஆன மேல் முறை யீட்டாளரது விண்ணப்பத்தை அவர் எதிர்த்து அதை 25.4.1947 அன்று தள்ளுபடியான தாக்கினார் என அவர்கள் மேலும் தீர்ப்பிட்டார் கள். மார்ச் 11 அன்று எதிர்மனுதாரர் ஆஜரான பின் விரைவாக ரத்துக்கான விண்ணப்பம் தாக்கலிடப்பட்டிருந்து அனைத்து நடவடிக்கை களுக்கும் தடையாணை இயற்றப்பட்டிருந்தால் இந்த செயல்பாட்டில் மேல் தொடர்ந்திருக்காது எனவும் தற்செயல் செலவினங்களை மேல் முறையீட்டாளர் செய்ய வேண்டியிருந்திருக்காது எனவும் நீதிபதிகள் மேலும் கருத்துரைத்தார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தில், இது அவருக்கு அனுகூலமாகும் என அவர் எண்ணியதால் கணிசமான செலவினங்களை செய்துகொண்டு வழக்கின் முன்னேற்றத்தை மேலெடுத்து செல்ல லுக்கு மேல்முறையீட்டாளர்ரல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் எதிர்மனுதாரர்கள் இசைந்தி ருந்தது மட்டுமின்றி அத்தகைய இடைக்கால பரிகாரங்களை அடைதலுக்கு வழக்குள்ளதை இப்போது விசாரிக்கக்கூடாது என அவர் கூறும் நீதிமன்றத்தில் அதை தள்ளுபடியாகப் பெற்றார். என நீதிபதிகள் தீர்ப்பிட்டுள்ளார்கள். பிற நடவடிக்கை களில் உரிய பங்கேற்பின்றி முன்கூட்டிய காலக் கட்டத்தில் நீதிமன்றத்தை துயருற்றவர் அணுகி ரத்து கோர வேண்டும் என்பதை மேலுள்ள நிலைமை தெளிவாக்குகிறது. வேறு சொற்களில் விடுப்பு ரத்துக்கான விண்ணப்பம் வழக்கின் முன் கூட்டிய கட்டத்திலேயே வைக்கப்பட வேண்டும். தாமதமும் இணக்கமும் அத்தகைய விண்ணப்பத்துக்கு தடையாக விளங்குகிறது. வக்காலத் தாக்கலிடுதல் மட்டுமே வழக்கில் பங்கெடுத்தல் ஆகாது என ஆவேசமாக திரு. டி.வி.ராமானுஜம் வாதிட்டாலும் எங்களிடம் நிலைநாட்டப்பட்டவாறு இங்குள்ள மேல்முறை யீட்டாளர் உறுத்துக்கட்டளை வழங்கல் பற்றி கேள்வி

யெழுப்பியது மட்டுமின்றி அதனை நீக்கலுக்கும் உறுதிமொழியாவணத்தை தாக்கலிட்டார். உறுத்துக்கட்டளையை எதிர்த்துக் கொண்டு வழக்கு நடவடிக்கை ஈடுபடல் ஆகும் அவர்களது நடத்தையில் நாங்கள் திருப்தியுரு கிறோம். அவர்கள் இந்த நீதிமன்றத்தின் ஆள்வைக்கு இணங்குகிறார்கள். விடுப்பு ரத்துக்காக அவர்கள் வேறாக வாதிட அனுமதிக்கப்பட முடியாது. எழுத்தி லான விளக்கவுரை உறுத்துக் கூற்றுகள் அடிப்படை யில் ஆள்வை பற்றி குறித்த எழுவினாவை வனைந்து அதை வழக்கு விசாரணை கட்டத்தில் பரிசீலித்தல் நீதிமன்றத்துக்கு திறந்ததாகும் என்பதில் சந்தேகமில்லை.

14. பல்வேறு கூறுகளை ஆராய்ந்திருந்த பின்பும் இல் அறிவிப்பான சித்தரஞ்சன் –எதிர்– பர்ஹு AIR 1953 SC 472 வழக்கில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புரையை குறிப்பாடில் கொண்ட பின்னரும், அனுமதி விடுப்பில் ஒருவர் குறையுறுவாரானால் பிற நடவடிக்கைகளில் திறனாக பங்கெடுக்காது ஆரம்ப கால கட்டத்தில் நீதிமன்றத்தை அவர் அணுகி ரத்து கோர வேண்டும் என இரு நீதியர் அமர்வு தீர்ப்பிட்டு உள்ளது. வேறாக சொல்வ தானால், அத்தகைய விண்ணப்பம் வழக்கு துவக்கத்திலேயே தாக்கலிடப் பட வேண்டியதாகும். அத்தகைய விண்ணப்பத்தை நிராகரித்தலுக்கு தாமதமும் இணக்கமும் முகாந்திர மாக உள்ளது. ஏற்கனவே விளக்கப்பட்டவாறு 2015இலிருந்து வழக்கு நடவடிக்கைகளில் இந்த மேமு ஈடுபட்டுள்ளார். வழக்குரைக்கு நிலவெல்லை ஆள்வரை கிடையாது எனும் முகாந்திரத்தில் வழக்குரை நிராகரிப்புக்கான விண்ணப்பத்தை யும் அவர் தாக்கலிட்டுள்ளார். ஆனால் அது தனது உத்தரவு மீதான மேல்முறையீட்டை அமர்வது போலாகும் என்பதால் வி.எண் 2523/ 2024இல் இந்த நீதிமன்றம் 26.7.2024 தேதிய ஆணை கீழ் விடுப்பு வழங்கியிருக்கும் நிலை யில் ஆள்வையின்மை என்ற முகாந்திரத்தில் வழக்குரையை நீதிமன்றம் நிராகரிக்க முடியாது. மேலுள்ள ஆணைக்கு பின்னர் மட்டுமே இப்போதைய விண்ணப்பம் தாக்கலாகியுள்ளது.

15.ஆகையால் இத்தகைய தனிப்பான்மை யுற்ற பொருண்மைகளிலும் மேலுள்ள பி.டி.உம்மர் கோயா வழக்கில் இருநீதியர் அமர்வு தீர்ப்புரைக்கு இசைவாக இங்குள்ள மேமு தரப்பில் மட்டு மீறிய தாமதமும் இணக்கமும் உள்ளதால் இந்த கால கட்டத்தில் தனி நீதிபதியின் ஆணையில் தலையிட நாங்கள் விரும்பவில்லை. எனினும் வழக்கு விசாரணையின் போக்கில் நிலவெல்லை ஆள்வையின்மை பற்றி கேள்வி தனி நீதிபதி யால் வனையப்பட்டு தீர்மானிக்கப்பட இயலும் என்பதை நாங்கள் தெளிவாக்குகிறோம். இந்த உத்தரவில் அளிக்கப்படும் கருத்துரை எது வானாலும் அது இப்போதைய தீர்வுக்காக மட்டுமேயாகும் எனவும் வழக்கு விசாரணையில் ஆள்வை பற்றிய கேள்வியை இறுதியாக தீர்மானித்தலில் எந்த தாக்கத்தையும் கொண்டி ருக்காது என்பதையும் நாங்கள் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

16. முடிவில் இந்த முபிமே தள்ளுபடி யாகிறது. செலவுத் தொகை பற்றிய உத்தரவு இராது. விளைவாக தொடர்புறு உபம தீர்வாக்கப் படுகிறது.

**மொழியாக்கம் : பா.ஞானசேகரன்**

## குற்றவியல் வழக்குகளில் ஆஜராக மூத்த வழக்குரைஞர் நியமனம்

குற்றவியல் வழக்குகளில் தமிழக அரசு சார்பில் ஆஜராக மூத்த வழக்குரைஞர் ஜான் சத்யனை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டது.

தமிழகத்தில் தவெக தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்ற நிலையில் தமிழக அரசின் தலைமை வழக்குரைஞராக நியமிக்கப்பட்ட விஜய் நாராயண் 14.5.2026 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து அரசு தலைமை வழக்குரைஞரின் கடிதத்தை ஏற்று, சென்னை உயர்நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குகளில் ஆஜராக மூத்த வழக்குரைஞர் ஜான் சத்யனை நியமித்து அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், மூத்த வழக்குரைஞர்களான பி.வி.பாலசுப்பிரமணியம், டி.கௌதமன் ஆகியோரை கூடுதல் தலைமை வழக்குரைஞர்களாக நியமித்து உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இந்த இரு நியமன உத்தரவுகளும் அரசு வழக்குரைஞர்கள் நியமன விதிகளின்படி நியமனம் செய்யப்படும் வரை அமலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நன்றி : தினமணி 17.5.2026**

# தந்தை வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில், சிபிசி பிரிவு 47-ன் கீழ் வாரிசுதாரர் தொடர்ந்த மனு தள்ளுபடி; முறையான சுவாதீன உரிமை கோரலுக்கு கட்டளை 21 விதி 97-ஐப் பயன்படுத்த அறிவுரை

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி பி.ப்பி. பாலாஜி**
**உ.சீ.மனு எண் 4403/2025 மற்றும்**
**உ.இவ.மனு எண் 22538.2025**
**(2026 (2) CTC 563)**

**ஓ. மணிகண்டன்** ...**மனுதாரர்**

**–எதிர்–**

**1. அமிர்தவள்ளி**
**2. செல்வி**
**3. இந்திரா**
**4. தனலட்சுமி**
**5. விஜயலட்சுமி** ...**எதிர்மனுதாரர்கள்**

கோரிக்கை: கடலூர் முதன்மை மாவட்ட முனிசிப் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்: 701/1995–ல் தொடரப் பட்ட நி.கோ.மனு எண்: 33/2022–ன் இடைக் கால மனுவான நி.மனு எண்: 72/2023–ல், 15.04.2025 அன்று பிறப்பிக்கப் பட்ட முறையான மற்றும் தீர்ப்பு ஆணையை ரத்து செய்யக் கோரி, உரிமையியல் நடை முறைச் சட்டம் பிரிவு 115–ன் கீழ் இந்த சிவில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பில்: திரு. டபிள்யூ.எம். அப்துல் மஜீத்பி, வழக்கறிஞர்

எதிர்மனுதாரர்கள் தரப்பில்: திரு. பி. வள்ளி யப்பன், மூத்த வழக்கறிஞர, திரு. எஸ்எம்எஸ். ஸ்ரீராம் நாராயணன் அவர்களுக்காக.

## உத்தரவு

1. இந்த வழக்கின் நடைமுறைகளில் சம்பந்தப்படாத மூன்றாம் நபர் ஒருவர், உரிமை யியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 47–ன் கீழ், இந்த நிறைவேற்று மனு சட்டப்படி செல்லத் தக்கதல்ல என்றும், இந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்ற முடியாது என்றும் அறிவிக்கக் கோரி மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவை விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அந்த உத்தரவிற்கு எதிராகவே இந்த சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.டபிள்யூ.எம்.அப்துல் மஜீத் மற்றும் எதிர் மனுதாரர்களின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எஸ்.எம்.எஸ். ஸ்ரீராம் நாராயணன் சார்பாக ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திரு. பி. வள்ளியப்பன் ஆகியோரின் வாதங்களைக் கேட்டேன்.

3. சீராய்வு மனுதாரரின் வழக்கறிஞர் திரு. டபிள்யூ.எம். அப்துல் மஜீத் வாதிடுகையில், சீராய்வு மனுதாரரின் தந்தை இந்த அசல் வழக்கில் ஒரு தரப்பினராக இருந்தார் என்றும், ஆரம்பத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக மனுதாரரின் தந்தை உள்ளிட்ட பிரதிவாதிகள் மேல்முறையீடு செய்தனர் என்றும் தெரிவித்தார். கடலூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தால் அந்த முதல் மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது. அதற்கு எதிராக, எதிர்மனுதாரர்கள் இந்த உயர் நீதிமன்றத்தில் கு.அ.எண்: 226/2004–ன் கீழ் இரண்டாம் மேல்முறையீடு செய்தனர். அந்த இரண்டாம் மேல்முறையீட்டில், மனுதாரரின் தந்தை இரண்டாவது எதிர்மனுதாரராக சேர்க்கப்

பட்டிருந்தார். இருப்பினும், எதிர்மனுதாரர்களால் மனுதாரரின் தந்தை அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். அதன் பிறகு, இரண்டாம் மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது. தங்களுக்கு சாதகமான அந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்ற எதிர்மனுதாரர்கள் நிறைவேற்று மனுவைத் தாக்கல் செய்தனர். அந்த நிறைவேற்று மனுவில், தீர்ப்பாணைக்குரிய சொத்து தனது வசம் இருப்பதாகக் கூறி, சீராய்வு மனுதாரர் உ.ந.சட்டப் பிரிவு 47-ன் கீழ் மனு தாக்கல் செய்தார். தனது தந்தை எவ்வித தகவலும் தெரிவிக்காமல் குடும்பத்தை விட்டுச் சென்றுவிட்டார் என்றும், இன்றுவரை அவர் இருக்குமிடம் தெரியவில்லை என்றும், மனுதாரரும் அவரது குடும்பத்தினருமே அந்தச் சொத்தில் தொடர்ந்து வசித்து வருவதாகவும் சீராய்வு மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

4. மனுதாரரின் வழக்கறிஞர் திரு. அப்துல் மஜீத் வாதிடுகையில், இரண்டாம் மேல்முறையீட்டில் மனுதாரரின் தந்தை விடுவிக்கப்பட்டபோது, அவருக்கு எதிராக எந்தத் தீர்ப்பாணையும் இல்லை என்றும், இத்தகைய சூழ்நிலையில், சொத்தை தனது கைவசத்தில் வைத்திருக்கும் மனுதாரருக்கு எதிராக அந்தத் தீர்ப்பாணையை நிறைவேற்ற முடியாது என்றும் வாதிட்டார். எனவே, நிறைவேற்று நீதிமன்றம் இந்த முக்கியமான சட்டப் புள்ளியைக் கருத்தில் கொள்ளாமல், உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 47-ன் கீழான மனுவைத் தள்ளுபடி செய்தது தவறானது என்று அவர் குறிப்பிட்டார். தனது வாதங்களுக்கு ஆதரவாக, கிஷுன் (காலமானவர்) சட்டப்பூர்வ வாரிசுகள் -எதிர்- பிஹாரி (காலமானவர்) சட்டப்பூர்வ வாரிசுகள் [(2005) 6 SCC 300] என்ற வழக்கின் தீர்ப்பை அவர் மேற்கோள் காட்டினார்.

5. இதற்கு மறுப்பாக, எதிர்மனுதாரர்கள்/ தீர்ப்பாணைதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் திரு. பி. வள்ளியப்பன், விசாரணை நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் உரையினை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதில், மனுதாரரின் தந்தை மூன்றாவது பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் உரையினை ஏற்றுக் கொண்டுள்ளார்; அந்த எதிர் உரையில், முதல் மற்றும் மூன்றாவது பிரதிவாதிகள் மட்டுமே வீட்டு வரி செலுத்தி அந்தச் சொத்தை அனுபவித்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த எதிர்உரையினைச் சுட்டிக் காட்டிய மூத்த வழக்கறிஞர் திரு. பி.வள்ளியப்பன், மனுதாரரின் தந்தை அந்த எதிர் உரையினை ஏற்றுக் கொண்டதன் மூலம், அந்தச் சொத்து தனது வசம் இல்லை என்ற உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார் என்று வாதிட்டார். எனவே, விசாரணை நீதிமன்றத்தில் தனது தந்தை எடுத்த நிலைப்பாட்டை விட மாறுபட்ட அல்லது மேம்பட்ட ஒரு நிலைப்பாட்டை மனுதாரர் இப்போது எடுக்க முடியாது என்று வாதிட்டார். மேலும், மனுதாரரின் தந்தையே அந்தச் சொத்தை அனுபவித்து வராத நிலையில், அந்தச் சொத்தை அனுபவித்து வருவதாக ஒப்புக் கொண்ட மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றுவதைக் கேள்வி கேட்க மனுதாரருக்கு உரிமை இல்லை என்றும் அவர் கூறினார். தனது வாதங்களுக்கு ஆதரவாக திரு. பி. வள்ளியப்பன் பின்வரும் தீர்ப்புகளை மேற்கோள் காட்டினார்:

கிழியகளத்தில் புதன் வீட்டில் தாவழி கர்ணவன் மற்றும் மேலாளர் சோரோட்டி அம்மாவின் மகன் கோபாலன் நாயர் -எதிர்- மணிகாட் வாரியாத் உக்காலி வரிசியாரின் மகன் சங்கண்ணி வாரியார் மற்றும் பலர் [1934 L.W. 730];

கஜராஜ் -எதிர்- சுதா மற்றும் பலர் [(1999) 3 SCC 109]; மற்றும்

ஜே. விஜய பாஸ்கர் மற்றும் பலர் -எதிர்- ஜே. ஜெயலட்சுமி மற்றும் பலர் [2004-2-L.W.614].

6. இருதரப்பு வழக்கறிஞர்களும் முன் வைத்த வாதங்களை நான் கவனமுடன் பரிசீலித்தேன்.

7. இது ஒரு விசித்திரமான வழக்காகும்; இதில் மனுதாரரின் தந்தை விசாரணை நீதிமன்றத்தில் இரண்டாவது பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருந்தார். இரண்டாவது பிரதிவாதிக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது, அவர் மற்ற

பிரதிவாதிகளுடன் இணைந்து முதல் மேல் முறையீடு செய்தார். அந்த முதல் மேல் முறையீடு அனுமதிக்கப்பட்டு, விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாணை ரத்து செய்யப் பட்டது. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்ததனால் அதிருப்தி யடைந்த எதிர்மனுதாரர்கள், இந்த நீதிமன்றத்தில் இரண்டாம் மேல்முறையீடு செய்தனர்; அந்த இரண்டாம் மேல்முறையீட்டில் மனுதாரரின் தந்தை விடுவிக்கப்பட்டார். தனது தந்தையின் இருப்பிடம் குடும்பத்தினருக்கே தெரியவில்லை என்பதை மனுதாரரே ஒப்புக்கொள்ளும் நிலை யில், இரண்டாம் மேல்முறையீட்டில் மனு தாரரின் தந்தை விடுவிக்கப்பட்டது, எதிர்மனுதாரர் களின்/தீர்ப்பாணைதாரர்களின் வழக்கிற்குப் பாதகமாக அமையாது என்பது மூத்த வழக்கறிஞர் திரு. பி. வள்ளியப்பனின் வாதமாகும்.

8. மேலும், எந்தச் சூழ்நிலையிலும் மனு தாரரின் தந்தை அந்தச் சொத்து தனது வசம் இல்லை என்ற உண்மையைத் ஒப்புக் கொண்டு ள்ளார் என்பதும் மூத்த வழக்கறிஞரின் வாத மாகும். எனவே, நிறைவேற்று நீதிமன்றம் பிரிவு 47-ன் கீழான மனுவைத் தள்ளுபடி செய்தது சரியானது என்று அவர் குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் பல்வேறு தீர்ப்புகளை மேற்கோள் காட்டினார்; கிழியகளத்தில் புதன் வீட்டில் தாவழி கர்ணவன் மற்றும் மேலாளர் சோரோட்டி அம்மாவின் மகன் கோபாலன் நாயர் (மேலே குறிப்பிடப்பட்டுள்ளது) வழக்கில், ஒரு தரப்பினரின் சட்டப்பூர்வ வாரிசாக வழக்கிற்குள் வரும் ஒருவர், அந்தத் தரப்பினர் ஏற்கனவே எடுத்த நிலைப்பாட்டிலிருந்து மாறவோ அல்லது அதற்கு முரணாகச் செயல்படவோ அனுமதிக்க முடியாது என்று இந்த நீதிமன்றம் தீர்ப்பளி த்துள்ளது.

9. கஜராஜ் வழக்கில் (மேலே குறிப்பிடப் பட்டுள்ளது), சட்டப்பூர்வ வாரிசுகள் தங்களுக்கு முன்னிருந்தவர்களின் இடத்தைப் பெறுவதோடு, அவர்களின் வாதங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும், அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட உரிமைகள் மற்றும் நலன்களைத் தொடர முடியாது என்றும், குறிப்பாக அந்த வழக்குத் தொடர்பாகத் தங்களுக்கு வேறு அந்தஸ்து இருப்பதாக ஏற்கனவே நிரூபிக்கத் தவறிய நிலையில் இது பொருந்தும் என்றும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

10. ஜே. விஜய பாஸ்கர் வழக்கில் (மேலே குறிப்பிடப்பட்டுள்ளது), ஏற்கனவே ஒரு தரப்பினர் முன்வைத்த வாதங்களைத் தவிர வேறு எதையும் வாதிட சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு உரிமை இல்லை என்று இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சந்தேகத்திற்கு இடமின்றி, வழக்கின் ஒரு தரப்பினர் காலமான பிறகு அவருடைய இடத்திற்கு வரும் சட்டப்பூர்வ வாரிசுகள், தங்களுக்கு முன்னிருந்தவர்கள் எடுத்த நிலைப்பாட்டிற்கு ஆட்பட்டவர்களாவார்கள். அவர்கள் மாறுபட்ட நிலைப்பாட்டை எடுக்க இயலாது. இந்த விதியானது வழக்கின் வாதங் களுக்கு நிச்சயமாகப் பொருந்தும். இருப்பினும், ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றும் போது, ஒரு பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசாக இருக்கும் மனுதாரர், தானும் தனது குடும்பமும் தீர்ப்பாணைக்குரிய சொத்தின் வசம் இருப்ப தாகக் கூறும்போது, இந்தத் தீர்ப்புகள் எவ்வாறு பொருந்தும் என்று என்னால் காண முடிய வில்லை. குறிப்பாக, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை XXI இத்தகையச் சூழல்கள் மற்றும் தீர்ப்பாணைதாரர், தீர்ப்பு கடனாளிகள் மற்றும் மூன்றாம் நபர்களுக்குக் கிடைக்கக்கூடிய தீர்வுகள் குறித்து விரிவாக விளக்குகிறது.

11. கிஷுன் வழக்கில் (மேலே குறிப்பிடப் பட்டுள்ளது), தரப்பினரின் சட்டப்பூர்வ வாரிசுகள் எவரும் ஆவணத்தில் கொண்டு வரப்படாத நிலை யில், இரண்டாம் மேல்முறையீடு காலாவதியாகி விடும் என்றும், இறந்த நபருக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணை செல்லாததாகிவிடும் என்றும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தப்பிரிவு 47-ன் கீழான மனுவில், தரப்பினர் சாட்சியங் களை முன்வைத்துள்ளனர். அதில் 5-வது எதிர்மனுதாரர் (RW.1) தனது குறுக்கு விசாரணை யில், எதிர்மனுதாரர்கள் (மனுதாரர் தரப்பு) வசம் சொத்து இருந்த காரணத்தினால்தான்,

சுவாதீனத்தை மீட்பதற்காக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். அவரிடம் காண்பிக்கப்பட்ட புகைப்படங்கள் குறித்தும் அவர் சாட்சியமளித்துள்ளார்; அதில் சான்று ஆவணம் (Ex.) R3-ல் ஒரு பழைய சுவர் இருப்பதை அவர் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், மனுதாரர் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதைத் தடுப்பதற்காகவே சான்று ஆவணம் R2-வான காவல் புகார் அளிக்கப் பட்டதையும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். இதன் மூலம், தீர்ப்பாணைக்குரிய சொத்து மனு தாரரின் வசம் இருப்பதை எதிர்மனுதாரர்கள் நன்கு அறிந்திருந்தனர் என்பது புலனாகிறது; அதன் காரணமாகவே, இரண்டாம் மேல்முறை யீட்டில் வெற்றி பெற்ற பிறகு இந்த நீதிமன்றத்தின் மூலம் தீர்ப்பாணையை நிறைவேற்ற அவர்கள் முயன்றுள்ளனர். ஆனால் எதிர்மனுதாரர் களுக்குப் பின்னடைவாக, இரண்டாம் மேல் முறையீட்டில், அசல் வழக்கில் இரண்டாவது பிரதிவாதியாக இருந்த மனுதாரரின் தந்தையை அவர்கள் விடுவித்துவிட்டனர். இரண்டாவது பிரதிவாதி முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வெற்றி பெற்றிருந்தார்; இரண்டாம் மேல் முறையீட்டில் அவர் விடுவிக்கப்பட்டதால், அவருக்கு சாதகமாக இருந்த தீர்ப்பு ரத்து செய்யப் படவில்லை.

12. மற்ற பிரதிவாதிகளுக்கு எதிரான தீர்ப்பாணை இறுதியான ஒன்றாக மாறிவிட்டதால், எதிர்மனு தாரர்கள் அதனை நிறைவேற்றிச் சொத்தின் சுவாதீனத்தைப் பெற முடியும் என்றும்; மனுதாரர் தற்போது இரண்டாவது பிரதிவாதியின் சட்டப் பூர்வ வாரிசாகத் தன்னைக் கோராமல், மற்ற பிரதிவாதிகளையும் விலக்கி அந்தச் சொத்து தனது தனிப்பட்ட சுவாதீனத்தில் இருப்பதாகக் கூறுவதால், அவர் உரிமையியல் நடைமுறை சட்டப் பிரிவு 47-ன் கீழ் மனு தாக்கல் செய்ய முடியாது என்றும் மூத்த வழக்கறிஞர் வாதிட்டார்.

13. இது தொடர்பாக, மூத்த வழக்கறிஞர் திரு. வள்ளியப்பனின் வாதங்களில் வலு இருப்பதாக நான் கருதுகிறேன். மனுதாரர், தீர்ப்பு கடனாளி அல்லது பிரதிவாதியின் வழியாக உரிமை கோரும்போது மட்டுமே CPC பிரிவு 47-ன் கீழான மனுவைத் தொடர முடியும். ஆனால் மற்ற பிரதிவாதிகள் கூட சுவாதீனத்தில் இல்லை என்றும், தானும் தன் குடும்பமுமே சுவாதீனத்தில் இருப்பதாகவும் அவர் கூறுகிறார். எனவே, உரிமையியல் நடைமுறை சட்டப் பிரிவு 47-ன் கீழான இந்த மனு, மனுதாரருக்குச் சரியான வழிமுறை அல்ல என்ற மூத்த வழக்கறிஞரின் வாதத்துடன் நான் உடன்படுகிறேன். அதே சமயம், எதிர்மனுதாரர்களின் கூற்றுப்படியே, மனுதாரரிடமிருந்துதான் சுவாதீனம் பெறப்பட வேண்டும் என்கிறபோது, குறிப்பாக வழக்கில் ஒரு தரப்பாக இருந்த அவரது தந்தைக்கு எதிராக எந்தத் தீர்ப்பாணையும் இல்லாத நிலையில், அந்தத் தீர்ப்பாணையை எதிர்த்து வாதிடுவ தற்கான நியாயமான வாய்ப்பு மனுதாரருக்கு மறுக்கப்படக்கூடாது.

14. மேற்கூறியவற்றின் அடிப்படையில், பிரிவு 47-ன் கீழான மனு பராமரிக்கத்தக்கது அல்ல என்றும், நிறைவேற்று நீதிமன்றத்தின் உத்தரவில் தலையிட வேண்டிய அவசியமில்லை என்றும் கருதி இந்தச் சீராய்வு மனுவைத் தள்ளுபடி செய்ய முனைகிறேன். இருப்பினும், சம்பந்தப்பட்ட தரப்பினர் எவரேனும் உரிமை யியல் நடைமுறைச் சட்டம் கட்டளை XXI, விதி 97-ஐ (Order XXI, Rule 97 CPC) பயன்படுத்தி, தீர்ப்பாணைக்குரிய சொத்தின் சுவாதீனம் குறித்த தங்கள் உரிமைகளைத் தீர்மானிக்கக் கோரலாம். அவ்வாறு ஏதேனும் மனு தாக்கல் செய்யப் பட்டால், நிறைவேற்று நீதிமன்றம் இரு தரப்பினருக்கும் நியாயமான வாய்ப்பளித்து, அதன் தகுதியின் அடிப்படையில், முடிந்தவரை விரைவாக, முன்னுரிமை அடிப்படையில் மூன்று (3) மாத காலத்திற்குள் அதனைத் தீர்க்க வேண்டும்.

15. முடிவாக, மேற்கண்ட அவதானிப்புடன் இந்தச் சிவில் சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இதன் விளைவாக, இதனுடன் தொடர்புடைய இடைக்கால மனுவும் தள்ளுபடி செய்யப்படுகிறது. கட்டணத் தொகை ஏதுமில்லை.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# அறிவுசார் சொத்துரிமை உருவாக்கமா? அல்லது நீதித்துறை வரம்புமீறலா? இந்தியாவின் தனித்துவ உரிமைகள் சார்ந்த சிக்கல்

**- நொயோனிகா கர்**

அல்லு அர்ஜுன் –எதிர்– ஃபிரங்க்லி ரீடெய்ல் பிரைவேட் லிமிடெட் வழக்கில் டெல்லி உயர் நீதிமன்றம் சமீபத்தில் பிறப்பித்த இடைக்கால உத்தரவு முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது. செயற்கை நுண்ணறிவு, உண்மையற்றவை, நகலெடுக்கப்பட்ட குரல்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத வணிகமயமாக்கல் போன்ற இந்த நவீன யுகத்தில், தனித்துவ உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அறிவுசார் சொத்துரிமைச் சட்ட கோட்பாடுகளைப் பயன்படுத்துவது குறித்து இந்த கேள்விகள் எழுகின்றன.

இந்திய உயர்நீதிமன்றங்கள் நன்கு அறியப்பட்ட பொது ஆளுமைகளுக்கு சாதகமாக தனித்துவ உரிமைகளை அங்கீகரித்து, நடைமுறைப்படுத்தி வரும் தொடர்ச்சியான தீர்ப்புகளின் வரிசையில், தற்போதைய விஷயம் மிகச் சமீபத்திய ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பு அரிஜித் சிங், அமிதாப் பச்சன், அனில் கபூர், ஜாக்கி ஷெராஃப், ஐஸ்வர்யா ராய், கரண் ஜோஹர் மற்றும் அஜய் தேவ்கன் போன்றவர்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களிலும் இதே போன்ற பாதுகாப்பு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது பிரபலங்களின் ஆளுமை, தோற்றம், குரல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அடையாளங்களை அங்கீகரிக்கப்படாத வணிக ரீதியான சுரண்டல்களிலிருந்து கட்டுப்படுத்துவதில் நீதித் துறைக்கு இருக்கின்ற மற்றும் பெருகி வருகின்ற விருப்பத்தை பிரதிபலிக்கிறது.

பொது ஆளுமைகளை தவறான பயன்பாட்டிலிருந்து பாதுகாப்பது அவசியமானதுதான். ஆனால் அதற்குப் பயன்படுத்தப்படும் சட்டக் கோட்பாடுகளும் அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். பதிப்புரிமைச் சட்டக் கண்ணோட்டத்தில், மேலே குறிப்பிடப்பட்ட சமீபத்திய உத்தரவிலிருந்து சில அவதானிப்புகள் பின்வருமாறு:

அந்த உத்தரவின் பத்தி 35 பின்வருமாறு கூறுகிறது: ‘மேற்கூறிய ஆவணச் சான்றுகள் போன்றவை. வாதியின் தனித்துவமான மற்றும் பிரத்தியேகமான பண்புகள் வாதிக்கே உரியவை என்பதையும், அவை வாதியின் மூல அடையாளங்களாக இருக்கின்றன என்பதையும் தெளிவாக நிரூபிக்கின்றன. பெயர், தோற்றம், குரல், பேசும் விதம், வசனங்கள், சைகைகள், ஆடைகள், பேச்சு, கையெழுத்து, உருவ ஒற்றுமை போன்ற பண்புகள் வாதியின் பதிப்புரிமைகளாகவே கருதப்படும்; மேலும் வாதியைத் தவிர வேறு எவருக்கும் இவற்றை வணிக ரீதியாகப் பயன்படுத்தும் பிரத்தியேக உரிமை கிடையாது.’

இங்குதான் இந்த உத்தரவு விவாதத்திற்கு வழிவகுக்கிறது. இந்த அவதானிப்பானது, அறிவுசார் சொத்துரிமையின் வெவ்வேறு வடிவங்களை ஒரே ஒரு தனியுரிமை உரிமையாக சுருக்குகிறது. பதிப்புரிமைச் சட்டம் 1957–இன் பிரிவு 13–இன்படி, இலக்கியம், நாடகம், இசை மற்றும் கலைப் படைப்புகள், சினிமா திரைப்படங்கள் மற்றும் ஒலிப்பதிவுகள் போன்ற குறிப்பிட்ட வகையான அசல் படைப்புகளில் மட்டுமே பதிப்புரிமை நிலைத்திருக்க முடியும். பதிப்புரிமை என்பது ஒரு நபரின் அடையாளம், பாணி, நற்பெயர், குரல் அல்லது உடல் ரீதியான பண்புகளைப் பாதுகாப்பதை விட, அவர்களின் வெளிப்பாட்டைத் தான் பாதுகாக்கிறது. ஒரு நபரின் பெயர், உருவ ஒற்றுமை, சைகைகள், நடக்கும் விதம் அல்லது பொது ஆளுமை ஆகியவை பொதுவாக பதிப்புரிமைப் பாதுகாப்பிற்குத் தகுதியான ‘படைப்புகளாக’ மாறாது.

மறுபுறம், இத்தகைய பண்புகளை 'மூல அடையாளங்கள்' என்று விவரிப்பது வர்த்தக முத்திரைச் சட்டக் கோட்பாட்டை பயன்படுத்தும் தேவையை உருவாக்குகிறது. ஏனெனில் வர்த்தக முத்திரைகள் சட்டம் 1999–இன் படி (பிரிவுகள் 2(1)(zb) மற்றும் 29), ஒரு வர்த்தக முத்திரையானது ஒரு நபரின் பொருட்கள் அல்லது சேவைகளை மற்றொருவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட மட்டுமே உதவுகிறது; மனித அடையாளத்தின் மீதே முழு உரிமையைக் கொண்டாடுவதற்காக அல்ல. ஒரு பிரபலத்தின் பெயர் அல்லது கையெழுத்து குறிப்பிட்ட வணிகப் பிரிவுகளில் ஒரு முத்திரையாகப் பதிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படக் கூடும் என்றாலும், ஒட்டுமொத்த தனித்துவப் பண்புகளும் தானாகவே வர்த்தக முத்திரைகளாக மாறிவிடாது.

திரைப்படத்தில் வாதி நடித்த ஒரு கற்பனைக் கதாபாத்திரத்தின் பிரபலத்தையும், வாதியின் தனித்துவ உரிமைகளையும் நீதிமன்றம் ஒன்றுக்கொன்று குழப்பிக்கொண்டதாகத் தெரிவதில் இருந்து மற்றொரு சாத்தியமான முரண்பாடு எழுகிறது. வழக்கமாக, ஒரு கற்பனைக் கதாபாத்திரம் அல்லது திரைப்படம் சார்ந்த மற்ற வெளிப்பாடுகளின் மீதான பதிப்புரிமை தயாரிப்பாளரிடமோ அல்லது அதனுடன் தொடர்புடைய பிற உரிமைதாரர்களிடமோ தான் இருக்குமே தவிர, நடிகரிடம் மட்டும் இருக்காது. இருப்பினும், தற்போதைய வழக்கில், வாதியின் தனியுரிமக் கோரிக்கைகளை நிரூபிப்பதற்காக, அந்தக் கதாபாத்திரத்தின் வணிக ரீதியான மற்றும் கலாச்சார ரீதியான வெற்றியை நீதிமன்றம் மீண்டும் மீண்டும் நம்பியிருக்கிறது.

பத்திகள் 21 முதல் 23 வரை, 'புஷ்பா ராஜ்' என்ற திரைப்படக் கதாபாத்திரத்தின் மூலமே வாதிக்கு அகில இந்திய அளவிலான முக்கியத்துவம் கிடைத்தது என்பதை நீதிமன்றம் குறிப்பாகப் பதிவு செய்துள்ளது. மேலும், அந்தப் பாத்திரம் அதன் தனித்துவமான குணாதிசயம், ஆளுமை, வசனங்கள், சைகைகள், நடக்கும் விதம் மற்றும் நடன அமைப்பு ஆகியவற்றிற்காக அங்கீகரிக்கப்பட்டது என்றும் குறிப்பிடுகிறது. இந்த தர்க்கம் பத்தி 34–இல் மேலும் எடுத்துச் செல்லப்படுகிறது, அங்கு புஷ்பா படத்தின் வெற்றி மற்றும் அதன் வசனங்கள், பண்புகளின் பிரபலத்தை வாதியின் அடையாள அந்தஸ்திற்கான சான்றாக நீதிமன்றம் நம்பியிருக்கிறது. மிக முக்கியமாக, பத்தி 35–இல், இத்தகைய பண்புகள் வாதிக்கே பிரத்தியேகமானவை மற்றும் அவரது பதிப்புரிமைகளாகக் கருதப்படும் என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இருப்பினும், இதில் உள்ள சிக்கல் என்னவென்றால், இந்த கூறுகள் பலவும் ஒரு சினிமா திரைப்படத்திலிருந்தும், எழுத்தாளர்கள், இயக்குநர்கள், ஆடை வடிவமைப்பாளர்கள், நடன இயக்குநர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் உள்ளடங்கிய ஒரு கூட்டு ஆக்கப்பூர்வமான செயல்முறையின் மூலம் உருவாக்கப்பட்ட ஒரு கற்பனைப் பாத்திரத்திலிருந்தும் உருவானவை ஆகும். அந்த வகையில், இந்த தர்க்கமானது ஒரு நடிகரின் சொந்த அடையாளத்தில் உள்ள அவரது தனித்துவ/விளம்பர உரிமைகளுக்கும், வழக்கமாக தயாரிப்பாளர் அல்லது பிற உரிமைதாரர்களிடம் சேர வேண்டிய பதிப்புரிமை நலன்களுக்கும் இடையிலான வேறுபாட்டை மங்கலாக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால், இந்த உத்தரவின் பத்திகள் 39(G) மற்றும் 39(i)–இல், வாதியின் பெயர், படம், உருவ ஒற்றுமை மற்றும் 'மற்ற எந்தவொரு பண்புகளையும்' செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட வடிவங்கள் உட்பட அனைத்து ஊடகங்களிலும் பயன்படுத்துவதற்கு எதிராகப் பரந்த தடைகளை விதிக்கிறது. தவறான பயன்பாடு என்பது தனித்துவ உரிமைகள், தவறான ஆள்மாறாட்டக் கோட்பாடு, வர்த்தக முத்திரை அல்லது கலைஞர்களின் உரிமைகளின் கீழ் நிவாரணம் பெற தகுதியுடையதாக இருக்கலாம் என்றாலும், இத்தகைய விரிவான சொற்களைப் பயன்படுத்துவது, படைப்புகளின் மீதான பதிப்புரிமைக்கும், ஒரு ஆளுமையின் மீதான தனியுரிமக் கட்டுப்பாட்டிற்கும் இடையிலான எல்லையை மங்கலாக்கிவிடும்.

இவை அனைத்தும் கூறப்பட்ட பிறகும், ஒரு பெரிய சிக்கல் அப்படியே தான் இருக்கிறது. ஏஐ ஆள்மாறாட்டம், போலி அழைப்புகள், ஆபாசமான போலி உள்ளடக்கங்கள் மற்றும் தவறான விளம்பரப் பரிந்துரைகள் நிறைந்த இந்த காலகட்டத்தில, ஒரு தனிநபரின் ஆளுமை/உருவ ஒற்றுமைக்கான உரிமை மற்றும் அதைப் பாதுகாப்பது மிகவும் அவசியமானதாகும். இருப்பினும், நீதிமன்றங்களால் பயன்படுத்தப்படும் கருவிகளும் வழிமுறைகளும், தற்போதைய சட்டக் கோட்பாடுகளும் இந்தச் சிக்கல்களை எதிர்கொள்ளப் போதுமானதாக இல்லை.

ஒப்பீட்டுக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, பல நாடுகள் படிப்படியான நீதித்துறை வளர்ச்சிகளை மட்டுமே நம்பியிருக்காமல், இலக்கு வைக்கப்பட்ட பிரத்யேக சட்டங்கள் மூலம் இந்தச் சிக்கல்களுக்குப் பதிலளிக்கத் தொடங்கியுள்ளன. அமெரிக்காவில், தனித்துவ மற்றும் விளம்பர உரிமைகளுக்கான பாதுகாப்புகள் வரலாற்று ரீதியாக மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடுகின்றன; பல மாநிலங்கள் பெயர், படம், உருவ ஒற்றுமை மற்றும் சில சந்தர்ப்பங்களில் குரல் ஆகியவற்றுக்கான சட்டப்பூர்வ அல்லது பொதுச் சட்டப் பாதுகாப்பை அங்கீகரிக்கின்றன. கலிபோர்னியா நீண்ட காலமாக குரல் வரை நீட்டிக்கப்படும் பாதுகாப்புகளை அங்கீகரித்துள்ளது, அதே நேரத்தில் டென்னசி மாநிலம் 2024-இல் ‘எல்விஸ் சட்டத்தை‘ இயற்றியது; இது குரல், உருவ ஒற்றுமை, படம் மற்றும் அடையாளம் ஆகியவற்றின் அங்கீகரிக்கப்படாத செயற்கை நுண்ணறிவு நகலாக்கத்தை பிரத்தியேகமாக எதிர்கொள்வதற்காக கொண்டு வரப்பட்டது.

மத்திய மட்டத்தில், ’நோ ஏஐ ஃபிராட் சட்டம்’ (No AI FRAUD Act) மற்றும் ’நோ ஃபேக்ஸ் சட்டம்’ (NO FAKES Act) போன்ற சட்ட முன்மொழிவுகள், டிஜிட்டல் பிரதிகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத செயற்கை ஆள்மாறாட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கான மிகவும் சீரான ஒரு கட்டமைப்பை உருவாக்க முயல்கின்றன. இத்தகைய முன்னேற்றங்களின் முக்கியத்துவம், அங்கீகரிக்கப் பட்ட அடிப்படை உரிமைகளில் மட்டுமல்லாமல், அவை படைப்பாளிகள், தளங்கள், உரிமைதாரர்கள் மற்றும் நீதிமன்றங்கள் ஆகிய அனைவருக்கும் வழங்கும் சட்டப்பூர்வ தெளிவிலும் உள்ளது.

இதற்கு நேர்மாறாக, இந்தியா இத்தகைய ஒப்பிடத்தக்க சர்ச்சைகளை பெரும்பாலும் தற்போதுள்ள அறிவுசார் சொத்துரிமை மற்றும் பொதுச் சட்டக் கோட்பாடுகளிலிருந்து பெறப்பட்ட, நீதிபதிகளால் உருவாக்கப்பட்ட கொள்கைகள் மூலமாகவே தொடர்ந்து கையாண்டு வருகிறது. இதன் விளைவாக, ஒரு ஒட்டுவேலை போன்ற சட்டக் கோட்பாடு உருவாகிறது, அங்கு சட்ட இடைவெளிகளை நிரப்புவதற்காக தற்போதுள்ள கோட்பாடுகளை நீதிபதிகள் அடிக்கடி நீட்டித்துப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இது தெளிவை ஏற்படுத்துவதை விட அதிக தடைகளையே உருவாக்க வாய்ப்புள்ளது.

டிஜிட்டல் யுகத்தில் கருத்துச் சுதந்திரம், படைப்பாற்றல், கேலிச்சித்திரம், செய்தி அறிக்கை மற்றும் நியாயமான வணிகப் பயன்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் அதேவேளையில், நியாயமான தனித்துவ உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய, தொழில்நுட்ப-சார்பற்ற, கவனமாக சமநிலைப்படுத்தப் பட்ட ஒரு பிரத்யேகச் சட்டம் தற்போதைய அவசரத் தேவையாகும். எனவே, இந்த வழக்கு பதிப்புரிமை மற்றும் வர்த்தக முத்திரைச் சட்டங்களின் எல்லைகளைப் பற்றி மட்டுமல்லாமல், இந்தியாவில் ஒரு நிலையான தனித்துவ உரிமைக் கட்டமைப்புக்கான அவசரத் தேவையைப் பற்றியும் பேசுவதற்கான ஒரு முக்கியமான விவாதப் புள்ளியாக மாற வாய்ப்புள்ளது.

**(நன்றி: லைவ்லா இணையதளம். கட்டுரையாளர் கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக உள்ளார்)**

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# மாநிலங்களவை கட்சித் தாவல்கள், அரசியலமைப்பு சார்ந்த கேள்விகள்

**- வஞ்சாஜ் ஆசாத்**

ஆம் ஆத்மி கட்சி மற்றும் அரசியலமைப்பின் 10-வது அட்டவணை விதிகளைப் பயன்படுத்துவது தொடர்பான சமீபத்திய நிகழ்வு, நீதித்துறை தலையிட்டு தெளிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ஆம் ஆத்மி கட்சிக்குள்ளான சமீபத்திய நிகழ்வுகள், மாநிலங்களவையில் அக்கட்சியின் பிரதிநிதித்துவத்திற்கு ஒரு தீர்க்கமான தாக்குதலைக் கொடுத்துள்ளதாகத் தெரிகிறது. ஏப்ரல் 24, 2026 அன்று, அக்கட்சியின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஏழு பேர், கட்சியின் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான எம்பிக்கள் பாரதிய ஜனதா கட்சியுடன் இணைய முடிவு செய்துள்ளதாக பகிரங்கமாக அறிவித்தனர். இதற்காக அவர்கள் அரசியலமைப்பின் 10-வது அட்டவணையின் விதிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

இந்த நிகழ்வு பரவலான அரசியல் கவனத்தை ஈர்த்துள்ள அதே வேளையில், இதன் தாக்கங்கள் வெறும் கட்சி சார்ந்த கவலைகளுக்கு அப்பாற்பட்டவை ஆகும். இது கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் விளக்கம், குறிப்பாக 10-வது அட்டவணையின் கீழ் உள்ள 'இணைப்பு' விதிவிலக்கின் எல்லை குறித்த முக்கியமான அரசியலமைப்பு கேள்விகளை எழுப்புகிறது. இந்த நிகழ்வு முற்றிலும் புதியதொன்றும் அல்ல. சட்டமன்ற அளவில் இதுபோன்ற பலப்பரீட்சைகள் ஏற்கனவே நடந்துள்ளன; குறிப்பாக மகாராஷ்டிர சட்டப்பேரவையில் சிவசேனா கட்சியின் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான பிரிவினரின் வழக்கு இதற்கு முக்கிய உதாரணம். இருப்பினும், தற்போதைய நிகழ்வு தேசிய அளவில், மாநிலங்களவை எம்பிக்கள் சம்பந்தப்பட்டு நடப்பதால், இதன் அரசியலமைப்பு மற்றும் அரசியல் விளைவுகள் மிகவும் முக்கியமானதாக மாறுகின்றன.

கட்சித்தாவல் தடை கட்டமைப்பு, 'பிளவு' கோட்பாடு:

1950-ல் முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு, பிரிவு 103-ன் கீழ் குறிப்பிட்ட சில காரணங்களுக்காக மட்டுமே எம்பிக்களை தகுதி நீக்கம் செய்ய வழிவகை செய்தது. இந்திய தேர்தல் ஆணையத்தின் கருத்தின்படி, இந்திய குடியரசுத் தலைவர் இந்த முடிவை எடுப்பார். 1985-ஆம் ஆண்டின் 52-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 10-வது அட்டவணை, அரசியல் கட்சித்தாவல் என்ற தொடர் பிரச்சினைக்கு தீர்வு காண இந்த கட்டமைப்பை விரிவுபடுத்தியது. இதன் மூலம், உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்வதற்கான மற்றொரு காரணத்தை அது சேர்த்ததுடன், அந்த முடிவை எடுக்கும் அதிகாரத்தை சபாநாயகர் அல்லது தலைவருக்கு வழங்கியது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களின் அரசியல் லாபத்திற்காக கட்சிகளை கைவிடுவதை தகுதி நீக்கம் என்ற தண்டனை மூலம் தடுப்பதே இதன் நோக்கமாக இருந்தது.

அதே நேரத்தில், இந்த அட்டவணை ஆரம்பத்தில் பத்தி 3-ன் கீழ் 'பிளவு' மற்றும் பத்தி 4-ன் கீழ் 'இணைப்பு' என இரண்டு விதிவிலக்குகளைக் கொண்டிருந்தது. ஒரு சட்டமன்றக் கட்சியின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் தனியாக பிரிந்து புதிய பிரிவை உருவாக்கினால், அது பிளவாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், மே 1990-ல் தேர்தல் சீர்திருத்தக் குழுவின் (தினேஷ் கோஸ்வாமி குழு) பரிந்துரைகள் மற்றும் 1999-ன் 170-வது சட்ட ஆணைய அறிக்கையைத் தொடர்ந்து, 2003-ஆம் ஆண்டின் 91-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் அந்த 'பிளவு' விதிவிலக்கு நீக்கப்பட்டது. இந்த நீக்கத்தின் மூலம், சட்டமன்றக் கட்சிக்குள் ஏற்படும் உள்முக பிளவுகளை கட்சித்தாவலுக்கான நியாயமான தற்காப்பாக ஏற்பதில்லை என்ற தெளிவான முடிவை நாடாளுமன்றம் எடுத்தது.

பத்தி 3–ஐ நீக்கியது ஆழமான தாக்கங்களைக் கொண்டுள்ளது. 'பிளவு' என்ற கருத்து, அரசியல் கட்சியுடன் ஒப்பிடும்போது சட்டமன்றக் கட்சிக்கு ஒரு குறிப்பிட்ட அளவிலான தன்னாட்சியை மறைமுகமாக அங்கீகரித்திருந்தது. அதை நீக்கியது, ஜனநாயகப் பொறுப்புக்கூறலின் மைய அலகாக அரசியல் கட்சியே முதன்மையானது என்பதை நாடாளுமன்றம் மீண்டும் நிலைநாட்டியதை உணர்த்துகிறது.

இந்திய உச்ச நீதிமன்றமும் சுபாஷ் தேசாய் –எதிர்– முதன்மைச் செயலாளர், மகாராஷ்டிர ஆளுநர் (2023) என்ற வழக்கில் இந்த நிலையை வலுப்படுத்தியுள்ளது. அங்கு, ஒரு அரசியலமைப்பு அமர்வு, ஒரு சட்டமன்றக் கட்சிக்கும் அதன் தாய் அரசியல் கட்சிக்கும் இடையிலான தொப்புள்கொடி உறவை துண்டிக்கும் வகையில் 10–வது அட்டவணையை விவரிக்க மறுத்துவிட்டது. தேர்தலில் வெற்றி பெற்ற பிறகும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் செயல்பாடுகளை அரசியல் கட்சியே தொடர்ந்து வழிநடத்துகிறது மற்றும் கட்டுப்படுத்துகிறது என்பதை நீதிமன்றம் அடிக்கோடிட்டுக் காட்டியது.

கேள்விக்குள்ளாகும் இணைப்பு விதிவிலக்கு

தற்போதைய சர்ச்சை, இணைப்பு வழக்குகளில் தகுதி நீக்கத்திலிருந்து விலக்கு அளிக்கும் 10–வது அட்டவணையின் பத்தி 4–ன் விளக்கத்தை மையமாகக் கொண்டுள்ளது. இத்தகைய இணைப்பை ஒரு சட்டமன்றக் கட்சியின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் மட்டுமே தன்னிச்சையாகச் செய்ய முடியுமா, அல்லது அதற்கு முன்னதாக அசல் அரசியல் கட்சியின் முடிவு இருக்க வேண்டுமா அல்லது அது கட்சியின் முடிவை பிரதிபலிக்க வேண்டுமா என்பதுதான் முக்கியமான கேள்வி.

பத்தி 4–ஐ சாதாரணமாக வாசித்தால், 'அசல் அரசியல் கட்சி' மற்றொரு அரசியல் கட்சியுடன் இணையும் போது மட்டுமே இந்த விலக்கு பொருந்தும் என்று தெரிவிக்கிறது. எனவே, முக்கியத்துவம் அரசியல் கட்சியின் இணைப்பிற்குத்தானே தவிர, சட்டமன்றக் கட்சிக்குள்ளான வெறும் எண்களின் சேர்க்கைக்கு அல்ல. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினரின் சம்மதத்தின் அடிப்படையில் ஒரு கற்பிதமான தகுதியை அறிமுகப்படுத்தும் பத்தி 4(2)–ஐ, அரசியல் அமைப்பின் முதன்மையை அகற்றும் வகையில் தனியாக பிரித்து வாசிக்க முடியாது.

அப்படிச் செய்வது அரசியலமைப்பு வடிவமைப்பையே தலைகீழாக மாற்றிவிடும், மேலும் சட்டமன்றக் கட்சி, அரசியல் கட்சியின் விதியை தீர்மானிக்க அனுமதிப்பது போல் ஆகிவிடும்.

இந்த விளக்கம், முன்னதாக மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கூட தங்களின் பிளவை நியாயப்படுத்த அனுமதித்த 'பிளவு' விதிவிலக்கை ஒழிப்பதற்காக நாடாளுமன்றம் தனது அரசியலமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி எடுத்த முடிவிற்கு முரணானதாக இருக்கும். தகுதி பெறுவதற்கான எண்ணிக்கை மாறியிருக்கலாம், ஆனால் சட்டமன்றக் கட்சிக்குள்ளான உள் கருத்து வேறுபாடுகள் அரசியல் கட்சியின் அடையாளம் மற்றும் தொடர்ச்சியை மீறிச் செல்ல முடியாது என்ற கொள்கை மாறாமல் உள்ளது.

தொழில்நுட்பங்களுக்கு அப்பால் (ஆனுதூணிணஞீ ஞுனுஞிடணடிஞிச்டூடிஞுடினுண்)

பரந்த அளவில் பார்க்கும்போது, கட்சித்தாவல் தடைச் சட்டம் என்பது தனிநபர்களின் நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்காக மட்டுமல்லாமல், கட்சி முறையின் நேர்மையைப் பாதுகாக்கவும், அதன் மூலம் ஜனநாயகத்தில் 'எதிர்க்கட்சி' என்ற அமைப்பைப் பாதுகாக்கவும் கொண்டு வரப்பட்டது. இது அரசியல் மறுசீரமைப்புகளை முற்றிலுமாகத் தடை செய்யவில்லை என்றாலும், அவற்றை அரசியலமைப்பு ஒழுங்குமுறைக்கு உட்படுத்துகிறது.

சமீபத்திய ஆம் ஆத்மி கட்சி நிகழ்வு, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற பெரும்பான்மையினர் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியின் அடையாளத்தையே கைப்பற்ற முடியுமா என்பது குறித்து

நீதித்துறையின் தெளிவான விளக்கம் தேவை என்பதை உணர்த்துகிறது. இதற்கான பதில் நாடாளுமன்ற ஜனநாயகத்தில் நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தும்.

பாடலாசிரியரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜாவேத் அக்தர் ஒருமுறை மாநிலங்களவையில் குறிப்பிட்டது போல, ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் இடையே உள்ள அத்தியாவசிய வேறுபாடே எதிர்க்கட்சியின் இருப்புதான். இந்த எதிர்க்கட்சியைத்தான் 10-வது அட்டவணை பாதுகாக்க முயல்கிறது. ஆம் ஆத்மி கட்சி 10-வது அட்டவணையின் பத்தி 6-ன் கீழ் மாநிலங்களவைத் தலைவரை அணுகி, தனது ஏழு 'இணைந்த' எம்பிக்களின் நடவடிக்கைக்கு சவால் விடுத்துள்ளது.

இந்த இணைப்பு விதிவிலக்கு இறுதியில் எவ்வாறு விளக்கப்படுகிறது என்பது, குறிப்பாக எதிர்க்கட்சியின் தொடர்ச்சியான வீரியத்திற்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும். தெளிவான நீதித்துறை விளக்கம் இல்லாத நிலையில், இப்போதைக்கு இல்லாவிட்டாலும் விரைவில் இந்த விவகாரம் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரப்பூர்வமான தீர்ப்பை நாடிச் செல்லும். இறுதியில், இந்த அரசியலமைப்புத் தீர்ப்பு இந்தியாவின் நாடாளுமன்றக் கட்டமைப்பிற்குள் அரசியல் கட்சிகளின் மையத்தன்மையைப் பாதுகாக்கும் என்று நம்பலாம்.

**(நன்றி: தி இந்து. கட்டுரையாளர் ஒரு வழக்கறிஞர், தற்போது இந்திய உச்ச நீதிமன்றத்தில் சட்ட எழுத்தராகவும் ஆராய்ச்சி உதவியாளராகவும் பணியாற்றி வருகிறார்)**

**- மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை.**

## நீதிபதிகளுக்கு எதிராக உயர்நீதிமன்ற பதிவாளர் ஜெனரலால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியாது - உச்சநீதிமன்றம்

நீதிபதிகளுக்கு எதிராக உயர்நீதிமன்ற பதிவாளர் ஜெனரலால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் 18.5.2026 அன்று தெரிவித்தது. உத்தரகாண்ட் மாநிலத்தில் பெண் நீதிபதி ஒருவர் வீட்டில் பணிப்பெண்ணாக வேலை பார்த்த சிறுமியை மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் துன்புறுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதை யடுத்து அவரை பணி நீக்கம் செய்தும், அபராதம் விதித்தும் உத்தரகாண்ட் உயர்நீதிமன்ற பதிவாளர் ஜெனரல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தார். ஆனால் இதற்கு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஒப்புதலை அவர் பெறவில்லை.

இதைச் சுட்டிக்காட்டி தனக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை எதிர்த்து, உத்தரகாண்ட் உயர் நீதிமன்றத்தில் பெண் நீதிபதி வழக்குத் தொடுத்தார். இதை விசாரித்த உத்தரகாண்ட் உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் பணி நீக்கம் செய்தும், அபராதம் விதித்தும் பதிவாளர் ஜெனரல் பிறப்பித்த உத்தரவு செல்லாது என்று கூறி ரத்து செய்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் உத்தர காண்ட் உயர்நீதிமன்ற நிர்வாகம் தரப்பில் மேல்முறையீடு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு, உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்யகாந்த் முன் 18.5.2026 அன்று விசாரணைக்கு வந்தது. அப்போது உச்சநீதிமன்றம் கூறுகையில், தலைமை நீதிபதி அல்லது நீதிபதிகள் குழுவின் ஒப்புதல் இல்லாமல், நீதிபதியை பதவி நீக்குவது போன்று எடுக்கப்படும் நடவடிக்கை செல்லாது. உயர் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின் படி, பெண் நீதிபதி ஏற்கனவே அவர் இடத்தில் நியமிக்கப்பட்டு விட்டார் என்றனர். பெண் நீதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டு எழுந்ததும் அவர் மீது விசாரணை நடத்த தலைமை நீதிபதி தரப்பில் உத்தரவிடப்பட்டதா என உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

இதற்கு உயர்நீதிமன்ற நிர்வாகம் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர், எழுத்துபூர்வமாக அதுபோல எந்த அறிவுறுத்தலும் அளிக்கப்படவில்லை என்றார். இதைக் கேட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள், அப்படி யெனில் இது தீவிர பிரச்சினை என்றும், பதிவாளர் ஜெனரல் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்றும் ஆட்சேபம் தெரிவித்தனர். நீதிபதியை பதவி நீக்கம் செய்ய பதிவாளர் ஜெனரலுக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்றும், தலைமை நீதிபதியின் உத்தரவைக் கேட்டு செயல்படக்கூடியவரே பதிவாளர் ஜெனரல் என்றும் கூறிய உச்ச நீதிமன்றம், பெண் நீதிபதி தொடர்பாக உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் பிறப்பித்த உத்தரவில் தலையிட விரும்ப வில்லை. அவர் பதவி நீக்கம் செய்யப்பட்ட நாள் முதல் மீண்டும் பணியில் தொடர்கிறார் என்றும் குறிப்பிட்டது.

**நன்றி: தினமணி 19.5.2026**

# 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு (திரைப்படங்கள் தொடர்பான விளம்பரப் பொருட்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல்) சட்டம்

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

## The Tamil Nadu (Compulsory Censorship of Film Publicity Materials Act, 1987 (Tamil Nadu Act No. 35 of 1987)

**(as on 31st October, 2023)**

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 1987ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 27ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தலுக்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.

இந்திய குடியரசின் முப்பது எட்டாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்** :

(1) இந்தச் சட்டம் 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு (திரைப்படங்கள் தொடர்பான விளம்பரப் பொருட்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் மூலம் குறிப்பிடக்கூடிய அத்தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள் :** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி

(a) ‘‘குழு’’ என்பது, பிரிவு 3இன்படி, அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் எனப் பொருள்படும்.

(b) ‘‘திரையரங்கம்’’ என்பது, 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 9/1955) திரைப்படங்களைத் திரையிடுவதற்காக உரிமம் வழங்கப்பட்ட இடம் எனப் பொருள்படும்.

(c) ‘‘அரசு’’ என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(d) ‘‘விளம்பரப் பொருட்கள்’’ என்பது, இந்தியாவிலோ அல்லது இந்திய நாட்டிற்கு வெளியேயுள்ள ஏதேனும் ஒரு நாட்டிலோ திரைப்படங்களை விளம்பரப்படுத்துவதற்கான பொருள் எதுவும் எனப் பொருள்படும். இவற்றில் பின்வருபவை அடங்கும்.

(l) பெரிய விளம்பரப் பலகைகள், காட்சி அட்டைகள், செருகுப் படங்கள், அச்சக வடிவமைப்பு, பெரிதாக்கப்பட்ட படங்கள்.

(i) சுவரொட்டிகள்;

(ii) இயங்கா நிலைப்படங்கள்;

(iii) திரைப்படக் காட்சிப்படத் தட்டு மற்றும்

(iv) திரைப்படக் காட்சிப்படத் தட்டு மற்றும்

(v) வரையறுக்கக் கூடிய பிற விளம்பரப் பொருட்கள்.

**3. விளம்பரப் பொருட்கள் தணிக்கைக் குழு**: (1) விளம்பரப் பொருட்களைப் பொறுத்தவரையில் விளம்பரத் தணிக்கைச் சான்றிதழை வழங்குவதற்காக, அரசு, அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதன் மூலம் 'தமிழ்நாடு விளம்பரப் பொருட்களை தணிக்கைக் குழு' என்றழைக்கப்படும் குழு ஒன்றை அமைக்கலாம். அக்குழுவில், அரசால் நியமிக்கப்படும் தலைவரும், ஐந்து நபர்களுக்கு மேற்படாத பிற உறுப்பினர்களும் இருப்பார்கள்.

(2) பிரிவு 4 உட்பிரிவு (1)இன்படி நியமிக்கப்பட்ட விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலர், அக்குழுவின் உறுப்பினர் செயலாளராகச் செயல்படுவார்.

(3) இக்குழுவில் அரசு அலுவலர்களும், அரசு சார்பாற்றவர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

(4) குழுவின் தலைவரும் உறுப்பினர்களும், வகுத்துரைக்கப்படும் கால அளவிற்குப் பதவி வகிப்பார்கள்.

(5) குழுத் தலைவர், அரசு முடிவு செய்யக் கூடிய ஊதியத்தைப் பெறுவார் மற்றும் விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலர் நீங்கலாக குழுவின் பிற உறுப்பினர்கள், குழுவின் கூட்டங்களில் கலந்துக் கொள்ள வரையறுக்கப்பட்ட படித் தொகைகளை அல்லது கட்டணங்களைப் பெறுவார்கள்.

(6) குழுவின் கூட்டங்கள் வகுத்துரைக்கப்படும் இடத்திலும், நேரத்திலும், முறையிலும் நடைபெற வேண்டும்.

**4. விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலரும் பிற பணியாளர்களும்**: (1) இச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலர் ஒருவரை அரசு நியமிக்கும், விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலருக்கு உதவ அரசு தகுதியெனக் கருதும் எண்ணிக்கையில் உதவி விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலர்களையும், ஆய்வாளர்களையும் அரசு நியமிக்கலாம்.

(2) விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலரும், உதவி விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலர்களும், ஆய்வாளர்களும், எந்தத் திரைப்பட அரங்கையும் சென்று ஆய்வு செய்யலாம். மேலும் அவர்கள், எவரிடமிருந்தும் விளம்பரப் பொருட்கள் தொடர்பான ஆவணம் எதனையும் வரவழைத்து ஆய்வு செய்யலாம்.

(3) விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலரும், உதவி விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலர்களும், ஆய்வாளர்களும் வகுத்துரைக்கப்படும் பிற பணிகளையும் செய்ய வேண்டும்.

**5. விளம்பரப் பொருட்களைக் காட்சிப்படுத்துதலைத் தடுத்தல்**: (1) திரைப்பட அரங்கின் தாழ்வாரத்திலோ அல்லது அரங்கின் வெளியிலோ அல்லது பொது மக்கள் காணக் கூடிய இடத்திலோ, அத்தகைய இடம் பொது இடமாயினும், தனியார் இடமாயினும், அந்த விளம்பரப் பொருட்கள் தொடர்பாக விளம்பரப் பொருட்கள் தணிக்கைக் குழுவின் சான்றிதழ் பெறாமல், விளம்பரங்கை ஒருவரும் காட்சிப்படுத்தக் கூடாது அல்லது அவ்வாறு காட்சிப்படுத்த ஏற்பாடு செய்யக் கூடாது.

(2) எவராவது திரைப்பட அரங்கின் தாழ்வாரத்திலோ அல்லது அரங்கின் வெளியிலோ அல்லது பொது மக்கள் காணக் கூடிய இடத்திலோ அத்தகைய இடம் பொது இடமாயினும், தனியார் இடமாயினும், அதில் விளம்பரப் பொருட்களை வைக்க விரும்பினால், அவர் விளம்பரப் பொருட்கள் தணிக்கைச் சான்றிதழ் ஒன்றைப் பெறுவதற்கு வகுத்துரைக்கப்படும் படிவத்தில் குழுவிற்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு வகுத்துரைக்கப்படும் முறையில் கொடுக்கப்படும்

விண்ணப்பத்துடன் விளம்பரப் பொருட்களும், வகுத்துரைக்கப்படும் கட்டணத் தொகையும் அந்த தணிக்கைக் குழுவின் சான்றிதழ் பெறாமல், விளம்பரங்களை ஒருவரும் காட்சிப்படுத்தக் கூடாது அல்லது அவ்வாறு காட்சிப்படுத்த ஏற்பாடு செய்யக் கூடாது.

(2) எவராவது திரைப்பட அரங்கின் தாழ்வாரத்திலோ அரங்கின் வெளியிலோ அல்லது பொது மக்கள் காணக் கூடிய இடத்திலோ, அத்தகைய இடம் பொது இடமாயினும், தனியார் இடமாயினும், அதில் விளம்பரப் பொருட்களை வைக்க விரும்பினால், அவர் விளம்பரப் பொருட்கள் தணிக்கைச் சான்றிதழ் ஒன்றைப் பெறுவதற்கு வகுத்துரைக்கப்படும் படிவத்தில் குழுவிற்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு வகுத்துரைக்கப்படும் முறையில் கொடுக்கப்படும் விண்ணப்பத்துடன் விளம்பரப் பொருட்களும், வகுத்துரைக்கப்படும் கட்டணத் தொகையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

**6. விளம்பரப் பொருட்களுக்குத் தணிக்கைச் சான்றிதழை வழங்குதல்:** (1) விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலர், பிரிவு 5இன்படி அளிக்கப்பட்ட தொடர்பாகத் தான் ஏதேனும் பரிந்துரைத்தி ருந்தால், அப்பரிந்துரையையும் சேர்த்து பரிசீலனைக்காகக் குழுவின் முன் ஆய்விற்காக வைக்க வேண்டும்.

(2) விளம்பரப் பொருட்களையும் விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலரின் அறிவுரை களையும் குழு ஆய்வு செய்த பின்னர், விளம்பரப் பொருட்களில் ஆபாசம் ஏதுமில்லை என்றும், பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப் பொருத்தமானதென்றும் கருதினால்

(i) வகுத்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும், விளம்பரப் பொருட்கள் தணிக்கைச் சான்றிதழ் ஒன்றைக் குழு வழங்கலாம். அவ்வாறு வழங்கப்படும் சான்றிதழில் விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலர் கையொப்பமிட வேண்டும். பின்னர் விண்ணப்பதாரருக்கே அந்த விளம்பரப் பொருட்களைத் திருப்பியனுப்பி விட வேண்டும் அல்லது

(ii) விளம்பரப் பொருட்களைப் பார்வையாளர்கள் காட்சிக்கு வைக்க அனுமதிக்கும் முன்னர், தாம் அவசியமெனக் கருதக் கூடிய மாறுதல்களை அல்லது மாற்றங்களை அந்த விளம்பரப் பொருட்களில் செய்யும்படி விண்ணப்பதாரருக்குக் கட்டளையிடலாம் அல்லது

பொதுமக்கள் காட்சிக்கு வைப்பதற்கான விளம்பரப் பொருட்கள் தணிக்கைச் சான்றிதழைத் தர மறுக்கலாம்.

(3) குழுவானது, வகுத்துரைக்கப்படும் கால அளவுக்குள் உட்பிரிவு (2)இன்படி ஆணை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

(4) இது குறித்துத் தனது தரப்பை எடுத்துரைக்க விண்ணப்பதாரருக்கு வாய்ப்பு அளித்தாலன்றி, மற்றபடி உட்பிரிவு (2)இன் (ii) (iii) ஆகிய கூறுகளின்படி குழுவானது நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாது.

**7. விளம்பரப் பொருட்களுக்குச் சான்றிதழ் அளிப்பதில் பின்பற்றக் கூடிய வழிகாட்டு கோட்பாடுகள்:**

(1) பிரிவு 6இன் உட்பிரிவு (2)இன்படி, விளம்பரப் பொருட்களைப் பொறுத்த சான்றிதழை அளிப்பதா அல்லது அளிக்க மறுப்பதா என்பதை முடிவு செய்கையில் அல்லது பிரிவு 6இன் உட்பிரிவு (2)இன் (ii)ஆம் கூறின்படி கட்டளை ஒன்றைப் பிறப்பிக்கையில், குழுவானது, அந்த விளம்பரப் பொருள் அல்லது அதன் பகுதியானது;

(a) ஆபாசமானதாக இருக்கிறதா

(b) அரசின் பாதுகாப்பு நலன்களுக்கு அல்லது வெளிநாட்டுடனான நட்புறவிற்கு எதிரானதாக இருக்கிறதா.

(c) பொது அமைதிக்கு, கண்ணியத்திற்கு அல்லது ஒழுக்க நெறிக்கு முரணானதாக இருக்கிறதா.

(d) அவதூறு அல்லது நீதிமன்ற அவமதிப்புக்கு உள்ளடங்கியதாக இருக்கிறதா; அல்லது

(e) ஏதேனும் குற்றத்தை செய்வதற்குத் தூண்டிவிடக் கூடியதாக இருக்கிறதா என்பதைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**விளக்கம்**: விளம்பரப் பொருள் ஒன்று. அது சிற்றின்பத்தைத் தூண்டிக் கூடியதாகவோ கெட்ட ஆசையை ஈர்க்கக் கூடியதாகவோ இருக்குமானால் அல்லது அதன் விளைவானது (இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனித்தனி இனங்களை அது கொண்டிருக்கிற நிலையில்) அதன் இனங்களில் ஏதேனும் ஒன்றின் விளைவானது ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டால், அதில் அடங்கியுள்ள அல்லது உட்பொதிந்துள்ள விபரத்தை சம்பந்தப்பட்ட சூழ்நிலைகள் அனைத்தையும் கவனத்தில் கொண்டு பார்க்கையில், படிக்கக் கூடிய அல்லது காணக் கூடிய நபர்களை சீர்கெடச் செய்வதாகவும் மனத்தூய்மை கெடச் செய்வதாகவும் இருக்குமானால் அல்லது எந்த வயதையும் சேர்ந்த பெண் ஒருவரின் படத்தையோ, வரைபடத்தையோ ஓவியத்தையோ அல்லது உருவ அமைப்பையோ, உணர்வுகளைப் புண்படுத்தக் கூடிய அல்லது பெரும்பாலும் படிக்கக் கூடிய அல்லது காணக் கூடிய நபர்களின் மனங்களில் கண்ணியமற்ற அல்லது மனத் தூய்மையற்ற அல்லது ஒழுக்கக் கேடான எண்ணங்கள் எவற்றையேனும் பெரும்பாலும் படிக்கக் கூடிய அல்லது காணக் கூடிய நபர்களின் மனங்களில் கண்ணியமற்ற அல்லது மனத் தூய்மைற்ற அல்லது ஒழுக்கக் கேடான எண்ணங்கள் எவற்றையேனும் பெரும்பாலும் தோற்றுவிக்கக் கூடியதாக இருக்கிற தோற்றத்தில் விவரிக்குமானால், காட்சிக்கு வைக்குமானால் அல்லது காட்டுமானால், அது ஆபாசமானதாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள வகைமுறைகளுக்குட்பட்டு, இச்சட்டத்தின்படி அரசு, தாம் தேவையனெக் கருதுகிற கட்டளைகளையைப் பிறப்பித்து, விளம்பரப் பொருட்களைப் பொதுமக்கள் காட்சிக்க வைக்க அனுமதி வழங்குகையில், அலுவலருக்கு வழிகாட்டியாக இருக்கும் தொடர்புடைய கோட்பாடுகளைக் குறிப்பிடலாம்.

**8. மேல்முறையீடு**: (1) குழு எடுத்த முடிவினால் பாதிக்கப்பட்ட நபர் எவரும், முடிவினைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், வகுத்துரைக்கப்படும் அதிகார அமைப்புக்கு மேல்முறையீட செய்து கொள்ளலாம். அந்த அதிகார அமைப்பு இது தொடர்பாக விசாரணை நடத்துவது அவசியமெனக் கருதினால், அவ்வாறு விசாரணை நடத்திய பின்னரும், இது குறித்து மேல்முறையீட்டாளர் தனது கருத்துக்களை எடுத்துக் கூற அவருக்கு வாய்ப்பினை அளித்த பின்னரும், இது தொடர்பாகத் தாம் தக்கதெனக் கருதக் கூடிய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பின் முடிவு அறுதியானதாகும்.

**9. விளம்பரப் பொருட்களைக் காட்சிப்படுத்துதல்:** (1) விளம்பரப் பொருட்கள் தொடர்பாக, வகுத்துரைக்கப்பட்ட முறையில் வழங்கப்பட்டுள்ள விளம்பரப் பொருட்கள் தணிக்கைச் சான்றிதழின் எண். நாள் ஆகிய விவரங்களை அந்த விளம்பரப் பொருட்கள் கொண்டிருந்தாலன்றி, அத்தகைய எந்த விளம்பரப் பொருட்களையும் காட்சிக்கு வைத்தல் கூடாது.

(2) இந்தச் சட்டத்தின்படி தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்படாத விளம்பரப் பொருட்கள் எதனையும் எவரும் காட்சிக்கு வைத்தல் கூடாது.

**10. தண்டனை**: (1) (i) பிரிவு 6இன்படி குழுவால் சான்றளிக்கப்படாமலும், விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலரால் கையொப்பம் இடப்படாமலும் உள்ள அல்லது

(ii) குழுவால் சான்றளிக்கப்பட்டிருந்து விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலரால் கையொப்பம் இடப்பட்டிருந்து, அவ்வாறு அளிக்கப்பட்ட விளம்பரப் பொருட்களிலிருந்து மாறுபட்டிருக்கிற அல்லது

(iii) விளம்பரப் பொருட்கள் தணிக்கைக் குழுவால் சான்றளிக்கப்பட்டு, விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலரால் கையொப்பமிடப்பட்டு, அதனால் வரையறுக்கப்பட்ட முறையில் பதிவுச் சான்றிதழ், எண், நாள் ஆகியவற்றைக் கொண்டிராமலும் உள்ள.

விளம்பரப் பொருட்கள் எதனையும், எவரேனும் காட்சிக்கு வைப்பாரானால், அவருக்கு மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய சிறைத் தண்டனையோ, அபராதத் தண்டனையோ அல்லது இவ்விரு தண்டனைகளுமோ விதிக்கப்படும். அவர் தொடர்ந்து அக்குற்றத்தைப் புரிந்து வந்தால், அவ்வாறு தொடர்ந்து அக்குற்றம் புரியம் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாய் வரை மேலும் அபராதம் விதிக்கப்படும்.

(2) இந்தப் பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றத்திற்காக நபர் எவரும் தண்டிக்கப்படுவாரேயானால், அவ்வாறு தண்டனை விதித்த நீதிமன்றம், மேலும் எந்த விளம்பரப் பொருட்கள் தொடர்பாக இக்குற்றம் செய்யப்பட்டுள்ளதோ அந்த விளம்பரப் பொருட்கள், அரசுக்குப் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்று பணிக்கலாம்.

**11. செல்லத்தக்கதாக்குதல்** : குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அக்குழுவில் உள்ள காலியிடம் அல்லது அதன் அமைப்பிலுள்ள குறைபாடு ஏதொன்றின் காரணத்தால் மட்டுமே செல்லத்தகாததாகக் கருதப்படுதல் கூடாது.

**12. குற்றங்களை இணக்கமாகத் தீர்த்துக் கொள்வதற்கான அதிகாரம்** : (1) வகுத்துரைக்கப்படும் நிபந்தனைக்குட்பட்டு, வகுத்துரைக்கப்பட்ட அலுவலர், இந்தச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடருவதற்கு முன்னரோ அல்லது தொடர்ந்த பின்னரோ, இது தொடர்பான, பொதுவான சிறப்பு ஆணையை பிறப்பிதன் மூலம், இச்சட்டத்தின்படி குற்றம் புரிந்துள்ளவரிடமிருந்து அல்லது குற்றம் புரிந்துள்ளதாக நியாயமாக சந்தேகப்படத்தக்கவரிடமிருந்து, அத்தகைய குற்றத்தை இணக்கம் செய்து கொள்கின்ற வகையில், ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத பணத் தொகையை ஏற்றுக் கொள்ளலாம்.

(2) அத்தொகையைச் செலுத்துவதன்பேரில், அவர் அக்குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்பதோட, அக்குற்றம் தொடர்பாக அவருக்கெதிராக மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படக் கூடாது.

13. கைப்பற்றுவதற்கான அதிகாரம் காவல் நிலைய பொறுப்பு அலுவலர் ஒருவரின் படிநிலைக்குக் குறையாத காவல் அலுவலர் எவரும்.

(i) இச்சட்டத்தின் கீழ் விளம்பரப் பொருட்கள் தணிக்கைச் சான்றிதழ் பெறப்பட்டிராத

(ii) விளம்பரப் பொருட்கள் தணிக்கைச் சான்றிதழின் எண், நாள் ஆகியவற்றைக் கொண்டிருக்காத. விளம்பரப் பொருள் ஒன்றை கைப்பற்றுவது சட்டப்படியானதாகும் மற்றும் அத்தகைய காவல் அலுவலர், அதிகார வரம்பு பெற்றிருக்கின்ற குற்றவியல் நடுவருக்கு அந்தக் கைப்பற்றுகை குறித்து உடனடியாக அறிக்கை அந்தக் கைப்பற்றுகை குறித்து உடனடியாக அறிக்கை கொடுத்தல் வேண்டும். மேலும், கைப்பற்றப்பட்ட விளம்பரப் பொருள் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல வசதி இல்லாத நிலையில் இருக்கும்போது, அவர், கோரப்பட்டவாறும் கோரப்படும்போதும் நீதிமன்றத்தின் முன்பு அந்த விளம்பரப் பொருளை தாக்கல் செய்வதற்கும் மற்றும் அந்த விளம்பரப் பொருளை தீர்வு செய்வது குறித்து நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணைகளை நிறைவேற்றுவதற்கும் பிணைமுறி ஒன்றை எழுதிக் கொடுக்கின்றதன்பேரில் கைப்பற்றப்பட்ட அந்த விளம்பரப் பொருளை நபர் ஒருவரின் பாதுகாப்பிலும் கொடுத்து வைக்கலாம்.

**14. குழுவின் உறுப்பினர்கள் அரசுப் பணியாளர்களாக இருப்பர்**: குழுவின் உறுப்பினர்கள், இச்சட்டத்தின் வகைமுறைகளின்படிச் செயல்படுகையில் அல்லது செயல்படுவதாகக்

கருதப்படுகையில், இந்தித் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் )ஸ்ரீ 21ஆம் பிரிவின் பொருளின்படி அரசுப் பணியாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

**15. சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தடை:** இச்சட்டத்தின்படி நல்லெண்ணத்துடன் செய்துள்ள அல்லது செய்யக் கருதியுள்ள ஏதேனும் ஒரு செயலைப் பொறுத்தவரையில், குழுவின் உறுப்பினர்களுக்கும் இந்தச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்படுபவர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரவோ சட்ட நடவடிக்கை எடுக்கவோ கூடாது.

**16. நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்:** (1) இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றமொன்று நிறுமம் ஒன்றால் புரியப்பட்டிருக்கின்ற நிலையில், அக்குற்றம் புரியப்பட்ட காலத்தில் அந்நிறுமத்தில் அலுவலக நடப்பிற்காக அந்நிறுமத்தைத் தம் பொறுப்பில் கொண்டிருந்த மற்றும் அதற்குப் பொறுப்பாயிருந்த ஒவ்வொரு நபரும் மற்றும் அந்த நிறுமமும் கூட அக்குற்றத்தைப் புரிந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோட, அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரையும், இந்தக் குற்றமானது தமக்குத் தெரியாமலேயே புரியப்பட்டது என்றோ அல்லது அத்தகைய குற்றம் புரியப்படுவதைத் தடுப்பதற்கான உரிய முயற்சி அனைத்தையும் தாம் மேற்கொண்டார் என்றோ அவர் மெய்ப்பிப்பாரானால், தண்டனை எதற்கும் உள்ளாக்குதல் கூடாது.

(2) உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின்படியான குற்றம் ஏதேனும் ஒரு நிறுமத்தால் புரியப்பட்டிருந்து, அக்குற்றமானது அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடனோ அல்லது மறைமுக ஆதரவுடனோ புரியப்பட்டுள்ளது என்றோ அல்லது அவர் மீதான கவனமின்மை எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்றோ மெய்ப்பிக்கப்படும் நிலையில், அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலருங்கூட அக்குற்றத்தைப் புரிந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு, அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளதாலும் வேண்டும்.

விளக்கம்: இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,

(a) ''நிறுமம்'' என்பது, கூட்டமைப்பு எதுவும் எனப் பொருள்படும் என்பதோடு, நிறுவகம் ஒன்றையோ பிற தனி நபர்களின் கழகத்தையோ உள்ளடக்கும் மற்றும்

(b) ஒரு நிறுமம் தொடர்பாக ''இயக்குநர்'' என்பது அந்நிறுமத்திலுள்ள ஒரு கூட்டாளி எனப் பொருள்படும்.

17. விதிகளை செய்வதற்கான அதிகாரம்: (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதையேனும் நிறைவேற்றுவதற்கு அரசு விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் முந்தைய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்கு ஊறின்றியும் விதிகள்

(a) இந்தச் சட்டத்தின் மூலம் வகுத்துரைக்கப்பட்ட வேண்டுமென்று வெளிப்படையாகக் கூறியுள்ள அல்லது அனுமதித்துள்ள எதுவும்;

(b) குழுத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரது பதவிக் காலம்

(c) குழு உறுப்பினர்களின் படித்தொகை அல்லது கட்டணங்கள்

(d) எந்த இடத்தில், எந்த நேரத்தில், எந்த முறையில் குழுவின் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

(e) விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலர், உதவி விளம்பரப் பொருட்கள் தணிக்கை அலுவலர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரின் பிற பணிகள்.

(f) விளம்பரப் பொருட்கள் தணிக்கைச் சான்றிதழுக்கான விண்ணப்பப் படிவம்.

(g) எந்த முறையில் விளம்பரப் பொருட்கள் அனுப்பப்பட வேண்டும்.

(h) விளம்பரப் பொருட்கள் தணிக்கைச் சான்றிதழ் ஒன்றைப் பெறுவதற்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணம்.

(i) எந்த படிவத்தில் மற்றும் எந்த முறையில் விளம்பரப் பொருட்கள் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

(j) பிரிவு 8இன் உட்பிரிவு (1)இன் கீழ் மேல்முறையீடு செய்ய வேண்டிய அதிகார அமைப்பு

(3) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டாலன்றி அவை எந்த நாளில் வெளியிடப்பட்டதோ அந்த நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை ஒரு குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டாலன்றி அவை எந்த நாளில் வெளியிடப்பட்டதோ அந்த நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத் தொடரோ அல்லது அதற்கடுத்த கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர் சட்டமன்றப் பேரவை அத்தகைய விதி அல்லது அறிவிக்கையில் மாறுதல் எதையேனும் செய்யுமானால் அல்லது அந்த விதியோ அறிவிக்கையோ செய்யப்படுதலோ பிறப்பிக்கப்படுதலோ கூடாது என்று சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அதன் பின்னர் அந்த விதியோ அறிவிக்கையோ அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப நடைமுறைக்கே வராதுபோதல் வேண்டும். எனினும், அவ்வாறு மாறுதல் செய்வது அல்லது அழித்தறவு செய்வது எதுவும், அந்த விதியின்படியோ அறிவிக்கையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கு ஊறின்றி இருத்தல் வேண்டும்.

18. காப்பு இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் ஏதொன்றுக்கும் கூடுதலாய் இருத்தல் வேண்டுமேயன்றி அதைக் குன்றச் செய்வதாய் இருத்தல் கூடாது மற்றும் இதில் அடங்கியுள்ள எதுவும் புலனாய்வு மூலமாகவோ அல்லது மற்றப்படியோ நபர் எவருக்கும் எதிராக பிற சட்டங்களின் கீழ் தொடுக்கக் கூடிய நடவடிக்கை எதிலிருந்தும் அவருக்கு விலக்களிக்காது.

**நன்றி: தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**


# சட்டக் கல்லூரிகள், வழக்கறிஞர் மன்றங்கள், சட்டப் பயிலகம், சட்டக் கதிரில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

தொடர்புக்கு

**E-mail: sattakadir1992@yahoo.co.in.**

# 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு உயிரோடு நபர் ஒருவரைப் புதைக்கும் சடங்கினையும் பழக்கத்தினையும் தடை செய்யும் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 44/2002)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

## The Tamil Nadu Prohibition of Rituals and Practice of Burying Alive of a Person Act, 2002

## (Tamil Nadu Act No. 44 of 2002)

## (as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2002ஆம் ஆண்டு திங்கள் 27ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது)

தமிழ்நாடு மாநிலத்தில் உயிரோடு நபர் ஒருவரைப் புதைக்கும் சடங்கினையும் பழக்கத்தினையும் தடை செய்வதற்கான ஒரு சட்டம்.

தமிழ்நாட மாநிலத்தில் வழிபாட்டு இடத்திலோ அல்லது அதன் சுற்றுப்புற இடங்களின் உள்ளோ உயிரோடு ஒருவரைப் புதைக்கும் செயல், பிற மனித உயிருக்கும் சொந்தப் பாதுகாப்புக்கும் ஆபத்து விளைவிப்பதாக இருப்பதாலும்.

உயிரோடு நபர் ஒருவரைப் புதைக்கும் அத்தகைய செயலைத் தடை செய்வது உகந்ததாக இருப்பதாலும்.

இந்தியக் குடியரசின் ஐம்பத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.

**1. குறுந்தலைப்பும் தொடக்கமும்** :

(1) இந்தச் சட்டம் 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு உயிரோடு நபர் ஒருவரைப் புதைக்கும் சடங்கினையும் பழக்கத்தினையும் தடை செய்யும் சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்** : இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி

(a) ‘‘புதைத்தல்’’ என்பது, நிலத்தினுள் அல்லது நிலத்தின் அடியில் எந்த வயதினருமான நபர் ஒருவரை கணநேரமாயினும் கண்ணுக்குப் புலனாகாதவாறு மூடி வைத்தல், ஒளித்து வைத்தல் அல்லது மறைத்து வைத்தல் எனப் பொருள்படுவதோடு அவற்றையும் உள்ளடக்கும்.

(b) ‘‘வழிபாட்டிடம்’’ என்பது, எந்தப் பெயராலும் அழைக்கப்பட்டு, இறை வணக்கம் செய்யும் இடமாக அல்லது வழிபாட்டிடமாகப் பயன்படுத்தப்பட்டு இறை வணக்கம் செய்யும் இடமாக அல்லது சமய வழிபாட்டிடமாக, சமயம், சமுதாயம் எதற்கும் அல்லது அதன் பகுதி எதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட அல்லது அதன் நலனுக்கான அல்லது அதனால் பயன்படுத்தப்படுகிற இடம் ஒன்றை உள்ளடக்கும்.

(c) ‘‘வழிபாட்டிடம் தொடர்பாக, சுற்றுப்புற இடங்கள் என்பது, வழிபாட்டிடத்திற்கு உள்ளேயோ வெளியேயோ நடத்தப்படும் வழிபாட்டுடன் தொடர்புடைய நோக்கங்களுக்காக வழக்கமாகப்

பயன்படுத்தப்பட்டு, வழிபாட்டிடத்தைச் சார்ந்ததாக இருப்பினும், இல்லாவிடினும், வழிபாட்டிடம் எதனின் அருகேயும் உள்ள நிலங்கள் மற்றும் கட்டடங்கள் அனைத்தையும் உள்ளடக்கும் மற்றும் குறிப்பாக, எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், அந்த வழிபாட்டிடத்தின் பின்பக்க இடத்தையும், முன்பக்க இடத்தையும் உள்ளடக்கும்.

**3. உயிரோடு நபர் ஒருவரைப் புதைப்பதைத் தடை செய்தல்** : நபர் எவரும் தெய்வம் எதனையும் அமைதிப்படுத்தும் நோக்கத்திற்காகவோ அல்லது உட்கருத்துடனோ அல்லது பிறவாறாகவோ வழிபாட்டிடம் எதிலும் அல்லது அதன் சுற்றுப்புற இடங்களில் சடங்கு அல்லது பழக்கம் என்ற முறையில்.

(1) உயிரோடு நபர் ஒருவரைப் புதைத்தல் கூடாது.

(2) உயிருடன் தாம் புதைக்கப்படுவதற்கு அனுமதித்தல் கூடாது.

**4. உயிருடன் நபர் ஒருவரைப் புதைப்பதை வழிபாட்டு முறையாக்குதல் முதலியவை தடை செய்யப்படுதல்**: நபர் எவரும் தெய்வம் எதனையும் அமைதிப்படுத்தும் நோக்கத்திற்காகவோ அல்லது உட்கருத்துடனோ அல்லது பிறவாறாகவோ வழிபாட்டிடம் எதிலும் அல்லது அதன் சுற்றுப்புற இடம் எதிலும் சடங்கு அல்லது பழக்கம் என்ற முறையில் நபர் ஒருவரை.

(a) உயிரோடு புதைப்பதை வழிபாட்டு முறையாக்குதலோ அல்லது வழிபாட்டு முறையாக்குவதற்கு முற்படுதலோ அல்லது

(b) உயிரோடு புதைத்தலோ அல்லது உயிரோடு புதைக்க முற்படுதலோ அல்லது

(c) உயிரோடு புதைக்கும் பணியைப் புரிதலோ அதற்கு உதவி செய்தலோ அல்லது அதில் பங்கேற்றலோ அல்லது இவற்றைச் செய்ய முற்படுதலோ கூடாது.

5. இடங்களில் நபர் ஒருவரை உயிரோடு புதைக்க அனுமதித்தலோ அல்லது புதைக்க அந்த இடங்களைப் பயன்படுத்தவோ கூடாது. நபர் எவரும்

(a) வழிபாட்டிடம் எதிலும் அல்லது அதன் சுற்றுப்புற இடத்தினுள் அமைந்துள்ள மற்றும்

(b) தனது உடைமையில் அல்லது தன் கட்டுப்பாட்டின் கீழுள்ள, இடம் எதிலும், சடங்கு அல்லது பழக்கம் என்ற முறையில் உயிரோடு நபர் ஒருவர் புதைக்கப்படுவதைத் தெரிந்தே அனுமதித்தல் கூடாது.

6. தண்டனை பிரிவுகள் 3, 4 அல்லது 5இன் வகைமுறைகளை மீறுகிற எவர் ஒருவரும், மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய ஒரு கால அளவிற்குச் சிறைத்தண்டனையோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத்தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**7. பிரிவுகள் 3, 4 அல்லது 5இன்படி தடை செய்யப்பட்ட செயல்களுக்கு உடந்தையாயிருத்தல்**: பிரிவுகள் 3, 4 அல்லது 5இன்படி தடை செய்யப்பட்ட செயல்களைச் செய்வதற்கு முயற்சி செய்கிற எவர் ஒருவரும் மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனையோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத் தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

9. பிற சட்டங்களின் செயற்பாட்டினைப் பாதித்தல் கூடாது. இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருக்குமேயன்றி, அவற்றை மதிப்புக் கூடாது.

10. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம் (1) மாநில அரசு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத் தொடர் அல்லது அதற்கு அடுத்த கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு, அப்பேரவை அத்தகைய விதி எதிலும் மாற்றமைவு எதனையும் செய்யுமாயின் அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்று அப்பேரவை முடிவு செய்யுமானால், அதன் பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் பெறும் அல்லது நிகழ்வுக்கேற்ப, செல்திறம் பெறாது போகும். எனினும், அத்தகைய மாற்றம் அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**நன்றி: தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

## செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியின் இடைக்கால நிர்வாகியாக தொழிலதிபர் விஜயகுமார் ரெட்டியை நியமித்து உயர்நீதிமன்றம் உத்தரவு

செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியை நிர்வகிக்க இடைக்கால நிர்வாகியாக தொழிலதிபர் பி.விஜய குமார் ரெட்டியை நியமித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சென்னையில் உள்ள பிரபலமான செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியை குமார ராஜா முத்தையா பாரம்பரிய கலை மற்றும் கைவினைப் பள்ளி சங்கத்தின் செயலாளராக பதவி வகித்த மீனா முத்தையா நிர்வகித்து வந்தார். இவர், கடந்த 2ஆம் தேதி காலமானார். இந்நிலையில், பிரபல தொழிலபதிபரான எம்.ஏ.எம்.ஆர். முத்தையா மற்றும் அவரது மனைவி கீதா முத்தையா உள்ளிட்ட பலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது.

செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியை நிர்வகிக்கும் பதிவு பெற்ற சங்கத்தின் செயலாளராக பதவி வகித்த மீனா முத்தையா, கடந்த மே 2ஆம் தேதி இறந்து விட்டதால், செயலாளர் பதவி காலியாக உள்ளது. மேலும், இச்சங்கத்தின் பொருளாளரும் தனது பதவியை ராஜினாமா செய்து விட்டார். இச்சூழலில் சங்க விதிமுறைகளை முறையாக பின்பற்றாமல் சங்க உறுப்பினர்களான கே.டி.ஆர்.ராஜா கருப்பன் செட்டி மற்றும் சி.சொக்கலிங்கம் ஆகியோர் தனிப்பட்ட முறையில், நிர்வாகக் குழு கூட்டத்தைக் கூட்டி புதிய செயலாளரை தேர்வு செய்ய முயற்சித்துள்ளார். இது சங்க விதிமுறைகளுக்கு எதிரானது என்பதால், இந்த விவகாரத்தில் உயர்நீதிமன்றம் தலையிட்டு தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கோரியிருந்தனர்.

நீதிபதி என்.செந்தில்குமார் முன்பாக இந்த மனு மீதான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் எம்.எஸ்.கிருஷ்ணன், வி.ராகவாச்சாரி, ஜெ.ரவீந்திரன் ஆகியோர் செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியின் செயல்பாடுகள் குறித்தும், சங்க விதிமுறைகள் குறித்தும் எடுத்துரைத்தனர்.

அதையடுத்து நீதிபதி என்.செந்தில்குமார் பிறப்பித்துள்ள உத்தரவில், செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியை நிர்வகிக்கும் சங்க விதிகளின்படி குறைந்தது 2 உறுப்பினர்கள் செயலாளரிடம் கோரிக்கை விடுத்த பின்னரே கூட்டம் கூட்டப்பட வேண்டும். இது தொடர்பாக, 7 நாட்களுக்கு முன்பாக தெளிவான முன்னறிவிப்பு வழங்கப்பட வேண்டும். சங்க செயலாளர் மரணமடைந்து விட்டார். பொருளாளர் தனது பதவியை ராஜினாமா செய்து விட்டார். இந்த அசாதாரண சூழலில், பொதுக்குழு கூட்டம் மூலமாகவே புதிய செயலாளர் மற்றும் பொருளாளரை தேர்வு செய்ய முடியும். எனவே, பொதுக் குழுவை கூட்டியே இந்த விவகாரங்களுக்கு தீர்வு காண வேண்டும் என தெரிவித்த நீதிபதி, அதுவரை பள்ளி நிர்வாகம் சீராக நடைபெற ஏதுவாக பிரபல தொழிலபதிபரான பி.விஜயகுமார் ரெட்டியை செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியின் இடைக்கால நிர்வாகியாக நியமித்து உத்தரவிட்டார்.

**நன்றி: இந்து தமிழ் திசை 17.5.2026**

## நரம்பியல் மருத்துவர் சுப்பையா கொலை வழக்கில் திருப்பம் அனைத்து குற்றவாளிகளுக்கும் ஆயுள் விடுதலையை ரத்து செய்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு

நரம்பியல் மருத்துவர் சுப்பையா கொலை வழக்கில், தண்டனை விதிக்கப்பட்ட 9 பேரையும் விடுதலை செய்து சென்னை உயர்நீதிமன்றம் மிகப் பெரிய தவறிழைத்துள்ளது. அவர்கள் அனைவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிரபல நரம்பியல் மருத்துவர் சுப்பையா, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்த நிலப்பிரச்சினை தொடர்பாக சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் கடந்த 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் அரசு பள்ளி ஆசிரியர் பொன்னுச்சாமி, அவரது மகன்கள் வழக்கறிஞர் பாசில், பொறியாளர் போரிஸ் மற்றும் வில்லியம், மருத்துவர் ஜேம்ஸ் சதீஷ்குமார், பொறியாளர் முருகன், செல்வபிரகாஷ் ஆகிய 7 பேருக்கு மரண தண்டனையும், பொன்னுச்சாமியின் மனைவி மேரி புஷ்பம் மற்றும் கூலிப்படையைச் சேர்ந்த கபடி வீரர் ஏசுராஜன் ஆகியோருக்கு இரட்டை ஆயுள் தண்டனையும் விதித்து சென்னை அமர்வு நீதிமன்றம் கடந்த 2021ஆகஸ்ட் மாதம் தீர்ப்பளித்தது.

இந்த தண்டனையை எதிர்த்து அனைவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இதை விசாரித்த நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு, கடந்த 2024 அன்றுபிறப்பித்த தீர்ப்பில், “இந்தக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 9 பேருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களைக் காவல் துறை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கத் தவறி விட்டது எனக் கூறி மரண தண்டனை விதிக்கப்பட்ட 7 பேர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 2 பேர் என 9 பேருக்கும் கீழமை நீதிமன்றம் விதித்த தண்டனையை ரத்து செய்து உடனடியாக விடுதலை செய்ய உத்தரவிட்டனர்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசு தரப்பிலும், கொலை செய்யப்பட்ட மருத்துவர் சுப்பையாவின் மனைவி சாந்தி தரப்பிலும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், சதீஷ் சந்திரசர்மா ஆகியோர் அடங்கிய அமர்வு 19.5.2026 பிறப்பித்துள்ள தீர்ப்பில் கூறியிருப்பதாவது.

பிரபல நரம்பியல், மருத்துவர் சுப்பையா கொலையில், மேல்முறையீட்டு வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் முறையாக விசாரிக்கவில்லை. சாட்சியங்களை ஆய்வு செய்யாமல் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்து மிகப் பெரிய தவறிழைத்துள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தின் இத்தகைய தீர்ப்பு கடும் அதிருப்தி அளிக்கிறது.

பட்டப்பகலில் நடந்த இந்தக் கொலை வழக்கை விசாரித்த கீழமை நீதிமன்றம், அதன் நோக்கத்தையும், பின்னணியையும் ஆராய்ந்து சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்களைக் கவனத்தில் கொண்டுதான் குற்றம் சாட்டப்பட்ட 7 பேருக்கு மரண தண்டனையையும், 2 பேருக்கு இரட்டை ஆயுள் தண்டனையையும் விதித்துள்ளது. அதைக் கூட உயர்நீதிமன்றம் முறையாக கவனத்தில் கொள்ளாதது துரதிருஷ்டவசமானது. அனைவரையும் கூண்டோடு விடுதலை செய்து உயர்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு சட்டப்படி ஏற்புடையதல்ல. எனவே, அந்தத் தீர்ப்பை நாங்கள் ரத்து செய்கிறோம். சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அனுமதித்தால் அது தவறான நடைமுறைக்கு வழிவகுத்து விடும்.

மனிதனின் பேராசை எந்த எல்லைக்கும் செல்லும் என்ற ரவீந்திரநாத் தாகூரின் வரிகளுக்கு இந்தக் கொலை வழக்கு சிறந்த உதாரணம். தான் பெற்ற பிள்ளைகளைப் பெற்றோர் எப்போதும் நேசிப்பார்கள். பாசத்தின் மிகுதியால் வயதான காலத்திலும் அவர்கள் செய்யும் செயல்கள் நல்லதா, கெட்டதா என்பதை ஆராயாமல் அவர்களை எதிர்த்து கேள்வி கேட்பது இல்லை. இந்த வழக்கில் பொன்னுச்சாமியும், அவரது மனைவி மேரி புஷ்பமும் தங்களது மகன்களுடன் இணைந்து சதியில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அவர்களின் குற்றச் செயல்களை மன்னிப்பதாகக் கருத்தில் கொள்ளக் கூடாது. மனிதர்களின் செயல்பாடுகளைக் கோடிட்டு காட்டுகிறோம்.

இந்தக் கொலை வழக்கில் குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை சரியானதுதான் என்பதை நிரூபிக்கும் வகையில் தமிழக அரசு அழுத்தம் கொடுத்து வாதிடவில்லை. எனவே, அந்த 7 பேருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை நாங்கள் ஆயுள் தண்டனையாகக் குறைக்கிறோம். அதேநேரம் கீழமை நீதிமன்றம் விதித்த அபராதம் செல்லும். பொன்னுச்சாமியும், அவருடைய மனைவி மேரி புஷ்பமும் தமிழக ஆளுநரிடம் மன்னிப்பு கோரும் மனுவைத் தாக்கல் செய்ய அனுமதிக்கிறோம்

அவர்களின் மன்னிப்பு மனுவை பரிசீலிக்கும்படி ஆளுநரையும் கேட்டுக் கொள்கிறோம். ஆளுநர் பரிசீலிக்கும் வரை அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைக்கிறோம். எனவே விடுதலையாகி வெளியே உள்ள பொன்னுச்சாமி, மேரி புஷ்பம் தவிர எஞ்சிய 7 பேரும் 2 வாரங்களில் விசாரணை நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும். இவ்வாறு உச்சநீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

**நன்றி: இந்து தமிழ் திசை 20.5.2026**


THINK AHEAD. STAY AHEAD.
Bharath
UNIVERSITY
30 YEARS OF EXCELLENCE
RATING AA+
பாரத் பல்கலைக்கழகம்
B.TECH
AERONAUTICAL ENGINEERING
AUTOMOBILE ENGINEERING
BIO-PROCESS ENGINEERING
BIO-INFORMATICS
BIO-MEDICAL ENGINEERING
CHEMICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
COMPUTER SOFTWARE ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
ELECTRONICS AND CONTROL ENGINEERING
ELECTRONICS AND INSTRUMENTATION ENGG.
ELECTRONICS AND TELECOM ENGINEERING
FOOD PROCESS ENGINEERING
GENETICS ENGINEERING
INDUSTRIAL BIO-TECHNOLOGY
INFORMATION TECHNOLOGY
INSTRUMENTATION AND CONTROL ENGG.
MECHANICAL ENGINEERING
MECHATRONICS
NANO TECHNOLOGY
PRODUCTION TECHNOLOGY
B.ARCH Eligibility : As per Council of Architecture norms
M.TECH
[For Program details, please visit: www.bharathuniv.ac.in ]
EVENING PROGRAMME : B.TECH & M.TECH
MECHANICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
B.TECH LATERAL ENTRY ALL PROGRAMME
Eligibility : Diploma / B.Sc.
M.S. BY RESEARCH AND Ph.D.
All Disciplines Full time and Part time
INTEGRATED PROGRAMME
B.TECH + MBA - 5 Years and B.TECH + M.TECH - 5 Years
MBA
[ Full time and Part time ]
MCA
HOTEL MANAGEMENT & CATERING
Courses : Diploma, B.Sc., & MBA
PLACEMENT 100%
1st among the participants from 125 Countries in International competition on Robotics
Job Placements : 100% with the highest salary package of ₹10 L. P.A.
Collaborations with R&D Institutions and Industries like IBM, Nokia, CISCO, SAP, Etc.,
Internationally acclaimed curriculum in tune with global trends.
Scholarships worth ₹12.00 crores to the meritorius students
27 Centers of excellence to promote research and industry aided / driven projects
SCHOLARSHIP (TUITION FEES GRANT) ■ 100%-State Toppers of all Boards ■ 50%-School toppers, participated in National Level Sports Competition / Event ■ 30%-Students having participated in State Level Sports Competition / Event ■ 35%-Students securing 90% above Marks in the Board examinations ■ 25%- "SARVA SIKSHA" Scheme I Scheduled Caste / Scheduled Tribe candidate I Parent being an Ex-servicemen I Physically Handicapped candidate I First Graduate candidate
HOW TO APPLY: Application forms can be obtained: In person or by sending a Demand Draft for ₹ 750/- drawn in favor of "Bharath University", payable at Chennai, to the Dean-Admission, Bharath University. ■ Application forms can also be downloaded from our website and filled in forms should be sent to the University address along with DD of ₹ 750/-. Eligibility : As per UGC/AICTE norms.
BHARATH UNIVERSITY, 173, Agharam Road, Selaiyur Tambaram, Chennai 600 073. Ph 044-22290247
Corp. Off: 1, First Main Road, Kasturibai Nagar, Adyar, Chennai 600 020. Ph 044-42115251 / 91-98410 64199
Apply online : www.bharathuniv.ac.in
ADMISSION HELPLINE
1800-419-1441
Check us out on YouTube www.youtube.com/thebharathuniversity
BY REGISTRAR

Posted at Egmore RMS. Partrika Channel Registered News Magazine Posted on 3rd to 9th of June 2026
SATTAKADIR - Tamil Law Journal /Monthly June 2026 / Publication First Week of Every month.
Registration of News Papers for India, Reg. No. 62767/92
Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026



சட்டக்கதிர் ஆசிரியர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் அவர்களுக்கு பட்டுக்கோட்டை கலியாண சுந்தரனார் விருது வழங்கப்பட்டது. விருதினை திரைப்பட நடிகர் திரு.விஜயகுமார் அவர்கள் வழங்க திரு. நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சி அமைப்பாளர் திரு.ரூஸ்வெல்ட் உடனிருந்தார்.



பட்டயக் கணக்காளர் திரு.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் எழுதிய தயாரித்த 'தொண்டு நிறுவனங்களுக்கான சட்டமும் வரிச் சலுகையும்' என்ற நூலினை சட்டக்கதிர் ஆசிரியர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் அவர்களுக்கும் கயானா நாட்டுக்கான முன்னாள் இந்திய தூதர் திரு.மகாலிங்கம் அவர்களுக்கும் மொரிஷியஸ் நாட்டில் உள்ள அட்டல் பிஹாரி வாஜ்வாய் பயிற்சி நிறுவனத்தினுடைய இயக்குநர் டாக்டர் குமரேசன் ராஜா அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார்.

On behalf of SATTAKADIR, Published at 3/2, Swathiram Towers, Jupiter Campus,
3, Durgabai Deshmukh Road, R.A. Puram, Chennai - 600 028. Printed by I. Stephen,
Printed at Canaan Press Pvt. Ltd., 62/1, Peters Road, Royapettah, Chennai - 600 014.
**Editor : Dr. V.R.S. Sampath**